521

பார்வதி

"PARVATI," TAMIL MONTHLY. MADRAS 2. JUNE. 1950 As. 8

குதூகல ஆரம்ப விழா !

சென்னை - காசினோ, மஹாராணி

ஜூன் 2 முதல்

வெள்ளித்திரையில்........
இதுவரைக் கண்டிராத
விறுவிறுப்பான
சம்பவங்கள் நிறைந்த
உல்லாசச் சித்திரம்....

J. ARTHUR RANK'S

நீலக் கடல்

அல்லது

சமுத்திர சுந்தரி

முதல் தமிழ்
டெக்னிக்கலர் படம்



ஈகில்-லயன் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் (இந்தியா) லிட்.,
"கலில் மான்ஷன்ஸ்" - 35, மவுண்ட் ரோட் - சென்னை - 2

மற்றும்

பெங்களூர் - சூபர், ஸ்ரீ
கோவை - ராயல்
மதுரை - நியூ சினிமா
சேலம் - அம்பிகா
திருநெல்வேலி - ராயல்
முதலிய இடங்களில்

மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரித்த...
மந்திரி
குமாரி
காதலும்
கருத்தும்
நிறைந்த
அருமையான
கதை...
விரைவில்
வருகிறது.....
மாதுரிதேவி · சகுந்தலா ·
எம்.ஜி. ராமச்சந்தர் ·
நடராஜன் · நம்பியார் நடித்தது
நடனம் —
லலிதா · பத்மினி · ராகினி
& வனஜா ·
டைரெக்ஷன்
டி. ஆர். சுந்தரம் &
எல்லிஸ் ஆர். டங்கன் ·
கதை, வசனம் - கருணாநிதி

மோஹன் பிரதர்ஸ் தயாரிக்கும்

மூன்று இரத்தினங்கள்

மெடிகோ

டாய்லட் சோப்

காஜாஸி

சந்தன சோப்

காஜாஸி

டாய்லட் சோப்

மணம் குணம் இரண்டிலும் சிறந்தவை

தயாரிப்பவர்கள் :

P. B. மோஹன் பிரதர்ஸ்

மதராஸ்—15.

இவ்வருஷத்திய தலை சிறந்த படம்

பாஞ்சோலி புரொடக்ஷன்ஸாரின்

மீனா பஸார்



மற்றும் பலர் நடித்தது

தமிழ்நாடு மலபார் முதலியவைகளுக்கு

சோல் டிஸ்ட்ரிபூயூட்டர்ஸ்

ஷராப் - பிலிம்ஸ்

20, வேங்கடாசல முதலி தெரு, பி. டி. மதராஸ்

உங்கள் வரவு நல் வரவாகுக!

சென்னைக்கு
எப்பொழுது வருகிறீர்கள்?

*

வரும்பொழுது அவசியம்
நமது ஸ்டுடியோவுக்கு
விஜயம் செய்யுங்கள்.

*

போட்டோ படம் எடுப்பதில்
சென்னையில் பிரக்யாதி
வாய்ந்த ஸ்டுடியோ
இது ஒன்றே.

*

போட்டோ என்லார்ஜ்
மெண்ட், கலர்
என்லார்ஜ்மெண்ட்,
ஆயில் பெயிண்டிங் முதலிய
வைகளில் மிகவும்
தேர்ச்சி வாய்ந்தவர்கள்

பாரத் ஸ்டுடியோ

மதராஸ்-2.

பிளாக்குகள்

லைன்-ஆப்டோன்-
கலர் பிளாக்குகள் தயாரிக்க
இன்றே எழுதுங்கள்.

*

பத்திரிகைகளுக்கும், புத்தகம்
வெளியிடுவோர்களுக்கும்,
விளம்பர ஏஜெண்டு
களுக்கும் தனிச் சலுகைகள்
உண்டு.

*

பாரத் ஸ்டுடியோ

பிராஸஸ் டிபார்ட்மெண்ட்
போன் 8172
மதராஸ்-2.

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

கெருடாலயத்தெரு,

கும்பகோணம்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில்
மெடல் & சர்ட்டிபிகேட் பெற்றவர்
கள் உத்திரவாதமுள்ள சாயமும்,
கவர்ச்சிமிக்க
பார்டர்களும் உடைய

பட்டு & நூல் ஜவுளி
உற்பத்தியாளர்

வியாபாரிகளுக்கு விலை
சகாயமாய் கிடைக்கும்

பிராஞ்சு :—
20 லெட்சுமிபுரம்
2-வது தெரு, மதுரை.

கல்யாண ஸீஸனுக்கென்றே, பெங்
களூர், காஞ்சீவரம், கும்பகோணம்
பட்டுச் சேலைகள் ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.
தேவைக்கு
உடனே விஜயம் செய்யுங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடாலயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—

மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

BHARAT STUDIO

ARTISTS PHOTOGRAPHERS & BLOCK MAKERS

SPECIALISTS IN

POSTERS BANNERS
SLIDES SHOWCARDS

THEATRE DECORATIONS
CUT-OUTS ETC.



Make-up Test
STILLS
AND PHOTOGRAPHS OF EVERY DESCRIPTION

COLOUR-HALFTONE
& LINE PROCESS
BLOCK MAKING
ETC.



PHONE: 8172

MOUNT ROAD, MADRAS. 2

பார்வதீ

தமிழ் மாத இதழ்

ஆசிரியர் - பிரசுரகர்த்தர் :
வே. நமசிவாயம்

படப்பிடிப்பு :
வே. தாண்டவம்
தா. ஜேசுதாஸ்

சித்திரம் :
வே. நமசிவாயம்
க. மோகனகிருஷ்ணன்
த. கெஜானந்தம்
'ராமு'

மேக் - அப் :
ரா. பரத்வாஜ்
டி. வேணுகோபால்

அரங்க அமைப்பு:
எம். எஸ். கருப்பையா

தயாரிப்பு:
பாரத் ஸ்டூடியோ

'பார்வதி' பாரத் ஸ்டுடியோ வின் தயாரிப்பாக, பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதியன்று வெளியாகிறது.

காரியாலயம் :
2/11, மவுண்ட் ரோட், சென்னை-2
போன் : 8172

வருடச் சந்தா :

உள்நாடு	6—0—0
வெளிநாடு	7—8—0

தனிப்பிரதி
உள்நாடு அணா 8
வெளிநாடு அணா 10

கலை 1 } அகவிருள் அகற்றி அருளொளி வீசுக { சித்திரம் 6

விக்ருதி ௵ ஆனி : ஜூன், 1950

பொருள் அடக்கம்

நமஸ்காரம்	....	8
இன்பவண்டு	சுத்தானந்தபாரதியார்	9
ஒற்றன்	எஸ். டி. சீனுவாசன்	10
அவன் தியாகம்	'பி. வி. ஆர்.'	17
அருட்பெருஞ்ஜோதி	'பல்குநன்'	22
அட்டைப்பட விளக்கம்	....	24
பிராயச்சித்தம்	அநுத்தமா	25
அர்த்தநாரி	'தாசு'	31
மன்னிப்பு	கோமதிஸ்வாமிநாதன்	34
மாயன் புகழ்	அமரகவி பாரதியார்	40
ஸத்யா	'மாயாவி'	42
சௌபாக்கியவதி [பாலர் கதை]	மாமு	49
அதிசயம்	ய. லக்ஷ்மிநாராயணன்	52
கலை அரங்கம்	....	56
'பார்வதி பகுத்தறிவுப் போட்டி—4 (முடிவு)	....	66
பார்வதி பகுத்தறிவுப் போட்டி—5	....	67

'பார்வதி'யில் வெளியாகும் கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே ; அவை யாரையும் குறிப்பிடா. படத்தில் தோன்றும் நடிகர்களுக்கும் கதைகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது.

நமஸ்காரம்

உலகம் முழுமையும் அன்பு நெறி பரவி இன்புற்றிருக்கவும், மானிட வாழ்வு நன்னெறி சேர்ந்து நலம் பெற்று வளரவும், சமரச சன் மார்க்கமொன்றே வழிகாட்டும் என்று வகுத்துச் சென்ற வள்ளலாரின் 'அருட்பெருஞ்ஜோதி'க் கட்டுரை அனேகருடைய பாராட்டுதலுக்கு உரித்தாயுள்ளதுபற்றிப் பெரிதும் மகிழ்கிறோம். தெய்வ நம்பிக்கையென்னும் தன்னம்பிக்கையை மனித குலம் இழந்துவிடக்கூடாதென்றும், இதற்கு இத்தகைய கட்டுரைகள் அவசியம் என்று வற்புறுத்தியும் பலர் எழுதியுள்ளனர். 'பார்வதி' ஆரம்பமான காலத்திலேயே எங்களுக்கு இம் மாதிரி அருள்நெறி விஷயங்களை எழுதுவதற்கான நோக்கம் உண்டு. ஆயினும் சமீபத்தில் நடைபெற்ற வள்ளலாரின் சத்திய ஞானசபை திறப்பு விழாவுக்குப் பிறகுதான் இந்த நோக்கப்படி எழுதவேண்டுமென்பது தெய்வத் திருவுள்ளம் போலும்; இவ்விதழிலும் அருட்பெருஞ்ஜோதிக் கட்டுரை தொடர்ந்து வளர்கிறது. இந்தத் தொடர் கட்டுரை அன்பர்கள் பலருடையஆவலைப் பூர்த்திசெய்யும் என நம்புகிறோம்.

* * *

"'பார்வதி' இன்றைய தமிழ்ப் பத்திரிகையுலகத்தில் உன்னதமான ஸ்தானம் அடைந்துள்ளது. இவ்வளவு சீக்கிரத்தில் தமிழ் நாட்டு இலக்கிய ரஸிகர்களின் ஆதரவைப்பெற்று அபிமானப் பத்திரிகையாகிவிட்ட 'பார்வதி'யில் இன்னும் இரண்டொரு கதைகளைச் சேர்த்து வெளியிடக் கூடாதா" என்று ஒரு அன்பர் நமக்கு எழுதிக்கேட்டிருக்கிறார். இந்த அன்பர் வேண்டுகோள் பல அபிமானிகளின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பதாகவே நாம் கருதி இவ்விதழில் கதைகளின் எண்ணிக்கையைப் பெருக்கியுள்ளோம். எல்லாக்கதைகளையும், எல்லா அம்சங்களையும் முதல்தரமானதாகத் தருவதே எங்களுடைய பேரவா; இவ்விதழில் அன்பர் 'மாயாவி' எழுதியுள்ள 'ஸத்யா' நம்மை விக்கிரமாதித்தன் காலத்துக்கு அழைத்துச் சென்றுவிடுகிறது. அந்த முப்பத்திரண்டு பதுமைகள் சொல்லுகிற ரீதியிலேயே ஸத்யவதியும் ஒரு கதையை வெகு சுவாரஸ்யமாகச் சொல்லும்படி சிருஷ்டித்திருக்கிறார். எத்தனையோ வருஷங்களுக்கு முன்னர் நடந்ததானாலும், வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்ட ஒரு சம்பவத்தை யார்தான் மறக்க முடியும்? ஆனால் கோமதி ஸ்வாமிநாதன் எழுதியுள்ள கதையின் கதாநாயகன் மறக்க மட்டும் அல்ல, மன்னிப்பு அளிக்கவும் துணிந்து விடுகிறான்.

* * *

'அவன் தியாகம்' ஒரு உயர்தர உணர்ச்சிச் சித்திரம். மனோதத்துவ ரீதியில் இது சஹஜமாக நடைபெறக்கூடியதல்ல. இதேமாதிரிதான் இன்னொருவகையில் நம்மைப் பிரமிக்க வைக்கிறது 'ஒற்றன்' கதை. கடமையைச் செய்வதில் தாய் காட்டும் உணர்ச்சி ஒப்பற்றது. செயலோ ஈடுசெய்ய முடியாதது. தன் சகோதரியின் அபிலாஷை நிறைவேறவில்லை என்பதற்காக எப்பேர்க்கொத்த காரியத்தைச் செய்யத் துணிகிறாள் சுசீலா? ஆனால் அவள் கழிவிரக்கம் கொண்டு தானாகவே செய்துகொண்ட 'பிராயச்சித்தம்', நம்மை உருக்கிவிடுகிறது. காதலிலே எத்தனை வகையுண்டு? காதலா, காமமா என்றெல்லாம் சர்ச்சை செய்பவர்களுக்குச் சுந்தர மூர்த்திக் குருக்களின் வாழ்க்கை நடைமுறையே ஒரு 'அதிசயம்'தான். குழந்தைகள் பகுதியிலும் சோடையில்லாத அமைப்பில் 'சௌபாக்கியவதி' வந்துள்ளது.

* * *

'பார்வதி'யின் சென்ற இதழிலேயே தொடர் கதை பற்றிய விவரம் அறிவிப்பதாக எழுதியிருந்தீர்களே. இன்னும் காணோமே, என்று ஒரு அன்பர் எழுதியுள்ளார். இங்கு ஒரு விஷயம் நாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சிறந்த கதையைத் தெரிந்தெடுப்பதிலும் அதற்கான படங்களைத் தயாரிப்பதிலுள்ள சிரமமும்தான் இந்தத் தாமதத்துக்குக் காரணம். ஆனால் இந்த இதழில்கூட உங்களைச் சோதிக்க விரும்பவில்லை! "காமேச்வரி" என்னும் சரித்திர சம்பந்தமான ஒரு சிறந்த நாவல் அடுத்த இதழிலிருந்து வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்த நாவலை எழுதுபவர் ஏற்கனவே பல நாவல்களை எழுதி உங்கள் அபிமானம் பெற்றவரான ஸ்ரீ ய. லக்ஷ்மி நாராயணன் என்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்ளுகிறோம். படித்துப் பாராட்டுவதும், மகிழ்வதும் உங்களைச் சார்ந்த விஷயமாயிருக்கும் போது, மேற்கொண்டு இதை விவரிப்பானேன்?

நமஸ்காரம்.

ஆசிரியர்

இன்பவண்டு

இன்பமே வாழ்வின் இயற்கையாம்—ஆம்
என்றிசைப்போம் கலை வண்டுகாள்
துன்பமெல்லாம் ஒரு சூழ்ச்சியாம்—மனந்
துணிந்தவர்க் குலகமே சொர்க்கமாம்.

காலைக் கதிர்களைக் கொஞ்சுவோம்—பூத்த
கமல மலர்களைக் கொஞ்சுவோம்
சோலைக்குயிலிசை கொஞ்சிடும—இந்தச்
சுந்தரத் தென்றலைக் கொஞ்சுவோம்.

பாட்டுக்கு நல்ல கனவுபோல்—கலைப்
பண்புக்கு நல்ல நினைவுபோல்
வீட்டுக்கு நல்ல விளக்குபோல்—நம்
விருப்புக்கு நல்லது காதலே.

கண்ணுக்குச் செங்கதிர் போலவே—இளங்
கட்டழகிற் கின்பக் காதலாம்
பெண்ணுக் குயிரான ஆணமையாம்—நல்ல
பெட்புக் குயிரான கேண்மையாம்.

உள்ளமும் உள்ளமும் நாடியே—அங்கே
உள்ளதை உள்ளாரக் கூடினால்
வெள்ளமும் துள்ளும் அலைகளும்—போல
விண்ணின்பம் பொங்கிடும வாழ்விலே.

இன்பமே எந்நாளும் துன்பில்லை—என்ற
இனிய தமிழ்மறை ஓதுவோம்
அன்பிருந்தால் இந்த மானிடம்—பர
மானந்தக் கற்பக மாகுமே.

யோகி சுத்தானந்த பாரதியார்



ஒற்றன்

கடமைக்கும், அன்புக்கும் இடையே இங்கு ஒரு மகத்தான போராட்டம் நடக்கிறது. பெற்றதாய் கடமையை நிறைவேற்றுவதற்காக எப்பேர்க்கோத்தத் தியாகம் செய்யத் துணிந்துவிடுகிறாள்? யாருடைய உயிருக்கு உலைவைக்கிறாள்? தன் மகனுக்கே அல்லவா! நமனாய் மாறிவிட்டாள் அவள்!......இந்திய சரித்திரத்திலே இம்மாதிரி எத்தனையோ வீராங்கனைகள் உண்டு என்பதற்கு உஷாதேவி ஒரு உதாரணம்.

"உஷா! இனி தாமப்பதில் பிரயோஜனமில்லை! சீக்கிரம் புறப்படு......" என்றான் மோஹன்சிங். அவன் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்வது போல் இருந்தது தூரத்தில் கேட்ட வெடிகுண்டு சப்தம்.

உஷா மீண்டும் ஒருதரம் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையைப் பார்த்தாள். அடுத்த கணம் அவள் மோஹன் சிங்கை நோக்கினாள். அவள் பார்வையின் அர்த்தத்தை அவன் புரிந்துகொண்டு விட்டான்.

"உஷா! நாம் எங்கு போவோமோ, எப்படி வாழ்வோமோ? இதைப்பற்றி இப்போது திட்டமாக ஒன்றும் சொல்லமுடியாது.......... இப்படி இருக்க, நாம் போகுமிடமெல்லாம் குழந்தையையும் எடுத்துக்கொண்டு போவது என்பது சாத்தியமான காரியமல்ல....அதோடு நமக்கு என்ன ஆபத்து நேர்ந்தாலும் பரவாயில்லை; அதற்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், பின் நமக்கு நேர்ந்த கொடுமைக்குப் பழிக்குப்பழி வாங்க யார் இருப்பார்கள்?...."

உஷா மறுபடியும் ஒருமுறை குழந்தையைப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் ததும்பியது.

எஸ். டி. சீனுவாசன்

"பின் அதன் கதி?......" என்ற சொற்கள் அவள் வாயிலிருந்து வெளி வந்தன.

மோஹன் சிங் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டான். "உஷா! நான் வேறு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். விடு! தாரா அதை எடுத்துக்கொண்டு போய் வளர்த்து நம்முடைய ராஜ்யத்தை திரும்பப் பிடித்துக்கொண்ட பிறகு அவனை நம்மிடம் ஒப்படைப்பாள்.......... இதுதான் சரியான யோசனை" என்றான்.

இதற்குள் தாராவே அங்கு வந்துவிட்டாள்.

உஷா தொட்டிலில் இருந்த தன் குழந்தையை எடுத்தாள். அதன் கன்னங்களில் மாறிமாறி முத்தமிட்டாள்.. அதை மெதுவாகத் தாராவிடம் கொடுத்துக்கொண்டே, "தாரா! இவன் தான் எங்கள் குல விளக்கு! இவனைக் காப்பாற்றிப் பெரியவனாக்கி, எங்களுக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழிக்குப்பழி வாங்கச் செய்வது உன் பொறுப்பு.. தாரா! நான் வருகிறேன் என்றாள். இதைச் சொல்லும் போதே அவள் குரல் தழுதழுத்தது. தன் செல்வப் புதல்வனை விட்டுப் பிரியப் போகிறோமே என்ற துக்கம் நெஞ்சை அடைத்தது.

அச்சமயத்தில் அங்கு ஒரு சேவகன் வந்தான். "அரசே! சுரங்கவாயிலின் வெளிப்புறத்தில் தங்களுக்காக பல்லக்குத் தயாராய் இருக்கிறது....பகைவர் நம் கோட்டையை நெருங்கி விட்டனர்...... என்றான்.

மோஹன்சிங் உஷா தேவிக்கு ஏதோ சமிக்ஞை செய்ய அவளும் தாரா கையில் இருந்த தன் குழந்தை யைத் திரும்பித் திரும் பிப் பார்த்துக் கொண்டே மோஹன் சிங்கு டன் புறப்பட் டாள்.

* * *

மதவெறி கொண்ட அவு ரங்கசீப் ஹிந்துக் கோயில்களை இடி த்து, ஹிந்து ராஜ்யங்களை மண் ணோடு மண்ணாக் கிய காலம் அது. இராஜ புத்திர அரசர்க ளெல் லாம் கொதித்து மொகலாய ஆட் சிக்கு விரோத மாக எழுந்து கலகம் செய்த னர். மீவார், மார்வார், உதய புரி போன்ற பெரிய இராஜ் யங்க ளெல்லாம் முகம்மதியர் ஆட் சியில் சிக்கின. அவுரங்க சீப்பை எதிர்த்து நின்று போராடிய பல சிறிய அரசர் களில் சிம்மபுரி ராணா மோஹன் சிங்கும் ஒருவன். சிம்மபுரி சைனி யம்எவ்வளவோ வீராவேசத் துடன் தான் போர் புரிந்தது. ஆயினும்

மொகலாயரின் பீரங்கிப் படையை எதிர்த்து நிற்கமுடியவில்லை. கோட்டை மதிற் சுவர்கள் பீரங்கித் தாக்குதலால் தகர்ந்து விழுந்தன.

கோட்டை வாயில் கதவுகளும் தகர்த்து எறியப்பட்டன. விரோதிகள் சிம்மபுரிக்குள் நுழையும் சமயம். மோஹன்சிங் மேலும் போர் செய்வதில் பயன் இல்லை என்பதை உணர்ந்தான். பேசாமல் ரகசியமாக சுரங்க வழியின் மூலம் வெளியே சென்று சிறிது காலம் தலைமறைவாக இருந்து, சிதறுண்டு கிடந்த இராஜபுத்திரர்களை ஒன்று திரட்டி ஒரு புதுத் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டு தன் மனைவியுடன் ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டான்.

அவர்கள் சிம்மபுரியைவிட்டு புறப்பட்ட நேரம், அந்த நாட்டுக்குப் போதாக் காலம் என்று சொல்லிவிடலாம். ஏனென்

றால் மோஹன்சிங்கும் உஷாதேவியும் சுரங்க வழியாகத் தப்பிச் சென்ற அரை மணி நேரத்துக்கெல்லாம் பகைவர் அரண் மனையை வளைத்துக்கொண்டு அதற்குத் தீ வைத்துவிட்டனர். நல்ல வேளை! இதற்குள் தாரா இளவரசனுடன் எப்படியோ ஊரைவிட்டு வெளியேறிவிட்டாள். இராஜ புதனத்தின் ஜோதியாய் விளங்கிய சிம்மபுரி ஓர் இரவிற்குள் தரைமட்டமாகியது.

இளவரசனை எடுத்துச் சென்ற தாரா காடுகளை அடுத்தாற் போல் இருந்த ஒரு கிராமத்தில் குடியேறி, அவனை வளர்த்துக் கொண்டு வந்தாள். அந்தக் குழந்தையின் வரலாறு அக்கம் பக்கத்திலிருந்தவர்களுக்குத் தெரியாதிருக்க வேண்டும் என்பதற்காக எல்லோரிடமும் அவள் அதைத் தன் குழந்தை என்றே சொல்லி வந்தாள். அவனைப் பெரியவனுக்கி அவனுடைய பெற்ருேர் செய்யும் பெரிய பொறுப்பு தன் பெற்ருேர்கள் இழந்த ராஜ்யத்தைத் திரும்ப அவன் பிடிக்கும்படி செய்யும் பெரிய பொறுப்பு தன் மேல் சுமத்தப்பட்டிருப் பதை அவள் ஒரு நிமிஷமும் மறக்கவில்லை.

நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. இள வரசனுக்குச் சுமார் மூன்று வயதிருக்கும். ஒருநாள் அவன் குடிசையில் ஒரு பாயில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். தாரா குடிசைக் கதவைச் சாத்திக்கொண்டு, அடுப் பெரிக்க சுள்ளிகளைச் சேகரித்து வருவதற் காகக் காட்டிற்குச் சென்றிருந்தாள்.

அவள் கைகள் சுள்ளிகள் சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனவே தவிர அவள் உள்ளம் இளவரசனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. அதோடு சில நாட் களாக மொகலாயப் படைகளின் நடமாட்டம் அதிகமாக விருந்ததால் அந்தப் பிராந்தி யத்தில் இனி அபாயமின்றி வாழ்வதே முடியாது போல் தோன்றியது அவளுக்கு. மற்ருெரு விஷயமும் அவள் நெஞ்சைக் கலக்கியது. சுரங்க வழியாகத் தப்பிச் சென்ற, மோஹன்சிங்கும், உஷாதேவியும்—இரண்டு வருஷங்கள் சென்றும்—என்ன வானார்கள் என்றே தெரியவில்லை. காட்டுப் பிரதேசத்தில் கொடிய விலங்குகளுக்கு இரை யாகி விட்டனரா? அல்லது மொகலாய வீரர் கையில் சிக்கி ஆக்ரா கோட்டைச் சிறையில்

அடைபட்டுக் கிடக்கின்றனரா? அல்லது மலைப் பிரதேசத்தில் எங்காவது ஒளிந்துகொண்டு அவுரங்கசீப்பை எதிர்த்து இழந்த ராஜ்யத்தைத் திரும்பப் பிடித்துக் கொள்வதற்காக இரகசியமாகப் படைகளைச் சேர்க்கின்றனரா என்று தாராவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சிந்தனை தோய்ந்த முகத்துடன் தாரா குடிசையை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தாள். குடிசையின் அருகே வந்ததும் அவள் திடுக்கிட்டாள். அவள் உடல் பதறியது. பயத்தால் அப்படியே மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. காரணம் குடிசைக்கு எதிரே இரண்டு குதிரைகள் நின்றுகொண்டிருந்தன. குதிரையின் மேல் யார் யார் வந்திருக்கிறார்கள்; அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள், என்று அவளுக்குப் புரியவில்லை. ஆனால் மேலே நடக்க அவள் கால்கள் மறுத்தன.

இதற்குள் அதிசய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஒரு மொகலாய வீரன் குடிசைக்குள் இருந்து வெளியே வந்து, ஒரு குதிரையின் மேல் எறிக்கொண்டான். அவனைத் தொடர்ந்தாற் போல் மற்றொரு வீரன். அவன் தோளில் இளவரசனைச் சாத்திக்கொண்டிருந்தான். இந்தக் காட்சியைக் கண்டதும் தாராவின் தலை "கிர்" ரென்று சுழன்றது. தேகம் தலைமுதல் கால்வரை ஆட்டம் கண்டது. இன்னது செய்தென்று புரியாமல் திக்பிரமை பிடித்தவளாய் அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள்.

இளவரசனைத் தூக்கிக் கொண்டுவந்த வீரன் அப்படியே தாவி குதிரைமேல் எறிக்கொண்டான். குழந்தை வீரிட்டுகொண்டே இருந்தது.

இதுவரை ஒன்றும் செய்யத் தோன்றாமல் சிலைபோல் நின்றிருந்த தாராவுக்கு இப்போது எங்கிருந்தோ அபார தைரியம் வந்துவிட்டது. "விரு விரு" என்று குதிரைகளினருகே சென்று, "ஐயா! ஐயா! அந்தக் குழந்தையை விட்டுடுங்க ஐயா! அது என்ன பாவத்தை ஐயா செய்தது! ஐயா! உங்களை ரொம்பக் கெஞ்சிக் கேட்கிறேன்......" என்று கெஞ்சினாள். ஆனால் அவ்வீரர்கள் இவ் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொண்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. குதிரைகளைத் தட்டி விட்டனர். அவை நான்கு கால் பாய்ச்சலில் பறந்து சென்றன. குழந்தையின் அழுகுரல் கேட்டுக்கொண்டே இருந்தது.

குதிரைகள் கண்களுக்கு மறையும்வரை அந்தத் திக்கையே பார்த்துக்கொண்டிருந்த தாரா ஒரு பெரு மூச்சு விட்டாள். மௌனமாகக் குடிசைக்குள் நுழைந்தாள். அவள் மனம் பெருங்குழப்பத்தில் ஆழ்ந்தது.

"ஒரு சமயம் சிம்மபுரி இளவசன்தான் இவன் என்பதைத் தெரிந்துகொண்டுதான், அவர்கள் தூக்கிச் சென்றுவிட்டனரா..? அப்படியாயின் அந்தப் பாவிகள், குழந்தையைக் கொன்றுவிடுவார்களே!.... ஐயோ! இத்தனை நாட்கள் கஷ்டப்பட்டு வளர்த்தும் குழந்தை தக்கவில்லையே! உஷாதேவியையும், மோஹனசிங்கையும் என்றைக்காவது நாம் சந்திக்க நேர்ந்தால் அவர்களிடம் என்ன சொல்வது அவர்கள் மனம் எப்படி இருக்கும்? ஐயோ! ஒன்றும் புரியவில்லையே?" என்று அங்கலாய்த்தது அவள் உள்ளம். அளவு கடந்த வேதனை அவள் மனதைக் கலக்கி எதும் செய்ய இயலாமற் செய்து விட்டது.

3

பதினைந்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. இதன் மத்தியில் ராஜபுதனத்திலும் சரி, மொகலாய ராஜ்ஜியத்திலும் சரி, எத்தனையோ மாறுதல்கள் தோன்றின. அன்பு, சமதரிசனம் என்பவைகளை அஸ்திவாரமாகக் கொண்டு சக்கரவர்த்தி அக்பரால் மொகலாய ராஜ்யம் என்ற கட்டிடம் அவுரங்கசீப்பின் மதத்துவேஷம் மூட வைராக்கியம் என்ற பூகம்பங்களால் ஆட்டம் கண்டது. நாளாக ஆக கட்டிடம் கலகலக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. தக்ஷிணத்தில் மராட்டியர் ஆள ஆரம்பித்துவிட்டனர். ராஜபுதனத்திலும் ராணாக்கள் தாங்கள் இழந்த ராஜ்யங்களைப் பிடிக்க முயற்சி செய்துகொண்டிருந்தனர்.

பதினைந்து வருஷங்களுக்குமுன் அவுரங்கசீப்பின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல், ரகசிய வழியாக நாட்டைவிட்டு வெளியே சென்றுவிட்ட மோஹனசிங், பல ஆண்டுகள்

தன் மனைவி உஷாதேவியுடன் அரவல்லி மலை களை அடுத்த காட்டுப் பிரதேசத்தில் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்தான். ஆனல் அவன் சும்மா இருக்கவில்லை. கொஞ்சம் கொஞ்ச மாகச் சிதறுண்டு போன தன்னுடைய படைகளைத் திரட்டி அவைகளுக்குப் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தான். இதன் மத்தி யில் உஷா, சித்ரலேகா என்ற ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதுவும் தாய் தந்தையரின் வன வாசத்தில் பங் கெடுத்துக்கொண்டு வனராணியாக விளங்கி வந்தது.

மோஹன்சிங்—தனக்குப் போதிய படை பலம் கிடைத்தபிறகு—மொகலாயர் ஆட்சியில் இருந்த சிம்மபுரியைத் தாக்கினன். அங் கிருந்த படைகள் எல்லாம் அனுப்பப்பட்டு விடவே, சிம்மபுரி சீக்கிரத்தில் மோஹன் சிங்கின் கைகளில் சிக்கியது. மறுபடியும் அங்கு ராஜபுத்திர ராஜ்யம் தோன்றியது. ஆயி னும் மொகலாயரால் ஏற்படக்கூடிய அபாயத்தி லிருந்து சிம்மபுரி பூராவும் தப்பித்துக் கொண்டுவிடவில்லை. அவுரங்கசீப் தக்ஷிணத் திலிருந்து திரும்பியதும் ராஜபுதனத்தில் தான் இழந்த ராஜ்யங்களையெல்லாம் மீண் டும் பிடிக்க யுத்தம் தொடுக்கப்போவதாக ஒரு வதந்தி உலாவிக் கொண்டிருந்தது. ஆகவே மோஹன்சிங் தன் கோட்டை கொத்த ளங்களைப் பலப்படுத்தினன்.

காட்டுப் பிரதேசத்தில் வசித்துவந்த தாரா, மோஹன்சிங் திரும்பத் தன் ராஜ்யத் தைப் பிடித்துக்கொண்டதும், பழையபடி சிம்மபுரி அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள். இளவரசனுக்கு நேர்ந்த கதியை அரசனிட மும், ராணியிடமும் கூறினள். பலநாள் வரை அவர்களுடைய துக்கம் ஆறவில்லை. நாளாவட்டத்தில் இளவரசனைப்பற்றிய அவர் களுடைய ஞாபகம் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய மனத்தைவிட்டு மறைய வாரம்பித்தது. தாரா இளவரசி சித்ர லேகாவை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விசேஷ சம்பவம் நடக்க விருந்தது. சிம்மபுரிக்கு, ராஜ குடும்பத்தின் நண்பன் என்ற ஹோதாவில் ஒரு ராஜபுத்திரன் வந்தான். ஆனல் அவனைப்பற்றி பலத்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

மோஹன்சிங் எல்லோரையும் எச்சரித்து விட்டுத் தன் மனைவியிடமும் "உஷா! நான் முன்பு சொன்னபடி செய்துவிடு....இதுதான் தக்க சமயம்......" என்றான் அரசன். உஷாதேவி தலையை ஆட்டினள். பின் அவள் அந்த அறையை விட்டு எழுந்து சென்று விட்டாள். அவளிடமே ரகசியத்தில் சில சில விஷயங்களை தெரிவித்திருந்தான்.

அன்று மாலை சித்ரலேகா நந்தவனத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்த போது, ஒரு மாத்தடியில் அழகான வாலிபன் ஒருவன் படுத்திருப்பதைப் பார்த்தாள். அவனையும் அறியாமல் அவள் மனம் அவன் பால் சென்றது. அவனிடம் அவள் பேசியதில் இருந்து அவன் பெயர் நரேந்திர சிங் என்றும், அவன் ஒரு சைத்ரிகன் என்றும் ஊர் ஊராகச் சுற்றி வருபவன் என்றும் அறிந்து கொண்டாள். அவனை அழைத்து வந்து தன் தாய்க்கு அறிமுகப் படுத்தி வைத் தாள். அன்று அரண்மனையிலேயே அவன் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

* * * *

தனக்கென்று அளிக்கப்பட்டிருந்த அறை யில் கட்டிலின் மேல் படுத்திருந்தான் நரேந்

திரசிங். அவன் மனம் தாமரை இலைத் தண்ணீரைப் போல் தத்தளித்துக் கொண்டிருந்தது. அன்று மாலை தோட்டத்தில் பருவ வனப்போடு கூடிய இளவரசி சித்ரலேகாவைக் கண்டது முதல் அவன் உள்ளம் அவனிடம் இல்லை. அவன் என்னமோ உளவறியத்தான் அங்கு வந்திருந்தான். எனவே உண்மையைச் சொல்லிவிட்டு, எப்படியாவது மன்றாடி இளவரசியை மணந்துகொண்டு சிம்மபுரியிலேயே தங்கிவிடலாமா என்று எண்ணியது ஒரு சமயம் அவன் மனம். அடுத்த கணம் ஒரு வேளை அவுரங்கசீப் இந்தக் கோட்டையைப் பிடிக்க நேர்ந்து, நாமும் அவன் கையில் சிக்க நேரிட்டால் அப்போது நம் கதி என்னவாகும்?" என்ற எண்ணம் கூடவே எழுந்தது. "இந்த அழகிக்காக உயிரையும் விடலாம்" என்று தோன்றியது மற்றொரு சமயம். ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் தவித்துக்கொண்டிருந்தான் அவன்.

அந்தி மயங்கி சில நாழிகள் ஆகிவிட்டன. கோட்டை மணி ஒலித்துக்கொண்டே இருந்த அதே சமயத்தில் உஷாதேவி ஒரு கிண்ணத்தில் பாலுடன் அங்குவந்தாள். அவளுடன் தாராவும் வந்தாள். உஷாதேவி கிண்ணத்தை அவள் கையில் கொடுத்துவிட்டு, மடியில் இருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதிலிருந்து தூளான ஏதோ ஒரு வஸ்துவைப் பாலில் கொட்டிக் கலக்கினாள். அப்போது தாரா மெதுவான குரலில், "ராணி! நான் இரண்டு மூன்று தடவைகள் அவனை உற்றுக் கவனித்தேன். எனக்கு ஏதோ சந்தேகம் தட்டுகிறது. கழுத்தில் ஒரு மச்சம்; வலதுகைக் கட்டை விரலண்டை ஒரு வெட்டுக்காயம்—இவை எல்லாம் இளவரசனை ஞாபகப்படுத்துகின்றன.... பார்த்துக் கொண்டு பாலைக்கொடுங்கள்...." என்று சொல்லிக்கொண்டே பால் கிண்ணத்தைத் திரும்ப உஷாதேவியிடம் கொடுத்தாள். உஷாதேவியின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

அவள் மெதுவாக உள்ளே சென்றாள். நரேந்திரசிங் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். மேஜையின் மேல் ஒரு சிறு கடிதத்துண்டு கிடந்தது. அதன் மேல் "சித்ரலேகாவுக்கு" என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. சப்தம் செய்யாமல் உஷாதேவி பால் கிண்ணத்தை மேஜையின் மேல் வைத்துவிட்டு அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். படிக்கும் போதே அவள் முகத்தில் பலதரப்பட்ட உணர்ச்சிகள் பாய்ந்து பரவின. அவள் அதைப் படித்து முடித்ததும் வேதனையுடன் ஒரு பெரு மூச்சு வெளிப்பட்டது. மனம் பெருத்த சிந்தனையில் ஆழ்ந்தது.

ஒரு நிமிஷம் அவள் கால்களும் கைகளும் அசைவற்றிருந்தன. அடுத்த கணம் அவள் முடிவுக்கு வந்துவிட்டதை அவள் முகம் உணர்த்தியது. சட்டென்று கையில் இருந்த காகிதத்தை மடித்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். பால் கிண்ணத்துடன் நரேந்திரசிங் படுத்திருந்த கட்டிலருகே சென்று அவனை எழுப்பினாள். அவன் எழுந்து உட்கார்ந்ததும் பாலை அவனிடம் கொடுத்தாள். இவர்கள் சூதை அறியாத அவன் அதை மடமட வென்று குடித்துவிட்டு கிண்ணத்தை உஷாதேவியிடம் திருப்பிக் கொடுத்தான். உஷா அதை வாங்கிக்கொண்டு விர்ரென்று வெளியே வந்து விட்டாள். அதில் கலந்திருந்தது விஷம் என்பதை கடவுள்தான் அறிவார்!

விஷயத்தை அறிய ஆவலுடன் வெளியே காத்திருந்த தாரா, ராணியைக்கண்டதும், "மஹாராணி! அவரைக் கவனித்தீர்களா?...." என்ருள் பரபரப்புடன்.

"கவனித்தேன். அவன் காணுமற்போன இளவரசனே தான்!"

"அப்படியானுல் பால்?......"

"அதைக் கொடுத்துவிட்டேன்......"

தாராவின் வயிறு ஒருதரம் கலங்கியது "பாலைக் கொடுத்தபின்தான் உண்மை தெரிந்ததா?...." தாராவின் குரலில் வருத்தம் தொனித்தது.

"இல்லை! நான் அறைக்குள் சென்றவுடனேயே மேஜையின் மேல் "சித்ரலேகா" என்ற விலாசமிட்ட இந்தக் கடிதம் இருந்தது. தான் பல வருஷங்களுக்கு முன் மொகலாய வீரர்களால் ஒரு குடிசையிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டு, மொகலாய மன்னனுல் அரண்மனையில் வளர்க்கப்பட்டதாகவும், இப்போது சிம்மபுரியின் இரகசியங்களை அறிந்து வர ஒற்றனுக அனுப்பியதாகவும் ஆனுல் தான் சித்ரலேகாவை மனமாறக் காதலிப்பதால்தான் வந்த வேலையை மறந்து இங்கேயே தங்கிவிடப் போவதாகவும் எழுதி இருந்தான்........ பாவம்! சித்ரலேகா சொந்தத் தங்கை என்பதை அறியவில்லை...." இதைச் சொல்லும் போதே அவள் குரல் தழுதழுத்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் முட்டி நின்றது.

"அம்மா! அவன் தங்கள் பிள்ளைதான் என்று தெரிந்த பிறகுமா அவனைக் கொல்லத் துணிந்தது உங்கள் மனம்?...." தாராவின் வாயிலிருந்து வெளிவந்த இந்த சொற்கள் உஷாவை ஈட்டிகொண்டு குத்துவது போல் இருந்தது.

"தாரா! நான் யோசிக்காமல் அவசரப்பட்டு ஒன்றையும் செய்துவிடவில்லை...." எல்லோருக்கும் கடமை என்று ஒன்று இருக்கிறது....கடமையைச் செய்வதுதான் உயர்ந்த தர்மம்.... அவன் இத்தனை நாட்கள் மொகலாயரின் உப்பைத்தின்று தளர்ந்தவன். அவனுக்கு உண்மையைத் தெரியப்படுத்தி விட்டால் அவன் இங்கேயே தங்கிவிடுவான். அப்போது தன்னை வளர்த்த மொகலாயருக்கு அவன் துரோகம் செய்தவனுகிருன்.... கடமையிலிருந்து வழுவுகிருன். அதோடு என் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது. அதாவது அவர் கட்டளை இட்டபடி நான் அவனுக்கு விஷங் கலந்த பாலைக் கொடுத்துவிட்டேன்.... என் கணவருக்கும் ஒரு கடமை உண்டு.... ஒற்றனுக நாட்டினுள் பிரவேசித்தவனை சரியானபடி தண்டிப்பது.... அந்தக் கடமை, தண்டனையும் இப்போது நிறைவேறி விட்டது..

நான் அவனிடம் உண்மையைச் சொல்லி இருந்தால் நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் கடமையிலிருந்து வழுவி இருப்போம்.... இப்போது நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்து முடித்துவிட்டோம் என்று தி ரு ப் தி யா ல் ஒவ்வொருவர் மனமும் சாந்தி யடைந்து விட்டது...... ஆனுல் தாரா, புத்திர சோகம் என்னுல் சகிக்க முடியவில்லை....கடமை காரணமாக என் மகனை நானே கொல்ல நேர்ந்த விதியை என்ன சொல்வது....தாரா! என் நெஞ்சு விம்முகிறது....நான் இனி வெகு நேரம் உயிருடன் இருக்க மாட்டேன்....அதற்குள் உனக்கு ஒரு கட்டளை....அவன் என் மகன் தான் என்பது ஒருவருக்கும் தெரிய வேண்டாம்....அந்த ரகசியம் உன் மனத்திற்குள்ளேயே மங்கி மறையட்டும்....சத்தியமாக இதை நீ வெளியிடக்கூடாது....தாரா!தாரா! அதோ என் செல்வம், விஷ வேகத்தால் அவஸ்தைப்படுவது என் காதுகளில் விழுகிறது......அவனுக்கு முன் நான் சுவர்க்கம் சென்று அவனை நான் வரவேற்கிறேன்...... பிள்ளையைக் கொன்ற பாவி......" என்று சொல்லிக்கொண்டே மடியிலிருந்த காகிதத்தைச் சுக்கல் நூருகக் கிழித்தெறிந்தாள் உஷா. அடுத்த கணம் அவள் கையிலிருந்த கிண்ணம் கீழே விழுந்தது. அவள் தொப்பென்று தரையில் சாய்ந்தாள்.

இதே சமயத்தில் நரேந்திரனின் உயிரும் கூட்டை விட்டுப் பிரிந்து கொண்டிருந்தது.

அஞ்சலைக்கு, அவனிடமிருந்த அன்பும். அளவு கடந்த மதிப்பும்தான் அப்படிப் பேசச் செய்தது. ஆனால் அவன், அவள் நலம் கருதி தன் வாழ்க்கை இன்பத்தைத் தியாகம் செய்தது மகத்தான தல்லவா

அவன் தியாகம்

பி.வி.ஆர்

'அஞ்சலை!

"என்ன அப்பா?"

"சாயங்காலத்துக்கு முன்னாலே ஒந் தீர்மானத்தைக் கண்டிப்பாய்ச் சொல்லிடணும், தெரியுமா?"

"இப்போவே தானே சொல்லிடறேன்?"

"என்ன?"

"நீயும் அம்மாவும் பாத்து வைச்சிருக்கிற புள்ளையைக் கட்டிக்க மாட்டேன். போறுமா?"

"என்ன சொல்றே?"

"இப்போ சொன்னேனே, அதைத்தான் மறுபடியும் வேணும்னு சொல்றேன். நீயும்அம்மாவும் பாத்து வைச்சிருக்கிற புள்ளையை கடடிக்க மாட்டேன்."

"அப்படீன்னு ?"

"நான் சின்ன துரையைத்தான்............"

"சீ, மூடு வாயை......படிப்பும் இல்லாத சொத்தும் இல்லாத அந்த நாடோடிப் பயலைப் போய்..........."

அஞ்சலை அங்கு மேலும் நிற்க விரும்பாமல் போய்விட்டாள்.

* * *

தாய் தந்தையரின் தீர்மானத்தையும், தான் கண்டிப்பாகத் தீர்மானித்திருந்ததையும் பற்றி அலசிப் பார்த்தது அவள் மனம்.

"சிங்காரத்திற்குப் பணம் இருக்கிறது. வீடுவாசல் இருக்கிறது. ஆனால் அவனும் அவனுடைய போக்கும் ! பணத்தைக் கண்டு அப்பா அசந்து போறாரே ? ஆனால் அதுதானே வாழ்வுக்கே அத்தியாவசியமான பொருள். அந்தப் பணம் சின்னதுரையிடம் இல்லையே ! ......ஆனால் ஒரு நாள் அவனே பணக்காரனாக ஆகக்கூடாதா ? அவனுடைய அழகும் கட்டுமஸ்தான தேகமும், குணமும் யாரிடம் இருக்கிறது?"

தாய் தந்தையரை எதிர்த்து சின்ன துரையைத் தான் கலியாணம் செய்துகொள்ள முடியுமா என்று அவள் யோசித்தாள்.

சின்னதுரையால் இப்போது தன்னைக் காப்பாற்ற முடியுமா ? முழுப்படிப்பு உள்ளவர்களுக்கே வேலை இல்லாத காலத்தில் அரைகுறைப் படிப்பு உள்ளவன் எவ்வாறு தனக்கு நிழல் தரமுடியும்? மேலும் அவனுடைய போக்கைப்பார்த்தால் வேலை செய்து பிழைக்க விருப்பமில்லாதவன்போலல்லவா இருக்கிறான். எதிலும் அசிரத்தை, அலட்சியப் போக்கு ! எப்படியும் இது விஷயமாக அவனைக் கண்டு பேசி அறிய வேண்டியதுதான்.

* * *

"இதோ பாரு, இன்னிக்கு கார்த்தாலே அப்பா, ரெண்டிலே ஒண்ணைக் கண்டிப்பாய்ச் சொல்லுன்னுகேட்டாரு," என்று அவள் ஆரம்பித்தாள்,

"நீ ரெண்டையுமே சொல்லிடறது தானே ? கஷ்டமில்லாமப் போயிடும்," என்று பதிலளித்தான் சின்னதுரை.

"இதோ பாரு மச்சான், நீ கேலியாகப் பேசறதை யெல்லாம் அப்புறம் வைச்சுக்கோ. ஒவ்வொத்தர் கண் ஒவ்வொத்தர் மேலே இருக்கு......"

"ஒங்கப்பா கண் சிங்காரத்தின் மேலே இருக்கு. அவன் கண் ஒம்மேலே இருக்கு. ஒன்கண் எம் மேலே........என்கண் ஒம்மேலே......!" என்று சொல்லிச் சிரித்தான் சின்னதுரை. சிரிப்பை அடக்கிக்கொண்டு அஞ்சலை, "அது தெரிஞ்சிக்கிட்டியா இல்லையா ?" என்று சற்றுக் கடுமையாக வினவினாள்.

"ஓ!"

"என் தெரியுமா? எங்கப்பா கண் சிங்காரத்து மேலே இருக்கு ?"

"என்னை விட அவனுக்கு ஒங்கப்பாவை நேரிலே நன்னாத் தெரியும் !"

"அதான் இல்லே. அவன் கிட்டே கொஞ்சம் பணம் இருக்கு. அதோடே வேலைசெய்தும் பொழைக்கிறான்....ஆனா....உனக்கு ?............" என்று நிறுத்தினாள் அஞ்சலை.

"அவன் அப்பனைமாதிரி என் அப்பன் ஒண்ணும் வைச்சிட்டுப் போவலையே?"

"நீயாக வேலை செய்து பொழைக்கறதுதானே ஆம்புள்ளைக்கு லட்சணம், வேலை செய்து சம்பாதிக்கிறதுதானே?"

"படிப்பில்லாத எனக்கு இந்த பட்டிக்காட்டு ஊரிலே என்ன வேலை கொடுப்பாங்க? வெளியூர் போனாத்தான் எதாவது கிடைக்க வழியிருக்கும்."

"பின்னே என்ன, வெளியூர் போய்த்தான் பொழையேன்? இங்கேயே இருக்கணும்னா கல்லு ஒடைச்சு சம்பாதியேன்?" என்று கோபமாகக் கூறினாள்.

இத்தனை நேரம் தமாஷாக இருந்த சின்ன துரைக்கு அவளுடைய வார்த்தைகள் 'சுருக்' என்று பட்டன. கேவலம் ஒரு பெண் தன்னை நீ 'கல் உடைத்து சம்பாதியேன்' என்றாளே, என்று நினைத்தான் அவன்.

"நான் சம்பாதிக்காத போனா ஒனக்கு என்னவாம் குறை?" என்று அவன் சற்று ரோஷமாகக் கேட்டான்.

"நீ சம்பாதிப்பதில்லேன்னா எனக்குமட்டுமில்லே ஒனக்கும்தான் குறை. சிங்காரத்துக்கு என்னைக் கட்டிக் கொடுத்துடுவாங்க....தெரிஞ்சுதா......"

* * *

"சின்னதுரைக்கு அன்றிரவு முழுதும் தூக்கம் வரவில்லை. அவன் தன்னைப்பற்றியே சிந்தித்துப் பார்த்தான். உண்மையில் அஞ்சலை கூறுவது சரிதான். ஆண்பிள்ளைக்கு லட்சணம் சம்பாதித்துச் சாப்பிடுவதுதான். இத்தனை நாள் வீட்டிலேயே இருந்த அவன், தாயார் சொந்த வீடு இருக்கும் தைரியத்தில் அங்கும் இங்கும் கடன்

வாங்கிச் சமைத்துப்போடும் கஷ்டத்தை அறியாமல் இருந்த அவன், இப்போது ஒரு வேலை செய்து பிழைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தைக் கண்டான்.

உள்ளூரிலேயே இருந்து சம்பாதிக்கமுடியுமா, என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது.

இங்கே என்ன வேலை கிடைக்கும்?

'இங்கேயே இருக்கணும்னு கல் ஒடைச்சு சம்பாதியேன்' என்று அஞ்சலை கூறின கடுமையான மொழிகள் அவன் ஞாபகத்திற்கு வந்தன.

கல் உடைத்தோ, கூலிவேலை செய்தோ சம்பாதித்து அவளுடன் குடும்பம் நடத்தினுல் அவள் என்ன சுகத்தைத் தன்னிடமிருந்து பெற்று விடுவாள்? வறுமைக் குடும்பத்திலே புருஷன் மனைவிகளுக்குள் பூசல் இல்லாமல் இருக்காதே? என்னதான் இப்போ இரண்டுபேரும் ஆசையாக இருந்தாலும் நாளைக்கு, வீட்டிலே 'அது இல்லே, இது இல்லே' என்று வருகையில் மனத்தாங்கல்தானே ஏற்படும்?

அவன் மனம் எதிர்காலத்தைப்பற்றி யோசித்தது. வெகுநேரத்திற்குப் பிறகு அவன் முடிவான ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

மறுநாள் முழுதும் வீட்டிலே காணுத சின்னதுரையை ஊர்முழுதும்தேடினுள் அவன் தாயார்; பயனில்லை.

ஒருநாள் போய், இரண்டு நாள் போய், ஒரு வாரமாயிற்று. சின்னதுரை ஊரைவிட்டே போய்விட்டான்.

அஞ்சலைக்கு துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. தன்னுல்தான் அவன் ஓடிப்போய்விட்டான் என்ற எண்ணம் அவளை வதைத்தது. அவள் மனம் உண்பதிலோ உறங்குவதிலோ ஈடுபடவேயில்லை. சின்னதுரை போயிருக்கக்கூடிய மானசீக இடங்களிலே அவள் உள்ளம் பிரயாணம் செய்துகொண்டிருந்தது.

கூடியசீக்கிரம் அவன் ஒருநாள் வராமலிருக்க மாட்டான் என்ற நம்பிக்கையுடன் இருந்த அவள் சிங்காரத்தைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்து விட்டாள்.

இரண்டு மாதங்கள் சென்றன. அன்று அஞ்சலையின் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. வாழ்விலே முதன்முதலாகத் தன் பெயருக்கு வந்திருந்த கவரை, உடைத்துப் பார்த்தாள் அவள். உள்ளே புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டு இரண்டு பிரகாசித்தன. ஒரு சிறு கடிதமும் காணப்பட்டது.

"......உன் கடுமையான பேச்சு கிளப்பிவிட்ட ரோஷத்தினுல், ஊரிலே கல் உடைத்துப் பிழைக்கிறதைவிட வெளியூருக்குப்போய்ப் பிழைக்கலாம் என்கிற தைரியத்தில் கிளம்பிவிட்டேன். நல்லவேளை, எனக்கு இங்கே ஒரு நல்ல வேலை கிடைத்துவிட்டது. இத்துடன் வைத்திருக்கும் பணத்தை—நான் சம்பாதித்திருப்பதை—உன் கண்ணுலேயே பார்......"

அஞ்சலைக்கு ஆனந்தம் தாளவில்லை. தான் கடுமையாகப் பேசியது அவனுடைய உள்ளத்திலிருந்து மறையவில்லை என்பதை நினைத்தபோது அவள் கண்களில் நீர் மல்கி நின்றது. ஒருதரத்திற்குப் பத்துதரம் படித்தாள் கடிதத்தை. தான் கிராமத்திற்குத் திரும்பிவருவதைப்பற்றி அவன் ஒன்றுமே எழுதவில்லையே என்று நினைத்தபோது அவள் முகம் வாடியது. சம்பாதித்து பணம் சேர்த்துக்கொண்டு வராமல் இருக்க மாட்டான் என்று அடுத்த கணம் அவள் மனம் தேறியது.

* * *

நாட்கள் ஓடின. இதற்கிடையில் ஏதோ வியாபாரம் ஒன்று பட்டணத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று சிங்காரம் பூமியை விற்றுவிட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான். அச்செயல் அஞ்சலைக்கு ஆறுதலையே அளித்தது.

சிங்காரம் போன இரண்டு மாதங்களுக்குப் பிறகு சின்னதுரையிடமிருந்து வந்த கடிதம் அவளை யோசனையில் ஆழ்த்தியது.

"......என் எஜமான் ஏதோ வியாபார காரியமாக பர்மாவுக்குச் செல்லுகிறுர். நானும் போகவேண்டி யிருக்கிறது. வருவதற்குக் குறைந்தது ஒருவருஷமாவது ஆகும்........"

"இன்னும் ஒரு வருஷம் காத்திருக்கவேண்டும்" என்ற எண்ணம் அவளுடைய நம்பிக்கையைக் குறைத்தது. நாள் ஆக ஆக அவளுடைய வயது அதிகரித்துக்கொண்டே, வந்தது. அத்துடன் தாய் தந்தையரின் கவலையும் அதிகரித்தது. ஏற்கனவே வயதாகியிருந்த பெண்ணைப்பற்றிய கவலைகள் அவர்களைச் சூழ்ந்தன.

பட்டணத்திலே வியாபாரம் தொடங்கின சிங்காரம் ஆறு மாதங்களுக்குள், கிராமத்தில் பூமி வாங்கும் நிலைக்கு வந்துவிட்டான். அவனுடைய 'சில்க் ஷர்ட்டும்' வைர மோதிரமும் கிராமத்தா

ருடைய கண்களை மங்கச் செய்தன. எல்லா விதத்திலும் மாறிப்போன அவன் அஞ்சலையின் மீது உள்ள ஆசையை மட்டும் மாற்றவில்லை. அவளுக்காகத்தான் ஊருக்கே வந்தானே என்று நினைக்கும்படியாக இருந்தது, அவன் அவளைப் பற்றி ஆர்வமாக விசாரித்தவிதம்.

தானாக வலிய வந்து ஒருவரிடம் அவர் பெண்ணைக் கேட்பதென்றால்..........? அஞ்சலையின் தந்தைக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை.

"அஞ்சலைக்காகத்தான் மாமா, நானே இங்கு வந்தேன். வந்த இடத்திலே கொஞ்சம் பூமியும் வாங்கிப் போட்டிருக்கேன். உங்க இஷ்டத்தைத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் நான் பட்டணத்துக்குப் புறப்படணும்."

தன் சம்மதத்தை உடனே சொல்லிவிடணும் என்று அஞ்சலையின் தந்தை நாக்குத் துடித்தது.

சொல்லலாமா, கூடாதா என்று அவர் ஒரு நிமிஷம் யோசனை செய்தார். சிங்காரத்தின் செல்வநிலையையும், அவனுடைய விநயமான பேச்சையும் கண்டு, தன் மகளை எப்படியும் சரிப்படுத்திவிடலாம் என்கிற தைரியத்தில் தன் பெண்ணைக் கொடுப்பதாகவும் சம்மதித்து விட்டார்.

தாய்தந்தையர் இத்தனை நாளாக சின்னதுரை வந்துவிடுவான், தங்கள் மகளின் விருப்பப்படியே அவனை மருமகனாக வைத்துக்கொள்ளலாம் என்றுதான் நினைத்தனர். அதனால் வேறு இடத்திலும் பிள்ளை பார்க்காமல் இருந்தனர். ஆனால் இப்போது ஒரு பணக்காரப் பிள்ளை வலிய வந்து பெண் கேட்கையில் அவர்கள் சின்னதுரையைப் பற்றியோ பெண்ணின் இஷ்டத்தைப் பற்றியோ சிந்திக்கவில்லை. பெண் சௌக்கியமாக இருப்பதற்காகத்தான் பணக்காரப் பிள்ளைக்கு அவளைக் கொடுக்க விரும்புவதாக வாதாடினர்.

அவர்களுடைய கட்டாயத்திற்கு முன் அஞ்சலையின் பிடிவாதம் சாயவில்லை. சின்னதுரையைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோதும் அவர்கள் மசியவில்லை. ஊராரும் சிங்காரத்தின் பணத்தைக் கண்டு மயங்கி தாய்தந்தையருக்கு பக்கபலமாகப் பேசத்தொடங்கினர்.

தாய் தந்தையருக்கும் ஊராருக்கும் எதிராக இருந்த அஞ்சலை கடைசியில் தோல்வி அடைந்தாள்.

* * *

மாதங்கள் சென்றன.

பர்மாவிலிருந்து வேலை தீர்ந்ததும் ஓடோடி வந்தான் சின்னதுரை.

யாரைப் பார்க்க வேண்டும் என்று துடிதுடித்து வந்தானோ, யார் தனக்காக இத்தனை நாள் காத்திருந்து, ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பாள் என்று அவன் நினைத்தானோ, அவள் இன்னொருவனுடைய சொத்தாகப் போய் வெகு நாட்களாகிவிட்டன என்று கேள்விப்பட்டபோது உண்மையில் ஸ்தம்பித்தே போனான்!

அவன் முற்றிலும் எதிர்பார்க்காதது நடந்தே விட்டது. ஒரு பெண்ணுக்காகத்தான் ஊரையே மறந்து வெளியூரெல்லாம் இரண்டு வருஷங்களாகச் சுற்றி உழைத்து, சம்பாதித்து கையில் பணத்துடன் வந்ததெல்லாம் வியர்த்தமாயின என்பதை உணர்ந்தபோது அவனுக்கு வாழ்க்கையிலேயே ஒரு வெறுப்பு உதித்தது.

அவன் சென்ற காலத்தில் அவளுடன் நடத்திய இன்ப நாட்களையெல்லாம் நினைத்துப் பார்த்தான். வெளியூர்களிலிருந்து அவளுக்கு எழுதின கடிதங்களும், அவளை நினைத்து நினைத்து உள்ளச் சந்தோஷத்தோடு பசியும் தெரியாமல் பொழுது போக்கின நாட்களும் அவன் கண்முன் தோன்றின.

அவனால் ஊரிலே இருக்க முடியவில்லை. அஞ்சலையுடன் தான் சம்பாஷித்துப் பொழுது போக்கின இடங்களெல்லாம் அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வியைக் காட்டி வதைப்பது போலிருந்தன. கையில் இருந்த பணத்தைத் தாயாரிடம் கொடுத்துவிட்டு சென்னையை நோக்கிப் பிரயாணமானான் அவன்.

நாள் ஆக ஆக அவன் மனம் தெளிவு பெற்றுக்கொண்டே வந்தது. தான் எதிர்பார்க்காதது நடந்துவிட்டது. அதைப்பற்றி நினைப்பதனால், தன் உள்ளத் துயர் நீங்கிவிடப்போவதில்லை. உலகத்திலே பணமும் படிப்பும்தான் எல்லோராலும் விரும்பப்படுகிறது. அஞ்சலைக்குத் தன்மீது இஷ்டமிருந்தாலும், வாழ்க்கையிலே தன்னுடன் இருந்தாலும் எதிர்பார்க்கிற சுகத்தை அடைய முடியாது. அவளுடைய அழகிய வதனம்

நகை நட்டுகளில்லாமல் மங்கிவிடும். சிங்காரத்தின் பணத்தின் மூலம் அவளுடைய இயற்கை அழகு செயற்கை அணிகலன்களால் சோபிக்கும். தன்னால் திருப்தி செய்ய முடியாததை யெல்லாம், அவள் அவன் மூலம் பெற்று திருப்தி அடைந்து விடுவாள். தான் இல்லாதது அவளுக்கு உண்மையில் வருத்தத்தை உண்டாக்கி யிருக்கும். ஆனால் அந்த வருத்தம் செல்வ நிலையில் இருக்கையில் மறைந்துவிடும்.

அஞ்சலை எங்காவது நன்ருக இருக்கவேண்டும், எப்போதும் கஷ்டப்படக்கூடாது என்றே அவன் உள்ளம் வேண்டியது. தன் தோல்வியைப்பற்றி அவன் வருந்தவில்லை. தன் கரடுமுரடாகிக் கிடந்த வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி ஒரு நிரந்தரமான தொழிலில் ஈடுபடத் தூண்டின அஞ்சலையை அவன் தெய்வமாகப் பாவித்தான் உள்ளக் கோவிலிலே.

அவனுக்கு ஒரு விருப்பமு மிருந்தது. அஞ்சலை இனி தன்னை எப்போதும் எந்த இடத்திலும் பார்க்கக்கூடாது. அவள் தன்னைப்பற்றி நினைக்கவோ சிந்திக்கவோ இடம் கொடுக்கக்கூடாது. அவனும் அவளைப் பார்க்க விரும்பவில்லை. ஆனால் அவனுடைய தொழில் அவனுடைய விருப்பத்தை ஈடேருமற் செய்து விட்டது.

* * *

அன்று கோடம்பாக்கத்தை நோக்கி நிதானமாக 'டாக்ஸியை' செலுத்திக் கொண்டிருந்தான்.

பின்சீட்டிலிருந்து வந்த கலகலப்பான பேச்சும் சிரிப்பும் வளையல்களின் ஒலியும் அவன் உள்ளத்தில் அமுங்கிக்கிடந்த உணர்ச்சிகளைக் கிளற ஆரம்பித்தன. சிங்காரமும் அஞ்சலையும் சந்தோஷமாகத்தான் காலங்கழிக்கின்றனர் என்பதை அவன் கண்கூடாகப் பார்த்தபோது, மனிதனுக்கு இயற்கையாக உள்ள பொருமையும் அசூயையும்தான் முதலில் உண்டாயின. ஆனால் அடுத்தகணம், வெகுநாட்களாக உள்ளத்தைத் தெளிவாக வைத்துக்கொண்டதனல் ஏற்பட்ட விவேகம் மேலாங்கி நின்றது. அஞ்சலையின் சந்தோஷம் அவனுக்கு ஆத்ம சந்தோஷத்தை அளித்தது.

தன்னை அவர்கள் அடையாளம் கண்டு கொள்ளக் கூடாதே என்ற கவலையும் அவன் மனதில் உண்டாயிற்று. பக்கத்தில் வைத்திருந்த தொப்பியை உடனே அணிந்துகொண்டு, துண்டையும் கழுத்தில் சுற்றிக் கொண்டான்.

"டிரைவர், மவுண்ட்ரோடிலே கொஞ்சம் நிறுத்திக்கொள். சில சாமான்கள் வாங்கணும்" என்று சிங்காரம் ஆக்ஞாபித்தான்.

மவுண்ட் ரோடு வந்ததும் சிங்காரம் அஞ்சலையை காரிலேயே விட்டுவிட்டு இறங்கிப்போனுன்.

இப்போது காரில் சின்னதுரையும் அஞ்சலையும் தான்!

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு அவர்கள் இருவரும் இப்போது தனியாக ஒரு இடத்தில் இருக்கிருர்கள்! ஆனால் அதற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்! சின்னதுரைக்குத் தன்னைக் காட்டிக்கொடுத்துக் கொள்ளலாமா என்று கூட ஒரு கணம் தோன்றியது. ஆனால் அடுத்த விநாடி அவன் மனதிலே எழுந்திருந்த வெகு நாளைய தீர்மானம் அதைத் தடுத்தது. ஆழ்ந்த யோசனையில் உள்ளவன்போல் அவன் மௌனமாக இருந்தான்.

பத்து நிமிஷம் சென்றிருக்கும்; சிங்காரம் வந்தான்.

"அஞ்சலை, இறங்கிவிடு. அந்தக்கடையில் நல்ல புடவை ஒன்று பார்த்து வைத்திருக்கிறேன். அதை வாங்கிவிட்டு சினிமாவுக்கும் போகலாம் என்று கூறிவிட்டு, டிரைவர், உனக்கு 'சார்ஜ்' எவ்வளவாயிற்று? என்று அவன் கேட்டான்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த டிரைவர், அஞ்சலை இறங்கியதும், மெதுவாக காரை 'ஸ்டார்ட்' செய்தான்.

"என்னப்பா 'சார்ஜ' ஆகியிருக்கிறது ?" என்று மீண்டும் வினவினுன் சிங்காரம்.

"பரவாயில்லை, ஒன்றும் வேண்டாம் சார்" என்று கூறிக்கொண்டேபுறப்பட்டான் சின்னதுரை.

சிங்காரம் அசந்தேபோனுன்! ஒரு டாக்ஸி டிரைவர் சத்தம் வாங்கிக்கொள்ளாமல் புறப்படுவது யாருக்குத்தான் ஆச்சரியத்தை விளைவிக்காது ?

"என்....னப்....பா....இது?"

ஆனல் பதில் கிடைக்கவில்லை.

கார் பத்தடி சென்றுவிட்டது.

"ஒரு மாதிரியோ ?......," என்று அஞ்சலை கேட்டது லேசாக சின்னதுரையின் காதுகளில் விழுந்தது.

ஒரு பெண்ணுக்காக ஆசைப்பட்டுத் தோல்வி அடைந்த அவன்—தியாக உணர்ச்சியுடனும் விவேக உணர்ச்சியுடனும் உள்ள அவன்—அந்தப் பெண்ணிடமிருந்து கிடைக்கக்கூடிய பணத்தைத் தியாகம் செய்யவா தயங்குவான்? ஆனல் இது அவர்களுக்கு எப்படித்தெரியும் ?

[சென்ற இதழில் ஆரம்பமான 'அருட் பெருஞ் ஜோதி' கட்டுரை இவ்விதழி லும் தொடர்ந்து வெளியாகிறது. வள்ளலார், சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கை பற்றி விளக்கியுள்வற்றை இங்கு சுருக்கமாகத் தந்துள்ளோம்.]

பல்குநன்

இருபதாம் நூற்றுண்டில் மட்டும் அல்ல; உலகம் உண்டான காலத்திலிருந்தே, நல்லதுங் கெட்டதும் கலந்த வாழ்க்கை யமைப்பில்தான் மனித சமுதாயம் வளர்ந்து வருகிறது. ஆனுல் வர வர நன்மைகள் நலிந்து தீயன அதிகமாகி விட்டதற்குள்ள எத்தனையோ காரணங்களில் **தெய்வநம்பிக்கை** என்னும் **தன்னம்பிக்கை** குறைந்து விட்டதும் ஒரு காரணம். இதைப் பல காரணங் களில் ஒன்று எனக் கொள்வதைக் காட்டிலும், இதுதான் அடிப்படையான காரணம் என்பதைப் பெரியோர்கள் வற்புறுத்துகின்றனர். அருட் பிரகாச வள்ளலார் நம்மிடையே வந்து உண்மை நிலையை விளக்குவதற்கு முன்னரே எத்தனையோ மஹான்கள் வந்தனர்; எவ்வளவோ எடுத் தோதினர்; உண்மையை விளக்கினர். உண்மை யறிந்து, உண்மை நெறிப்படி உத்தமமான வாழ்க்கையை ஒவ்வொருவரும் நடத்த வேண்டும் என்பதை **'சன்மார்க்கம்'** என்ற ஒரே வார்த்தை யில் தெளிவாக்கி, வாழ்க்கையில் சன்மார்க் கத்தை (சாதாரண அர்த்தத்தில் ஒழுக்கம் என்றும் கொள்ளலாம்) கடைப்பிடிப்பதுதான் லட்சியமா யிருக்க வேண்டும் என்றும் இந்தத் துறையில் பாடுபடுவதே சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நோக்கம் என்றும் வள்ளலார் அன்று அறிவித்தார். சத்திய ஞான சபையின் தொடக் கத்துக்கும் இதுவே காரணமாகும்.

தெய்வ நம்பிக்கையே தன்னம்பிக்கை

தெய்வ நம்பிக்கையே தன்னம்பிக்கை என்று நாம் குறிப்பிடுவது பற்றி எழும் சில பிரச்னை களுக்கு அவரே அளித்துள்ள பதிலை நம்முடைய வார்த்தைகளில் விளக்கப்போனுல் "தெய்விகத் தின் சிருஷ்டியாகிய மனிதன் தன்னுள்ளேயே கடவுள் இருப்பதை அறியவேண்டும். இதனுல் தான் 'கடவுள்' என்ற சிறு வார்த்தையில் பெரும் அர்த்தம் பொதிந்திருக்கிறது என்றும், தன்னுள்ளே கடவுளைக் காணுதல் சாமானியர்க்கு எளிதல்லவாயினும், கடவுளின் அருளைப் பெறு தற்குரிய வழிகளைத் தேர்ந்து அவ்வழி நடப்பதன் மூலம் இந்த லட்சியத்தில் வெற்றி பெறலாம் என்றும், இதற்குத் தேவையான, முக்கியமான வழி 'சன்மார்க்கமே' என்றும் அவர் வற்புறுத்தி யுள்ளார். இதையும் சாதாரணமானதொரு விளக்கத்தில் சொல்லவேண்டுமானுல் ஒரு புது வீடு கட்டுகிறோம். அந்தப் புதிய வீட்டில் கிரஹப் பிரவேசம் செய்து அதிலே குடிபுகுந்து குடியிருக் கிறோம். இதேமாதிரி ஆண்டவன் மனிதனைப் படைத்துவிட்டு, அந்த மனிதக்கூண்டை இயக்க உயிர் (ஆத்மா) என்ற அமைப்பில் குடிபுகுந்து விடுகிறுர். குறிப்பிட்ட காலம் வரை குடியிருந்து விட்டு, பிறகு வேருெரு கூட்டில் நுழைவதாக தெய்வ விளக்க நூல்கள் கூறுகின்றன. இந்த உண்மையை அறியாதவர்களுக்கு, அல்லது அறிய வழியில்லாமல் மாயையில் மூழ்கி யிருப் பவர்களுக்கு, உண்மையை எடுத்துச் சொல்வதற் கென்றே தெய்வத் தொண்டர்கள் தோன்று கின்றனர். இவ்விஷயத்தில் பேரறிஞர்கள் இன் னும் தெளிவான விளக்கங்களை அறிவிக்க முடியும்.

வள்ளலார் வகுத்த வாழ்க்கைநெறி

தனி மனிதனுக்கும், தனி மனிதர் பலரைக் கொண்ட சமுதாயம் என்ற அமைப்புக்கும் எம் மாதிரி வாழ்க்கை நெறி இருக்கவேண்டும்? தனி மனிதன் வாழ்க்கை நெறி பிறழ்ந்தால் சமுதாய மும் நெறி தவறி விடுவதென்பதெப்படி? நம் மைப்போன்ற சாதாரண மனிதர்களில் ஒருவர் மட்டும் தெய்வத்தொண்டராவது எப்படி? என் றெல்லாம் பலகேள்விகள் எழுவதற்கு இடமுண்டு.

இந்தச் சந்தேகங்கள் எழுவதற்குக் காரணம் தன் னம்பிக்கை என்னும் தெய்வ நம்பிக்கை யின்மை தான் என்பது வள்ளலாரின் கொள்கை. எனவே தான், தமது அருட்பாடல்கள் ஒவ்வொன்றிலும் தம்முடைய சொற்கள் ஒவ்வொன்றிலும் இக் காரணத்தை முன்னிட்டே தெய்வ நம்பிக்கையை வற்புறுத்துகிறுர். இப்படி அவர் தெய்வ நம்பிக் கையை வலியுறுத்திக் கூறுவதனுல், நாகரீக உலகத்தில் வாழும் நம்மவரில் சிலருக்கு அன் றைக்கு இந்த அருட்பா மருட்பாவாகவும் தோன்றி யது! எத்தனையோ எதிர்ப்புகள் வீண் வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் கிளம்பின; பிறகு பலன் எதுவுமின்றி அவைகள் நசித்தன.

இனி ராமலிங்க அடிகள் தனி மனிதன் வாழ்க்கை நெறிபற்றிச் சொல்லும் சில கருத்துக் களைப் பார்ப்போம். சன்மாக்க விளக்கம் என்ற தலைப்பில் அவர் வசன ரூபமாகவும், பாடல் மூல

மாகவும் வற்புறுத்தியுள்ள விஷயங்களின் சாரத்தைமட்டும் பின்பு தருகிறோம். ஆயினும் சீவகாருணிய ஒழுக்கம் என்ற தலைப்பில் அடிகளே தமது தெளிவான வசன நடையில் வரைந்துள்ள வற்றை இங்கு முதலில் சொல்லுகிறோம்.

“உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டீர்கள். இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்.

“அந்த ஆன்ம லாபமாவது எதுவென்றறிய வேண்டில் எல்லா அண்டங்களையும் எல்லாப் பொருள்களையும் எல்லாச் சீவர்களையும் எல்லா வொழுக்கங்களையும் எல்லாப் பயன்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட் சத்தியால் தோன்றி விளக்கஞ் செய்விக்கின்ற **இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின்** பூரண வியற்கை யின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவுந் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற வாழ்வே இந்த மனிதப் பிறப்பினால் அடையத் தக்க ஆன்ம லாபமென்று உண்மையாக அறிய வேண்டும்.”

“கடவுளின் அருளைச் சீவகாருணிய வொழுக்கத்தினால் பெறக்கூடும். வேறெந்த வழியாலும் பெறக்கூடாது. ஞானவழியென்பதும், சன்மார்க்கமென்பதும் சீவகாருணிய வொழுக்கமென்பதும், அஞ்ஞான வழியென்பதும் துன்மார்க்கமென்பதும் சீவகாருணிய மில்லாமை என்பதும் அறியப்படும். அதாவது புண்ணியமென்பது சீவகாருணியம் என்றும், பாவமென்பது சீவகாருணிய மில்லாமை என்றும் அறிய வேண்டும். சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக வுண்டாகிற ஆன்ம வுருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடுசெய்து வாழ்வதே சீவகாருணிய ஒழுக்கமாகும்.”

“சீவர்கள், பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதாயினும், இவ்வாறு உண்டாகும் என்று அறிந்தபோதாயினும் கேட்ட போதாயினும் ஆன்ம வுருக்க முண்டாகுமென்றறிய வேண்டும்.... சீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கையுண்மை ஏக தேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் அனைவரும் ஒருரிமையுள்ள சகோதரர்களே யாகும். சகோதரர்களுளொருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோது மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகும்.... **செம்மண்ணினால் தேக வாழ்க்கைக்கு வீடு கட்டிக் கொள்வதுபோல மனமுதலான கரணேந்திரியங்கள் சீவவாழ்க்கைக்கு கடவுளால் கட்டிக் கொடுககப்பட்ட ஒரு சிறிய வீடாகும்**.... ஆதலால் கடவுள் அருளாக்கினைக்குச் சீவர்களிடத்துச் சீவர்கள் காருணியம் வைப்பதே சம்மதமெனறு உண்மையாக அறியவேண்டும்.”

“சீவகாருணிய வொழுக்கத்தில் அபரசீவ காருணிய மென்றும், பரசீவகாருணியமென்று மிருவகையாம்; அவற்றில் பசிநீக்கலும் கொலை நீக்கலும் பரசீவகாருணியமாதலால் விசேஷமாகக் குறிப்பிட்டதென்றறிய வேண்டும்.... பசியினால் வருந்துன்பத்தை நீக்கலும் கொலையினால் வருந்துன்பத்தை நீக்குதலுஞ் சீவகாருணியத்திற்கு முக்கிய லக்ஷியமாகக் கொள்ள வேண்டும்.”

வள்ளலார் இந்த சீவகாருணிய ஒழுக்கத்தைப் பற்றி அழுத்தந் திருத்தமாகவும், வெகு தெளிவாகவும் விளக்கிவிட்டு, மாமிசவாகாரஞ் செய்வதை மிகவும் அக்கிரமமானது என்பதை ஆதாரங்களுடன் வற்புறுத்துகிறார்.

பசி தீர்க்கும் கடமைபற்றி எவ்வளவு விளக்கமாகவும் அழுத்தமாகவும் சொல்ல முடியுமோ அவ்வளவும் சொல்லி விட்டு சீவகாருணிய வொழுக்கமுடையவர்களாகிச்சீவர்களைப் பசிஎன்கிற அபாயத்தில் நின்றும் நீங்கச் செய்கின்றவுத்தமர்கள் எந்தச் சாதியாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் செய்கை யுடையவராயினும் அவர்கள் யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையராவார்களென்று சர்வ சக்தியையுடைய **கடவுள்** சாட்சியாகச் சத்தியம் செய்வோமென்றறிய வேண்டும்” என்று கூறிவிட்டுச் சமரசவேதம் என்ற தலைப்பில் இன்னும் பலவாறாக இதுபற்றி விளக்கிச் சொல்லுகிறார்.

அடுத்தபடியாக தனி மனிதனின் தினசரி வாழ்வில் அனுஷ்டிக்கவேண்டிய நடைமுறை நியதிகளை பற்றி விளக்குகிறார். ஒவ்வொரு சாதாரண மனிதரும் சரி, பெரிய பெரிய அறிஞர் என்று சொல்லப் படுபவர்களும் சரி, அவற்றைக் கையாண்டு வாழ்க்கையை நடத்தினால் எவ்வளவோ பயன்உண்டு, தனி மனிதனுக்கு மட்டும் அல்ல; மனித சமுதாயம் பூராவுக்குமே நற்பயனுண்டு. எனவே அடுத்த இதழில் இதுசம்பந்தமாக வள்ளலாரின் கொள்கையென்ன வென்பதையும் ஆராய்வோம். (தொடரும்)

தனிப்பெருங்கருணை

அட்டைப்பட விளக்கம்

அழகே உருவெடுத்து நிற்கும் அந்த அணங்கின் முகத்தில் ஏன் அவ்வளவு சலனம்? ஆழ்ந்த யோசனை, மேற்கொண்டு என்ன செய்வதென்ற பாவனை, அத்தனையும் கலந்து அவளுடைய அழகு முகத்திலே அலாதியான மாறுதலை உண்டாக்கி விட்டன. ஆயினும் அதில் இன்பப் பூரிப்பின் ரேகையும படர்ந்து, திருப்தியின் பூரணத்துவமும் இல்லாமலில்லை.

அவள் பருவகால யுவதி மட்டும் அல்ல, அண்மையில் ஒருவனை மணந்த புது மணப் பெண். புது மணத் தமபதிகளின் இன்ப வாழ்வில் ஒரு புரையோட்டமும் இல்லை. கடந்த இரவு முழுமையும் அவள் அவனுடன் இன்பத்தில் திளைத்து, எத்தனையோ ஆனந்த உரையாடல்கள் நிகழ்த்தி மகிழ்ந்திருக்கிறாள். அந்த நிகழ்ச்சிகள் அவளுடைய வாழ்க்கையில் பரிபூரண இன்பம் நிறைந்த ஓர் இரவு. அப்படியிருக்க அவளுடைய ஆழ்ந்த யோசனை எதற்காக/ எல்லாம் ஒரு கிளி செய்த வேலை தான்!

பொழுது புலர்ந்தது. அன்றாட வேலைகள் பல அவளுக்குண்டு. கிளிக்குப் பாலும் பழமும் புகட்டுவது அவளுடைய அன்றைய முதல் வேலை. அவசரம் அவசரமாகப் பாலையும் பழத்தையும் எடுத்துக்கொண்டு வந்தாள். அந்தக் கிளி அவளைக் கண்டதும் குதூகலத்துடன் முன் இரவில், அவள் அவனுடன் நடத்திய உரையாடலை அப்படியே திருப்பி ஒப்பிக்க ஆரம்பித்தது!

நாணம் அவளைத் திகைக்கவைத்தது. ஆயினும் காதலனின் இன்ப வார்த்தைகளைத் திரும்பவும் கேட்பதிலே ஒரு பூரிப்பு. அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது. காதலனுடன் இனபுற்றிருந்த காலை, கிளியும் அவ்வறையில் இருந்தது! எனறு சொன்னதைச் சொல்வது தானே கிளியின் இயல்பு!

ஆனல் இப்படியே கிளி வருவார் போவாரிடமும் சொல்லி விட்டால் ...... அதன் வாயைப் பொத்திப் பொத்திப் பார்த்தாள். ஊஹூம்! பயனில்லை. அதனுடைய வாயை மூடுவதெப்படி? ...... பவளவாய் இதழ்களில் மகிழ்ச்சி ரேகை படர, மோவாயில் விரல் வைத்து அவ்வளவு பெரிய யோசனையுடன் அவள் நிற்பதற்குக் காரணம் இதுதான்.

"நேயக் கலவி மயக்கத்தே......

வாயைப் பொத்தும் மடநங்கையீர்...

கபாடம் திறமினே......

என்று புலவர் இந்த நிகழ்ச்சியைக்குறித்து அற்புதமாக வர்ணித்து வளக்குகிறார். இதையே இவ்விதழின் அட்டைப் படமும் வெகு அழகாக எடுத்துக்காட்டி விளக்குகிறது.

பழந்தமிழ் இலக்கியச் செல்வத்தில் கவிஞர் ஜெயங் கொண்டார், கருணாகரத் தொண்டமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய கலிங்கத்துப் பரணி சிறந்ததொரு காவியமாகும். அக் காவியத்தில் கபாடத்திறப்பு என்னுந் தலைப்பில் வரைந்துள்ள சிறந்த பாடல்களில் இதுவும் ஒன்று.

பிராயச் சித்தம்

[அநுத்தமா]

[நிகிலா என்னமோ ரொம்ப நல்லவள் தான். ஆனால் அவள் வெளிக்காட்டாது உள்ளூர வளர்த்துவிட்ட பொறாமை போல்லாதது, பயங்கரமானது! அதுதான் இவ்வளவு விபரீதமான விளைவுக்குக் காரணம்]

பஸ்ஸ்டாண்டில் நிகிலா நிற்பதைக் கண்ட ராமகிருஷ்ணன் மோட்டார் சைக்கிளைச் 'சடக்'கென்று நிறுத்தினான்.

"ஹலோ, நிகிலா! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்பார்களே, அது போல்......"

"அட, என்ன! பழமொழியெல்லாம் பலமாக இருக்கிறதே! மிதமிஞ்சிய சந்தோஷம் போலிருக்கிறது! ஏதேனும்விசேஷம் உண்டோ?.. டெல்லிப் பரீட்சை ரிஸல்ட் ஏதாவது வந்து விட்டதோ?"

"அதற்கு நிகரான சந்தோஷம்தான். அதிருக்கட்டும்; உனக்கு இப்பொழுது எங்கேயும் வேலை இல்லையே?"

நிகிலா எதும் பதில் கூறுவதற்குள் 'பூம், பூம்' என்று பின்னால் ஒரு பஸ்ஸின் பயங்கரக் குரல் கேட்டது.

"சரி, சரி; வழியை விட்டு நகரு; அப்புறம் ஆனந்த வர்ஷம் பொழியலாம்" என்றாள் நிகிலா, புன்முறுவல் பூத்த முகத்துடன்.

"ஓ, ஓ! இதோ நகர்ந்துவிட்டேன்!" என்று கூறியவாறு ராமகிருஷ்ணன் தன் மோட்டார் சைக்கிளைச் சற்று முன்னே தள்ளிச் சென்று திருப்பிக் கொண்டு வந்து, பஸ்ஸின் பின்புறத்தில் நிறுத்தினான்.

பஸ்ஸில் ஏறப்போன நிகிலா, திரும்பி அவனை பார்த்து ஒரு தரம் தன் நெற்றியை ஒய்யாரமாய் நெறித்தாள். அழகாக அவள் புருவங்களும் வளைந்தன. அவன் அந்த சூசகத்தைக் கண்டு மிரண்டு விடவில்லை. இரு கைகளையும் கட்டிக் கொண்டு அவள் வரவுக்காகக் காத்து நின்றான்.

பஸ்ஸில் ஏறாமல் அவனிடம் வந்தாள் நிகிலா. "என்ன சமாச்சாரம்? சொல் சீக்கிரம்! என்னால் இங்கேயே நின்று கொண்டு உன் அழகைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?" என்று ஒரு போலிக் கோபத்துடன் அவனைக் கடிந்தாள்.

"அதற்குத்தான் நீ ஒருவனைச் சம்பாதித்துக் கொண்டு விட்டாயே?" என்று சிரித்தவாறே பதிலளித்தான் ராமகிருஷ்ணன்.

நிகிலாவின் முகம் நாணமும் மகிழ்ச்சியும் மேலிட, ரோஜாநிறத்துடன்விகசித்தது. தன்விவாகம் நிச்சயம் ஆகிவிட்ட விஷயம் இவ்வளவுதூரம் பிரகடனம் ஆகிவிட்டதா என்று அவள் எண்ணிக் கொண்டாள். தன் மணாளன் ஸ்ரீ யதுநாதனின் முகம் அவளது மனக்கண் முன்காட்சி யளித்தது!

"அதிருக்கட்டும், என்ன விஷயம் சொல்லேன்; நான் சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும்!" என்றாள் அவள்.

"என்ன அவசரம்? மிஸ்டர் யதுநாதம் உன்னைக் காணாது ஒரு கணமும் தாளாரோ?"

600 008

"அதெல்லாம் ஒன்றுமில்லே."

"பின்னே என்ன ? ஒரே நாளில் உன் பழைய நண்பர்களை யெல்லாம் மறந்துவிட வேண்டுமா என்ன ?"

"அதென்ன அப்படிப் பேசுகிருய், ராம் ? உன்னை நான் ஏன் மறக்கிறேன் ?"

அவள் பேச்சில் ஒவ்வொரு வார்த்தையும் அர்த்த புஷ்டியுடன் கனத்தது. அவள் கண்கள் ராமகிருஷ்ணனைப் பரிசோதித்தன. அவன் சிரித்தான்.

"ரொம்ப தாங்க்ஸ்! ஒரு பெண்ணின் வாயிலிருந்து அவ்வளவு மாத்திரம் வந்து விட்டால் வேறு என்ன வேண்டும் !" என்றுன் குறும்பாக.

"ஒரு பெண் என்ன ? உன்னை இன்னும் மறக்காத......"

ராமகிருஷ்ணன் காலால் விசையை அழுத்திஞன். அவன் கவனம் வண்டியைக் கிளப்புவதில் ஆழ்ந்திருந்தது. நிகிலா அவன் பக்கத்துக் கூடையில் அமர்ந்தாள்.

* * *

நிகிலாவும் ராமகிருஷ்ணனும் வைத்தியக் கல்லூரியில் ஒன்ருகப் படித்தவர்கள். இப்பொழுதும் ஒரே ஆஸ்பத்திரியில் வேலே செய்து வந்தனர். ஆதலால் தான் அவர்களிடையே இவ்வளவு சகஜ பாவம்.

வண்டி புறப்பட்டு, பறங்கிமலையை நோக்கிச் செல்லும் ரஸ்தாவில் வேகமாகப் பறந்து சென்றது.

"நான் அகத்துக்கு ஆறு மணிக்குள் போய் விட வேண்டும்," என்று எச்சரித்தாள் நிகிலா.

"ஆகட்டும்."

"நீ என்னவோ சொல்ல வந்தாயே, ராம் ?"

"ஆமாம்—ஏன் நிகிலா, ஸ்ரீயதுநாதம் இந்த ஊரிலேயே இருக்கப் போகிருரா?"

"இல்லேயே, அவருக்குப் பெங்களூரில்தானே வேலே. சரி—நீ சொல்ல வேண்டும் என்று.."

அவள் கேள்வி காதில் விழாதது போல் ராமகிருஷ்ணன் அவளே மேலும் விசாரிக்கத் தொடங்கிஞன்.

"அப்பொழுது, நீயும் அங்கேயேதான் பிராக்டிஸ் ஆரம்பிக்கப் போகிருயா ?"

"ஆமாம்;—நீ ஏதோ சொல்கிறேன் என்று ஆரம்பித்து விட்டு...."

"நிகிலா, உனக்கு அங்கு போனல்...."

"ராம், நீ ஏதோ சொல்கிறேன் என்ருயே, அதைக் கூருமல்........"—அவள் குரலில் தொனித்த கண்டிப்பை அவனுல் தட்ட முடியவில்லே.

"அது ஒன்றும் பிரமாதமில்லே. சும்மாதான் உன்னைச் சைக்கிளில்...."

நிகிலா அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவன் எதையோ மறைக்கிருன், எதையோ சொல்வதைவிட்டு மழுப்பப் பார்க்கிருன் என்று அவள் ஒரு நிமிஷத்தில் அறிந்துகொண்டு விட்டாள். அவன்வரையில் இது வெகு சாதாரண விஷயமே. அடிக்கடி அவன் ஏதாவது ஒரு 'தண்டா'வில் அகப்பட்டுக்கொண்டு விடுவான். பிறகு இப்படித்தான் ஊரைச் சுற்றிக்கொண்டு கடைசியில் மெள்ள விஷயத்தைத் தெரிவிப்பான். நிகிலா விடுவிப்பாள். அவள், அவன் வயதோ, அல்லது அவனைவிட ஒரு வயது பெரியவளோ தெரியவில்லே.

"சரி, சொல் விஷயத்தை. 'அக்கா'வுக்கு என்ன வேலே இப்பொழுது?" என்று கேட்டாள் நிகிலா.

அவர்களிடையே இது ஒரு வேடிக்கை. இந்த மாதிரிச் சிக்கல்களிலிருந்து அவள் அவனை விடுவிப்பது கல்லூரி முழுவதும் அறிந்த விஷயமே. ஆதலால் அவர்களுடன் படித்த மாணவர்கள் நிகிலாவுக்கு 'அக்காப்' பட்டம் கட்டியிருந்தனர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லே, நிகிலா. நீ சீக்கிரமே ஊருக்குப் போய்விடுவாயோ ?"

"இல்லே, இன்னும் கொஞ்ச நாள் ஆகும்."

"கலியாணம் எப்பொழுது?"

"பதினைந்தாம் தேதி.—இதோ பார், ராம். உன்னுடன் வெட்டிப் பேச்சுப் பேச அழைத்து வந்தாய் என்றுல், என்னை இங்கேயே விட்டுவிடு."

"இல்லே. உன்னிடம் சொல்ல ஒரு விஷயமும் இருக்கிறது. ஆனுல் அது ஒன்றும் புதிய, அல்லது அதிசயமான செய்தி யில்லே. நீ ஊருக்குப்போய் விடப் போகிருயே. ஒருநாள்...."

"உனக்கு எதற்கு இந்த ஒரு 'அக்கா?' நெருக்கடியில் உதவத்தான் அவள் வேண்டும். சதா உன் மனத்தை ரமிக்க ஒரு நாரீமணி...."

ராமகிருஷ்ணனின் முகம் சிரித்து விரிந்தது. அதைக் கண்ட நிகிலா தானும் திருப்தியுடன் புன்முறுவல் பூத்தாள். ராமகிருஷ்ணன் ஒரு கணம் அவளை நோக்கிவிட்டு மீண்டும் முன்னே பார்க்கலாஞன்.

சாயந்திர வேளை. கீழே 'கோல்ப் கிளப்'பில் பந்து அடிப்பது கண்ணில் பட்டது. இடதுபுறம் தோட்டமும் கிடந்தது. எத்தனையோ தடவைகள் பார்த்திருந்த அந்த வழி இன்று புது வசீகரத் துடன் பொலிந்தது நிகிலாவின் கண்களுக்கு. இந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்குப் போய் விடப் போகிறோமே எனும் எண்ணத்தினால் எழுந்த உணர்ச்சி அது. செக்கர் வானத்து லீலை களைக் கவனித்தவாறு மௌனம் சாதித்தாள் நிகிலா.

அவளைத் திரும்பி நோக்கிய ராமகிருஷ்ணன், சிரித்துக்கொண்டே, "ஏது பலத்த யோசனை போலிருக்கிறதே?" என்று கேலி செய்தான்.

"என்ன செய்வது, நீயோ சொல்லமாட்டேன் என்கிறாய். நான் ஏதோ யோசனை......"

"இன்ப எண்ணங்கள். அந்த யதுநாதம்....!"

"உனக்குமாத்திரம் என்னவாம்? உன் மனத் திலும்தான் ஒரு ரமணி...."

அதை மிகவும் ரசிப்பவன் போல் சிரித்தான் ராமகிருஷ்ணன். "உம், இரண்டு பேருக்கும் ஒரே நிலைமைதான் என்கிறாயாக்கும். என்ன?"

"நீ தான் சொல்லேன்."

"நீ சொல்லி விட்டால் வாஸ்தவம் இல்லாமல் போய் விடுமா? அவள் பெயர் தான் எனக்கு இப்பொழு ஞாபகம் வரமாட்டேன் என்கிறது."

"அதை எத்தனை தரம் கேட்டாலும் சலிப் பில்லை போலும்! நான் ஒரு தரம் சொல் லட்டுமா?"

"சொல்லேன், பார்ப்போம்!"

"சொல்லவா? இதோ சொல்லியே விட் டேன். மு..கு..ந்..தா. முகுந்தா! திருப்தி தானே? அல்லது ஒரு வேளை உரக்கப் பாரா யணம் செய்யவா?"

அவள் குரலில் ஒரு பெருமிதம். தன் தங்கை முகுந்தாவிடம் ராமகிருஷ்ணன் பட்சமாக இருப் பதை நிகிலா அறிவாள். அவர்கள் தகப்பனா ரிடம் அவனாகவே முகுந்தாவைத் தான் மணப்பதாகக் கூறியிருந்தான். ராமகிருஷ்ண னின் தாயாரும், நிகிலாவின் தாயாரும் பாலிய சிநேகிதர்கள். ஆதலால் இந்த விஷயம் இரு குடும்பங்களுக்கும் மிகவும் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. தான் கூறியதை அவன் எப்படி அநுபவிக்கிறான், அதை வைத்துக் கொண்டு எப்படி அவனைக் கேலி செய்யலாம் என்று ஆவலுடன் நோக்கினாள் நிகிலா.

"நீ நினைத்தது தவறு என்றால்?"

"மறுபடியும் அந்தப் பழைய விளையாட்டா? எனக்குத் தெரியாதோ, இந்தத் தடவை அதெல் லாம் ஒன்றும் மசியாது என்று?"

"இல்லை, நிகிலா."

"அதெல்லாம் ஒன்றும் நான் ஏமாந்து விட மாட்டேன். 'கமலாவைவிட்டால் விமலா, லலி தாவை விட்டால் வினதா," எனும் நாட்கள் மறைந்து எங்கள் ராமகிருஷ் ணன் நிர்ணய புருஷனாக மாறி விட்டதை நான் அறி யேனா?"

"ராம கிருஷ் ணனை நீ தெரிந்து கொண் டது அவ் வளவு தான்!"

"அப்புறம் நான் முகுந்தாவிடம் சொல்லி விடுவேன், தெரியுமா ?" என்று விளையாட்டாக மிரட்டினுள் நிகிலா.

"இல்லே, நிகிலா. நான் சொல்ல வந்த விஷயம் அதுதான். உன் கலியாணம் என்றைக்கு என்றுய் ?"

அவன் நிஜமாகவே ஏதோ சொல்லப் போகிருன் என்று தெரிந்தவுடன், வம்புக்கு நாக்கைத் தீட்டிக் கொண்டாள் நிகிலா.

"அது தான் சொன்னேனே, பதினைந்தாம் தேதி என்று. நீ என்ன சொல்லப் போகிருய்?"

"எனக்கும் அன்றேதான் விவாகம்."

"நிஜமாகவா ? அப்பா ஒன்றும் சொல்லலே இல்லேயே ? அடி கள்ளி, முகுந்தா !"

"இல்லே, நிகிலா. நீ நினைக்கின்றபடி இல்லே. நான் முகுந்தாவைக் கலியாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லே."

" பின்பு யாரையாம் ?"

"நம் காலேஜில் வனஜா இல்லே ? அவளேத் தான்!"

"ஆ! வனஜாவா ? அவள் நாகரிகம் உனக்குப் பிடிக்காது என்பாயே ? அவள் பேசுவது...."

"அதெல்லாம் முன்பு."

"இப்பொழுது பரவாயில்லேயாக்கும்? முகுந்தாவின் கதி என்ன ?"

"'கதி' என்று என் சொல்லுகிருய் ? பயங்கரமாக இருக்கிறதே வார்த்தை !"

"பின்னே என்ன ?"

"ஆமாம்! சந்தேக மில்லாமல் !"

நிகிலாவின் முகத்தில் உணர்ச்சிகளின் புரட்சி பிரதிபலித்தது. அவள் ராமகிருஷ்ணனே அண்ணுந்து நோக்கினுள். அவன் கவலேயின்றி, முகத்தில் புன்சிரிப்புத் தாண்டவமாட, ஏதோ ஒரு பாட்டை முணகிக் கொண்டிருந்தான். குரோதமும் வெறுப்பும் நிகிலாவின் முகத்தைத் தீண்டி கோரப்படுத்தின. அவள்மூளே வேகமாக வேலே செய்வதை அவள் முகபாவம் எடுத்துக் காட்டியது.

"என்ன, நிகிலா, அறுபது மைல் வேகம் எட்டட்டுமா ? உனக்கு ரொம்பவும் இஷ்டமாயிற்றே."

"ஆமாம். விடு பார்ப்போம்." நிகிலாவின் முகத்தில் ஓர் அமானுஷ்ய ஒளி தோன்றிற்று.

"இவ்வளவுதான் போக முடியுமா?" என்று கேட்டாள் அவள்.

ராமகிருஷ்ணன் திரும்பி அவளே ஒரு விநாடி பார்த்தான். மீடர் அறுபத்து மூன்று மைல் வேகம் என்றுலே பயம். அவளேக் கேலி செய்வதாக ஆரம்பித்தவன், அவள் பேச்சைக் கேட்டுத் திகைப்புற்றுன்.

'இன்னும் போகட்டுமா ?' என்று கேட்டான்

"போயேன். ஆனுல் ஜாக்கிரதை."

"ஹ, ஹ," என்று சிரித்தான் ராமகிருஷ்ணன்.

"அதோ வண்டி பார். மெள்ள...." என்று எச்சரித்தாள் நிகிலா.

லாகவமாகத் திருப்பிவிட்டு வெற்றி முறுவல் பூத்தான் ராமகிருஷ்ணன்.

"ராம், மெள்ள, மெள்ள. அதோ சைக்கில் !"

"உம் ?"

"என்ன, ஆடுகிருப்போல் இருக்கிறதே?"

"இல்லேயே ?"

"என்ன 'இல்லே'! உன் கையைப் பார், நடுங்குகிறது.

"பைத்தியமா? ஓட்டுகிறது ராமகிருஷ்ணனுக்கும்!"

"சற்று மெள்ளப் போயேன்."

"ஏன் ?"

"காற்றுப் போதாதோ? ஏன் ஆடுகிறது?"

"எங்கே ?"

"நேரே போகவில்லே. ஐயோ, எதிரே பார், பஸ்!"

ராமகிருஷ்ணன் பல்லேக் கடித்துக்கொண்டான்.

"என்னேயே பார்க்காதே, ராம். ஜாக்கிரதை, ஜாக்கிரதை. ஐயோ, அம்மாடி, அந்த நாய்!"

ராமகிருஷ்ணன் தன் கையைப் பார்த்தான். அவள் கூறுவதுபோல் அது நடுங்கத்தான் செய்தது.

"ராம்! ரொம்பவும் ஒரு பக்கமாகத் தள்ளிப் போகிருய்."

"சற்று சும்மா இருக்கமாட்டாய், நிகிலா?"

"நான் என்ன சொன்னேன்? வண்டி உன் வசத்தை விட்டுப்போகிறதே? பக்கத்தில் பள்ளம்!"

"சட் ?"



"பள்ளம், பள்ளம் ! ஜாக்கிரதை."

ராமகிருஷ்ணன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"பள்ளம், ராம்! பாலம் வந்துவிட்டது. எதிரில் ஒரு வண்டி, இரண்டு சைக்கில். கார்....முடியுமா?"

"..........."

"உன்னால்முடியுமா, ராம்? நீ ஜாக்கிரதையாய்த் தாண்டுவாயா?"

"............"

"ராமகிருஷ்ணன்! மெள்ளப் பார்த்துப் போ"

"............"

"கொஞ்சம் வசத்துக்கு கொண்டுவந்து கொள்." அவளுடைய எச்சரிக்கைக்குப் பயன் இல்லை.

வண்டி தடுமாறிற்று. பிறகு நேராகப் பாலத்தின் கைப்பிடிச் சுவரில் முட்டிக்கொண்டு, முரட்டுக்குதிரையைப்போல் பின்புறம் தூக்கிக்கொண்டது. ஒரே நொடியில் ராமகிருஷ்ணனும் நிகிலாவும் காற்றில் தூக்கப்பட்டுத் தரையில் மோதப்பட்டார்கள். விபத்து பாலத்தின் ஆரம்பத்திலேயே நடந்ததால் அவர்கள் ஆற்றில் விழவில்லை. கரையில் விழுந்தார்கள். நிகிலா குப்பை மேட்டில் விழுந்தாள். ராமகிருஷ்ணனின் தலை கல்லில் மோதிற்று.

* * *

நிகிலா கண்ணை விழித்தாள். ஆஸ்பத்திரியில் நர்ஸ் அவளைப் பார்த்து இளநகை புரிந்தாள். நிகிலாவின் கண்கள் சுற்றிலும் பார்க்கலாயின. யதுநாதன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவரைக் கண்களாலேயே கேள்விகள் கேட்டாள். மேலே மிதந்து நின்ற கேள்விக்கு பதில் உடனே கிடைத்து விட்டது.

"ஆமாம், நிகிலா அவன் உடனே போய்விட்டான். எடுக்கும்போதே அவன் உடலில் உயிர் இல்லை."

நர்ஸ் அவரை நிந்திக்கும் பாவனையில் முறைத்தாள்.

நிகிலா கண்களை மூடிக்கொண்டாள்.

* * *

நிகிலா, இன்னும் என்ன தாமதம்?" என்று கேட்டார் யதுநாதன்.

"இல்லை, நீங்கள் இனி என்னை மறந்து விடவேணும். நான் மணம் புரியாது, கன்னிகையாகவே காலங்கழிக்கத் தீர்மானித்து விட்டேன்."

"என்ன, அந்த விபத்தினாலா ?"

"ஆமாம்!"

"அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? நான்கு மாதங்கள் ஆகிவிட்டனவே? இனிமேல்..',

"இல்லை, நீங்கள் என்னை மன்னிக்கவும். உங்களுக்கு நான் தகுதியற்றவள். வெளித்தோற்றத்து நிகிலா வேறு, அந்தரங்க நிகிலா வேறு. அதற்கு மேல் என்னைக் கேட்காதீர்கள்.

உங்கள் உன்னத குணங்களுக்கு ஏற்ற உத்தமி கிடைப்பாள். இந்த மணத்தில் என் மனம் சாந்தி அடையாது. நனே் உங்களுக்கு ஏற்றவள் அல்ல.''

இதைக் கூறிவிட்டு நிகிலா திரும்பிப் பாராமல் நேரே நடந்து சென்றாள். அவள் கண்ணுக்கு மறையும் வரையில் நோக்கிக் கொண்டிருந்துவிட்டு, யதுநாதன் திரும்பினார். அவரது முகம் நிர்மலமாகவே இருந்தது. ஓர் அழகிய குறு நகையுடன் அவர் தனக்குள் கூறிக் கொண்டார்.

'படித்தவளாயினும் சிறியவள்தானே? அதிலும் பெண் உள்ளம் ஆழமானது. இப்படியெல்லாம் கூறி என் மனோ திடத்தைப் பரீட்சிக்கிறாள் போலும். ......அவளேதான் என்னை வழிக்குக் கொண்டுவந்ததாக இருக்கட்டுமே! நான் தினமும் ஒரு முறை கெஞ்சி விடுகிறேன். கரும்பு தின்னக் கூலி வேறா? நான் மிகவும் கெஞ்சிக் கூத்தாடி மன்றாடியதன் பேரில்தான் அவளுடைய மனம் இளகி இணங்கியதாக இருக்கட்டுமே? அதனால் என்ன? பெண் மனமே ஒரு விசித்திர வஸ்து—நிகிலா, நிகிலா!' என்று ஸ்மரித்தபடி சென்றார் அவர். ஆனால் நிகிலா நேர்மாறாக நினைத்தாள்..

'பித்துக்குளி மனிதன். பெண்களெல்லாம் மென்மையான புஷ்பங்கள், அவைகளைப் பாதுகாத்துவரும் கண்ணிய சீலர்கள் ஆண்கள் என்று கருதும் அப்பாவி மனிதர்களில் ஒருவர் இவர். இவருக்கு எங்கே புரியப் போகிறது, என்னை பிரும்மஹத்தி தோஷம் சுற்றிக் கொண்டு இருக்கிறது என்று? நான் படித்த மனோதத்துவமெல்லாம் ஒரு மனிதனின் தீரத்தைக் கெடுக்கத்தான் உபயோகப்பட்டது என்பதை யார் அறிவார்கள்? அரிது என்று அவர் உணர இடமேது? துவேஷம்,வெறுப்பு, உணர்ச்சிகள், பொறாமை—இவைகளால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு பெண் எந்தக் கொலைக்கும் பின் வாங்காத பேயாக மாறக்கூடும் என்று தான் அவர் எப்படி உணர்வார்? இவரைப் போலவும் மனிதர்கள் பூமியில் இருக்கவேதான் மழை கொஞ்ச மேனும் பெய்கிறது.'

அவள் மார்பைப் பிளந்து கொண்டு புயல் காற்றைப் போன்ற பெருமூச்சு வெடித்தது. யதுநாதன் என்றும் தனக்குக் கிடைக்க மாட்டாரே என்று எண்ண, அவளது இருதயம் சுக்கு நூறாகச் சிதைந்தது.

'கிடைக்க மாட்டாரா?' என்று மெல்லிய குரலில் கேட்டது அவளது அந்தராத்மா. அவரைப் பரீட்சிக்க விரும்பவில்லை அவளது மனச்சாட்சி. அவருடைய தூயவாழ்க்கையை அசுத்தப் படுத்த இடங்கொடுக்கவில்லை அவள் உள்ளம்.

தானே மேற்கொண்ட இந்தத் தியாகமே தான் போலும் அவள் செய்த குற்றத்திற்கு ஒரு பிராயச்சித்தம்.

அர்த்தநாரி

'தராசு'

சிற்ப ஆராய்ச்சிகளில் ருசிகரமான தகவல்கள் கிடைக்கின்றன. இது சம்பந்தமான ஆராய்ச்சிகளில் அர்த்தநாரியைப் பற்றிய இக்கட்டுரை சென்ற இதழில் ஆரம்பித்து இவ்விதழில் முடிவடைகிறது.

முதலில கும்பகோணத்துச் சிலையை அமைத்து, அதன்மூலம் தெரிந்து கொண்ட சில விஷயங்களைத் தஞ்சைச் சிலையில் புகுத்தியிருக்கவேண்டும். இரண்டு சிலைகளுக்கும் இடுப்பிற்குமேல் ஒரு வளைவு கொடுத்திருப்பதானது அழகுக்கு அழகு செய்வதுபோல் காண்கிறது.

இடது புறத்துக் காதுகளில் அணியப்பட்டிருக்கும் காதணிகளின் வேலைப்பாடு மெச்சத் தக்கதாகும். கும்பகோணத்துச் சிலையின் காதில் குண்டலம் காணப்படுகிறது. தற்காலத்துச் சிற்ப சாஸ்திரிகள், இச்சிலையானது சிவன்ரூபமும், காளி ரூபமும் கலந்து அமைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். தஞ்சாவூர் சிலையைப்பற்றி ஒன்றும் குறை கூறுவதற்கில்லை. ஒரு சமயம் சிலையானது கொஞ்சம் சிறிதாக இருப்பதனால், அதன்மீது விசேஷக் கவனம் செலுத்தமுடியாது போயிருக்கக் கூடும். தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய இரண்டு இடங்களிலுள்ள சிலைகளின் வலது கால்கள் இடது கால்களைவிடச் சற்றுப் பருமனாகக் காணப்படுகின்றன. இந்தப் பருமன் சற்று லட்சணக் குறைவைத்தான் காட்டுவதாகச் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். புதுக்கோட்டைப் பிராந்தியத்திலிருந்து ஆராய்ச்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருவேங்கைவாசல் கோயில் சிலையின் வலது கால் பருமனாக இருந்தபோதிலும் லட்சணக்குறைவில்லாது இயற்கையை ஒட்டியிருப்பதாகவே தோன்றுகிறது.

திருச்செங்கோடு அர்த்தநாரி சிலை ஒரே முகமும், இரண்டே கைகளும் பொருந்தி கலையழகுடன் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறது. வலது கையானது நீண்டதொரு தண்டத்தை பின் பக்கத்திலிருப்பதைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இடது கையானது இடுப்பில் சற்று லாவகவடிவமாக வைக்கப்பட்டிருக்கிறது. பண்டரீபுரத்துக் கிருஷ்ண உருவம் போன்றதாகத் தோன்றுகிறது. சிரசின்மீது ஒரு கொண்டை அது வலதுபுறம் சாய்ந்து கொண்டிருப்பதால் கிருஷ்ணன் கொண்டையென்று கூறலாம். சிற்பக் கலையின் லட்சணங்களில் பல இந்தச் சிலையில் காணலாம். அத்துடன் இந்த சிலை வைரம் பாய்ந்த கருங் கல்லினால் செய்யப்பட்டிருக்கவேண்டும். பழனியிலுள்ள ஆண்டவன் சிலை எந்த கலப்புக் கற்களால் செய்யப்பட்டிருக்கின்றதோ அதே போன்றதாக இந்த சிலை இருக்கக் கூடுமென்று இப்பொழுது ஊகிக்க இடம் தருகின்றது. திருச்செங்கோட்டில் மட்டுமே அர்த்தநாரி தனியாக மூலஸ்தானமாக மலையின்மீது காணப்படுகிறது. அர்த்தநாரி இருக்கும் கர்ப்பக்கிரஹத்தை ஒட்டியுள்ள அர்த்த மண்டபமும், மஹா மண்டபமும் கூட மிகுந்த வேலைப்பாடமைந்தவை, கீழேஇருக்கும் கோயிலில் அர்த்தநாரி உருவம் கிடையாது. கொங்கு நாட்டிலேயே பேரூருக்கு அடுத்தாற்போல் சிற்ப வேலைகளை திருச்செங்கோட்டில்தான் காண முடியும். ஆனால் பேரூர் திருப்பணியானது பல காலம் பிற்பட்டு எற்பட்டதென்று தெரிய வருகிறது.

தாராசுரத்திலிருக்கும் அர்த்த நாரியானது மனித உருவம் போல் அமைந்ததல்ல. இந்தச் சிலைக்கு மூன்றுமுகங்களும், எட்டு புஜங்களும் இருக்கின்றன. இதே போன்ற அர்த்த நாரி

திருச்செங்கோடு

சிலை தமிழ் நாட்டில் எங்குமே கிடையாது. இந்தச் சிலையை ஒரு தெய்வீக அமைப்பாகத்தான் கூற வேண்டும். சாதாரண உருவத்துக்கும், இதற்கும் பெரிய மாறுபாடு இருக்கிறது.

இந்தச் சிலையைச்சிருஷ்டித்த சிற்பியின் கருத்து அர்த்தநாரி உருவம் எல்லாக் கோயில்களிலும் இருப்பதுபோல் தாராசுரத்துச் சிலையும் இருந்தால் என்ன பயன் என்று கருதியேதான் இம்மாதிரியான வேறுபாட்டைப் புகுத்தியிருக்க வேண்டும். சோழர்களுடைய திருப்பணி பல்லவர்களுக்குச் சற்றும் சளைத்ததல்லவென்று கூறுவதுபோலிருக்கின்றது இச்சிலை. வலது புறத்திலுள்ள ஒரு கையில் ருத்ராட்சமாலை காணப்படுகிறது. மூன்று முகங்களில் நேர்முகம்தான் அர்த்தநாரியைக் குறிப்பதாகக் கூறலாம். இடது கை ஒன்றில் (அன்னபூரணி சிலைக்கு கையில் ஒரு கிண்ணம் வைக்கப்பட்டிருப்பதுபோல்) ஒரு சிறு கிண்ணம் காணப்படுகிறது. இடது பாதத்தில் செய்யப்பட்டிருக்கும் நகாஸ் வேலைகள் வியக்கத் தக்கதாகும். இம்மாதிரியான சிலை அமைப்பதற்கு 'மாயமத' என்னும் சிற்ப சாஸ்திரம் ஆதாரம் கூறுகிறது. கவனிப்பாரற்றுத் தூசியும், புழுதியும் இச்சிலையின்மீது காணப்படுவதால் பூருவான ஆராய்ச்சியையும் செய்ய முடியாதிருக்கிறது.

தாராசுரம்

திருவையாற்றுக் கோயிலில் உள்ள அர்த்தநாரியைத் தாராசுரத்திலுள்ளதைப் போன்றதென்றோ அல்லது இதுவரையில் கூறப்பட்டுவந்த சிலைகளைப் போன்றதென்றோ கூறமுடியாது. இந்தச் சிலையில் அடிப்படைத் தத்துவமே மாற்றப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இதுவரையில் கூறிவந்த சிலைகளுக்கு இடதுபுறத்தில்தான் சக்தியின் பாகத்தைக் காணமுடிகிறது. ஆனால் இச்சிலையில் சக்தியின் பாகத்தை வலதுபுறத்தில் காணலாம். இரண்டு கைகளும் ஒரே முகமும் இருக்கின்றன. மற்றச் சிலைகளைவிட இச்சிலையில் விசேஷமான அலங்காரங்களைக் காணமுடியும். ஒவ்வொரு அங்கத்தையும் அமைப்பதில் பிரத்தியேகமான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. ரிஷபத்தின் மீது சாய்ந்துகொண்டிருக்கும் இச்சிலை ஒரு விதமான கவர்ச்சியைக் கொடுக்கிறதென்று கூறலாம். ரிஷபத்துக்குச் செய்யப்பட்டிருக்கும் அலங்காரம் மிக அற்புதமானது. வலதுபுறத்துக் கையை மடக்கி உயர்த்தியிருக்கிறது. தாமரைமொக்குப் போன்ற ஒரு புஷ்பமும், கையில் காணப்படுகிறது. இடது கையை மடக்கி இடுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிலையைப்பற்றி இப்பொழுது ஒரு சிலர் குறை கூறுகிறார்கள். அதாவது, இடுப்பிற்குமேல் மார்புக்குக் கீழ் உள்ள பாகம் இன்னும்கொஞ்சம் பருமனாக இருந்தால் இச்சிலை இன்னும் கொஞ்சம் கவர்ச்சிகரமாக இருக்கும் என்பதேயாகும். இந்தச் சிலையின் பாதத்தில் செய்யப்பட்டிருக்கும் மாற்று கலப்பானது. மதுரைக் கோயிலில் இருக்கும் நடராஜருக்கு கால் மாற்றம் செய்திருக்கும் தன்மையை ஒத்ததென்று கூற வேண்டும். இச் சிலையின் சிரசில் பொருத்தப்பட்டிருக்கும் கிரீடம் மிகுந்த விலைப்பாடுள்ளது.

தமிழ்நாட்டுக் கோயில்களைப் போல் கீழ்த்திசைத் தீவுகளில் கோயில்களும், சிலைகளுமிருந்தாலும், அர்த்தநாரி சிலையொன்று இருப்பதாக இதுவரையில் ஒருவரும் கூறவில்லை. இருந்தபோதிலும் அர்த்தநாரியை ஆதாரமாகக் கொண்டுதான் பல தேசத்து நாட்டியத்தில் உமா தாண்டவம் என்பதை இணைத்துக் கொண்டதாகப் பலி தீவிலிருந்து சென்னைக்கு சில வருஷங்களுக்கு முன் நாட்டியமாடவந்திருந்த கோஷ்டியார் கூறினார்கள். நம் நாட்டைப்போல், இவர்களுடைய நாட்டியத்தில், உமாதாண்டவத்தை ஒருவரே ஆடாது, ஆண் பெண், இருவருமாக முறையே வலது, இடதுபுறத்திலிருந்து கொண்டு தாண்டவத்தையும், லாஸ்யத்தையும் ஆடத் துவங்குகிறார்கள். இதுதான் அவர்களுடைய பாணி என்றும் கூறினார்கள். தனித் தனியாகத் தாண்டவமும், லாஸ்யமும் துவங்கப்பெற்று முத்தாய்ப்புக்கு வரும்போது மிஸ்ரமாவதைத்தான் 'உமா தாண்டவ'மென்று அவர்கள் கூறுகிறார்கள். பலி நாட்டியக் காரர்களுடைய கற்பனையும், கருத்தும் எப்படி இருந்தபோதிலும் கீழ்த்திசைத் தீவுகளில்

திருவையாறு

உள்ளவர்களுக்கு அர்த்தநாரியைப் பற்றி ஒரு வாறு தெரிந்திருக்கிறதென்ற விபரம் அறிய முடிகிறது. நடராஜருக்கு அடுத்தஸ்தானம் அர்த்த நாரிக்குக் கொடுக்கப்படுகிறதென்று அவர்கள் கூறினார்கள்.

நாட்டியத்தின் தத்துவத்தை அறிந்து கூறுபவர்கள், உமாபதியே தன்னுடைய அர்த்தநாரி உருவத்தின்மூலம் தாண்டவத்தையும், லாஸ்யத்தையும் ஒரே சமயத்தில் வெளிப்படுத்துவதாகக் கூறுகிறார்கள். ஆண் பெண் இருபாலருடைய கலையழகைத் தனித்தனியே கண்டு களிப்பதுபோல் அர்த்தநாரி உருவத்தின்மூலம் அநுபவிக்க முடியவில்லை யென்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் அர்த்தநாரி உருவத்திலிருந்து அநுபவிக்கும் அழகு ஒருவிதமான தனியழகே யாகும். இந்த அழகை மற்றதுடன் ஒப்பிட்டுக் கூற முடியாது. இந்தச் சிலையானது அழகுக்கு அழகு செய்வது போலிருப்பதால்தான் பண்டைய கால அரசர்கள் ஒவ்வொரு கோயிலிலும் ஸ்தாபிதம் செய்ய முன் வந்திருக்கிறார்கள். எவ்வளவோ சிரமத்தின் மீது அமைக்கப்பட்ட சிலைகள் இன்று மிகவும் கேவலமான நிலைமையில் இருக்கிறதென்பதை இங்கு எழுத வேண்டி யிருக்கிறது.

நர்த்தன அர்த்தநாரி யென்ற சிலையைப் பற்றிய விபரம் இப்பொழுது ஆராய்ச்சியில் இருந்து வருகிறது. அத்தகைய சிலையைப் பார்த்திருப்பதாக ஒருவரும் இதுவரையில் கூறவில்லை. ஆனால் சிற்ப சாஸ்திரத்தில் மட்டும் இச்சிலையைப் பற்றிய விபரம் காணப்படுகிறது. நர்த்தன கணபதியைச் சிருஷ்டித்திருக்கும் சிற்பிகள் நர்த்தன அர்த்தநாரியைச் சிருஷ்டித்திருக்கக்கூடும். அவை கால வெள்ளத்தில் மூழ்கியும் இருக்கக்கூடும், எப்படி யிருந்த போதிலும் அந்தச் சிலையைப் பற்றிய விஷயம் இப்பொழுது ஆராய்ச்சிக்குள் வந்து விட்டபடியால் என்றாவது ஒருநாள் அதனுடைய முடிவை நாமறியக் கூடும்.

ஆணும், பெண்ணும் சமம் என்ற ஆதர்சத்தை வெளிப்படுத்தும் இந்தச் சிலையானது, இந்தக் காலத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிற தென்பதில் ஐயமில்லை. உயர்வான சிலை, ஆழ்ந்த கருத்துள்ளது, நவீன காலத்திற்கும் உகந்த தென்பதை நாம் உணர்ந்து, மூலையில் கேட்பாரற்றுக் கிடக்கும் சிலைகளைத் தேடிப்பிடித்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது நம் கடமை. இது தமிழர்களின் முதற் கடமையாகும்.

திருவேங்கை வாசல்

மன்னிப்பு

அவள் அவனிடம் அன்பும் பரிவும் கொண்டது உண்மைதான். ஆனால் அவனைக்கண்டு அதிர்ஷ்டம் பயந்தோடியது. வாழ்க்கையில் துரதிர்ஷ்டம் தொடர்ந்தாலும் அவன் மனதில் இன்னமும் நல்லெண்ணம் இருந்தது. நல்லெண்ணத்தின் பலன் ....மன்னிப்பு

கோமதி ஸ்வாமிநாதன்

அதிகாலைவேளை. ஜன்னல் வழியாக அடித்த குளிர்ந்த காற்று போர்வையையும் தாண்டி என் முகத்தைச் சுரீரென்று தாக்கியது. கண்களை லேசாகத் திறந்தேன். நான் பிரயாணம் செய்து கொண்டிருந்த ரயில் ஏதோ ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தது. அந்த வேளையில் அந்த ஸ்டேஷன் திண்டுக்கல்லாகத்தான் இருக்க வேண்டுமென்று யூகித்துக்கொண்டேன். அதுவரை என்கூடவே பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு பெரியவரும் அவர் மனைவியும் அந்த ஸ்டேஷனில் இறங்குவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தார்கள். கையில் கூஜாவை எடுத்துக் கொண்டு எழுந்திருந்த அந்தப் பெரியவர், எனக்கு எதிர்த்த ஆசனத்தில் முடங்கிக்கொண்டு சாய்ந்திருந்த மற்றொரு பெரியவரிடம் சற்று இரைந்த குரலிலேயே பேசிக்கொண்டிருந்தார். "சரி. அப்போ நான் வரேன், ஆனால் அவனை மட்டும் நான் மன்னிக்கவே மாட்டேன்! அவன் செய்த பிசகு என்ன சாமானியமானதா? என் சொந்த தம்பிதான்! இல்லையென்று சொல்லவில்லை. உடன்பிறந்த பாசத்தினால், இருந்த சொத்துக்களை யெல்லாம் அழித்துவிட்டுப் போனாலும் பரவாயில்லை என்று சும்மா இருந்தேன். கடைசியில் தீட்டிய மரத்திலேயே பதம்பார்ப்பதுபோல் என்னையே கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்தினான். என்னை அவமானப்படுத்த கங்கணம் கட்டினான். இப்போது அவன் என்னதான் பச்சாதாபப்பட்டு கல்ப கோடிகாலம் தவமிருந்தாலும் நான் அவனை மன்னிக்க மாட்டேன். அவனை மன்னித்தல் பாவம்!" என்றார். அவர் பேச்சிலே கடுமையும் சோகமும் கலந்து வீசியது. வயோதிகர் நிதானமாகவே பதில் சொன்னார். "ராமமூர்த்தி! ஆத்திரப்படாதே! அவன் செய்த குற்றங்களுக்கெல்லாம் மனமுருகி பச்சாதாபப்பட்டு மன்னிப்புக் கேட்கும்போது நீ பெருந்தன்மையாக நடந்துகொள். உன்னுடைய பிடிவாதத்தினால் அவன் மனதை மேலும் நெகிழவிடாதே. ஊருக்குப் போனவுடன் அவனைக் கூப்பிட்டு அனுப்பு" என்றார். ராமமூர்த்தி என்ற பெயரால் அழைக்கப்பட்ட பெரியவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ரயிலைவிட்டுக் கீழிறங்கினார். அவருக்குப் பின்னால் அவர் மனைவியும் பெட்டியுடன் இறங்கினாள். அப்போதுதான் அந்த அம்மாளின் முகத்தை சரியாகப் பார்த்தேன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என் மாமி, சாவித்திரி போலவே அச்சாக இருந்தாள். இப்படியும் ஒரு ஒற்றுமை இருக்குமா என்று நான் பிரமிப்பிலாழ்ந்திருக்கும்போதே வண்டி புறப்பட்டுவிட்டது. அந்த அம்மாளின் முகத் தோற்றம், ராமமூர்த்தியின் பேச்சு, எல்லாம் என் உள்ளத்தில் பல கோணங்களிலிருந்து எதிரொலிக்க ஆரம்பித்தன. அவர்கள் யாரோ முன் பின் தெரியாதவர்கள்தான்! ஆனால் அவர்கள் வருகை என் உள்ளத்திரையிலே என் முந்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படம் காட்டுவதுபோல் காண்பிக்க முயற்சித்தது. மறுபடியும் தூங்கிப்போய்விடலாமென்று இழுத்துப்போர்த்திக்கொண்டும் தூக்கம் வரும் வழியைக் காணோம். இஞ்சின் ஒரு தடவை குலுக்கி வண்டிகளைக் கொஞ்சம் பின்தள்ளி மறுபடியும் வேகமாக முன்னால் இழுத்து ஓட ஆரம்பித்தது. ஆனால் என் சிந்தனை ரதம் ஒரு குலுங்குக் குலுங்கிப் பின்னாலேயே ஓட ஆரம்பித்தது.

2

பரம ஏழைக் குடும்பத்திலே பிறந்து சிறு வயதிலேயே தகப்பனரை இழந்துவிட்டிருந்த நான் எப்படியோ திக்குமுக்காடி ஸ்கூல் பைனல் பரீட்சையில் வெற்றிபெற்றுவிட்டேன். என்னை வாழ்க்கையின் முன்னணிக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்று எவ்வளவோ கஷ்டங்களேயும் துன்பங்களேயும் பொருட்படுத் தாது சஞ்சலத்தால் சல்லடைக்கண்களாகத் துளேக்கப்பட்டாலும் மனந்தளருது முயற்சிசெய்த என் தாயார் என் வெற்றியில் மகத்தான சந் தோஷத்தை யடைந்தாள். உடனேயே ஏதா வது ஒரு உத்தியோகத்தைத் தேடிக்கொள்வதின் மூலம் எங்கள் இருவரையும் இறுக மூடியுள்ள தரித்திரப் போர்வையை கிழித்தெறியவேண்டு மென்பதே அவள் அவா. நானும் ஆகாசக் கோட்டைகள் கட்டவில்லே. கல்லூரிப் படிப் பிற்காக கற்பனேகள் செய்யவில்லே. ஆனல் அனேகமாக சாம்பலாகிவிட்ட என் ஆசைக்கனலே பிரமாதமாகத் தூண்டிவிட்டார் என் வகுப்பு ஆங்கில ஆசிரியர். "இவ்வளவு உயர்ந்த மார்க்குகளே வாங்கிவிட்டு நீ மேலே படிக் காமலிருப்பது பள்ளிக்கூடத்திற்கே அவமானம். நான் உனக்கு எப்படியும் உபகாரச் சம்பளம் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு பண்ணுகிறேன். பக்கத்திலிருக்கும் மதுரையில் உள்ள கல்லூரி ஒன்றில் சேர்த்து விடுகிறேன். சாப்பாட்டிற்கு மாத் திரம் ஏதாவது ஏற்பாடு செய்துகொள். ஆனல் எக்காரணத்தாலும் படிக்காமல் மாத்திரம் இருந்துவிடாதே" என்று வற்புறுத்தினர். வாக்களித்தபடியே மதுரைக் கல்லூரிகளில் ஒன்றில் சம்பளமில்லாமல் படிக்க ஏற்பாடு செய்து இடமும் வாங்கிக் கொடுத்தார்.

என் தாயாருக்கு அங்கு வந்து எனக்கு உதவியாக இருக்க அவ்வளவுதூரம் விருப்ப மில்லே. ஏதோ உழைத்துச் சாப்பிட்டாலும் உள்ளூரிலேயே அடைத்துக் கிடக்க ஆசைப்பட் டாள்! எனக்கோ ஹாஸ்டலில் சேர்ந்து ஆடம் பரமாக வசிக்கப் பணவசதியில்லே. ஆகை யால் என் தாயாரின் ஒன்றுவிட்ட சோதரரான குப்புசாமி வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். அவர் மதுரையில் சர்க்கார் உத்தியோகம் பார்த்து வந்தார். என் வேண்டுகோளேத் தட்ட முடியா மல் ஏற்றுக்கொண்டு எனக்கு சாப்பாடு போடுவ தாக வாக்களித்தார் . அவர் மனேவி சாவித்திரி இரும்பைவிடக் கடினமான இருதயம் படைத் தவள். எனக்கு அபயம் அளித்தற்காக அவரை

எவ்வளவோ கடிந்து கொண்டாள். அவள் கோபத்தையெல்லாம் பொருட்படுத்தாது பொறு மையுடன் இருக்க உதவியது, என் மாமா குப்புசாமியின் பெண், விமலாவின் பால் வழியும் முகம்தான். சுமார் பன்னிரெண்டே வயதான விமலா தங்கத்தை உருக்கிவார்த்தது போலிருந்தாள். உலகமறியாத சிறுமி. குறு குறுப்பும் புன்சிரிப்பும் எப்போதும் அவள் சந்திர பிம்பம் போன்ற வதனத்தில் ததும்பி நின்றன. "அத்தான்! அந்தக் கணக்கைச் சொல்லிக் கொடு! இந்தப் பூகோளப்படத் தைப் போட்டுக்கொடு' என்று அடிக்கடி, தொந்தரவு செய்தாலும், அந்தத் தொந் தரவு என் மனவேதனேக்கு இதமாக இருந் தது. மாமாவோ தாமரை இலேத்தண்ணீ ரைப்போல் ஒன்றிலும் பட்டுக் கொள்ளாமல் இருப்பார். மாமியோ எதற்கெடுத்தாலும் என் மேல் சீறிவிழுந்து குற்றங்கள் கண்டு பிடித்துக் கொண்டிருப்பாள். இந்த நிலே யில் அந்த விவரமறியாத சிறுமி விமலா தான் எனக்கு உற்சாகமளிக்கும் சஞ்சீவி யாக வீட்டில் இருந்தாள். அவள் பேச்சிலே அன்பு பரிணமித்தது. பாசம் த்வனித்தது. கருணே ஒலித்தது.

எனக்காக ஒரு சிறு அறை மாடியில் ஒழித்து விடப்பட்டிருந்தது. கலாசாலேயிலிருந்து மாலே யில் வீடு திரும்பியதும், வீட்டுவேலேகளேச் செய்துவிட்டு சிறிது படிக்கலாமென்று உட்காரந்

தால் அப்போதுதான் மாமி அடுத்த தெருவிலுள்ள கடைக்குப் போய் சாமான் வாங்கிக் கொண்டு வரச் சொல்லுவாள். புஸ்தகத்தை மடித்து வைத்துவிட்டுக் கிளம்ப சில வினாடிகள் ஆகிவிட்டாலும் "தண்டச்சோறு கொட்டிக்கொள்ள வரமாத்திரம் இவ்வளவு நேரமாகவில்லையே" என்று குரோதமாக என் காதில் விழும்படி சொல்லுவாள். என் மனம் வெதும்புவதைப்பற்றி அவளுக்கு என்ன கவலை? இவ்வித ஏச்சுக்களைக் கேட்டு என்மனம் மரத்துப் போய்விட்டது. உள்ளம் வரண்ட பாலைவனமாகிவிட்டது. ஆனால் அந்த வரண்ட பாலைவனத்திடையே நீருற்றுப்போல் விளங்கினாள் விமலா!

ஒருநாள் மாலை. கல்லூரியிலிருந்து வீடு திரும்பும்போது எனக்கு கடும் தலைவலியாக இருந்தது. கண்களெல்லாம் இருட்டிக் கொண்டுவந்தன. தள்ளாமல் நடந்துவந்து என் அறைக்குள் நுழையும்போது பூகோளப் படம் வரைந்துகொண்டிருந்த விமலா வேகமாக என்னிடம் வந்தாள். "இரண்டு நிமிஷம் உன் பௌன்டன் பேனா வேண்டும். தருகிறாயா?' என்று கேட்டுக்கொண்டே என் பதிலுக்குக் காத்திராமல் என் சட்டைப் பையிலிருந்து எடுக்க முயன்றாள். பையிலிருந்து வெளியே வந்த பேனா அவள் கை நழுவித் தடாரென்று கீழே விழுந்து விட்டது. அது ஆவிவந்த பேனா என்று அதை ஜாக்கிரதையாக நான் கையாண்டு வந்தேன். இப்போது கீழே விழுந்ததும் எனக்குக் கோபம் உச்சநிலையை அடைந்து விட்டது. போதாக் குறைக்கு நிதானத்தை இழக்க வைக்கும் தலைவலி வேறு! பளீரென்று விமலாவின் கன்னத்தில் ஓர் அடி வைத்துவிட்டேன். ஆனால் மறு வினாடியிலேயே என் தப்பிதத்தை உணர்ந்தேன். மனங்கலங்கி "விமலா! தெரியாமல் செய்துவிட்டேன். மன்னித்துவிடு!" என்று சொல்லி முடிப்பதற்குள் அவள் விசும்பிக் கொண்டு மாடிப்படிகள் வழியாய் கீழிறங்கிப் போய்விட்டாள். "சரி! இன்று மாமியிடம் நான் அடித்ததைச் சொல்லிவிடுவாள்! நம்பாடு தீர்ந்தது!" என்று முடிவு கட்டினேன். சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கீழே போனேன். விமலாவைக் காணவேயில்லை. மாமி மாத்திரம் அடுக்களையிலிருந்தாள். "சுந்தரமா! கிணற்றிலிருந்து அண்டா நிறைய ஜலம் ரொப்பு!" என்றாள் வழக்கம் போல். அவள் பேச்சிலிருந்து விமலா அவளிடம் விஷயத்தைச் சொல்லவில்லை என்றுதான் தெரிந்தது. அதனால் என்மனம் சற்று நிம்மதியடைந்தது. ஒரு கையால் வலிக்கும் தலையை அமுக்கிக் கொண்டே ஜலத்தை நிரப்பினேன். பிறகு மாடிக்குப்போய் சோர்வுடன் ஒரு நாற்காலியில் சாய்ந்தேன். லேசான தூக்கங்கூட! திடீரென்று யாரோ கூப்பிட்டது போலிருந்தது. கண்களை விழித்தேன். விமலா கையில் ஓர் டம்ளருடன் நினறு கொண்டிருந்தாள். "அத்தான் நீ சாப்பிடவேயில்லையே! அம்மாவும் பாத்திரங்களையெல்லாம் தூக்கி முற்றத்தில் போட்டுவிட்டு ராமாயணம் கேட்கப் போய் விட்டாளே! இந்தா! எனக்காக வைத்திருந்த பால்! நீ பட்டினியாகப் படுத்துக் கொள்ளக்கூடாது!" என்றாள். அவள் பேச்சிலே கருணையும் கட்டளையும் கலந்திருந்தன. அப்போது எனக்குத் தலைவலி நின்று பசி எடுத்திருந்தது. அவளை மனதார வாழ்த்திக்கெக்ண்டே பாலை வாங்கிக் குடித்தேன். "விமலா! உன்னை அடித்ததற்காக என்மேல் கோபமா?" என்றேன். "பேனாவை கீழே போட்டது தப்பிதம்தானே!" என்றாள் சிரித்துக்கொண்டே. அதில் ஒலித்த இன்பம் எல்லை காணமுடியாததாக இருந்தது. அவள் பொறுமையின் சிகரம் என்று எண்ணிப் பூரிப்படைந்தேன்.

எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் எப்படியோ மூன்று வருஷங்களைக் கழித்து விட்டேன். என் மாமியின் கடும் சொல் அம்புகளினால் ஏற்பட்டுக்கொண்டிருந்த மனப் புண் புரையோடி விடாமல் காப்பாற்றி வந்தது விமலாவின் அன்புப் பணிதான்!

அவள் என் கண்களுக்கு கருணை வடிவமாக விளங்கினாள். "பகவானே! இந்தப் புனிதமான பெண்ணுக்கு உன் ஆசியையெல்லாம் பொழிந்து தள்ள வேண்டும். அவள் வாழ்க்கை என்றென்றைக்கும் இன்ப மணம் கமழும்படியாக இருக்கவேண்டும்" என்று மனதாரப் பிரார்த்தித்துக் கொண்டேன். அந்த பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டால் அப்புறம் வாழ்க்கையில் எப்படியும் ஓர் வழி கண்டு பிடித்து விடலாமென்று ஓர் நம்பிக்கை என் மனதில் வேரூன்றியிருந்தது. விமலா இப்போது புத்தியறிந்த பெண்ணாய் விட்டாள்! எப்போதாவது சாப்பாடு பரிமாறும்போதுதான் கண்களில் தட்டுப்படுவாள்.

எனக்கும் துரதிருஷ்டத்திற்கும்தான் நெருங்கிய உறவாயிற்றே! ஒருநாள் சாவித்திரி மாமியின் சகோதரர் ஊரிலிருந்து வந்திருந்தார். அவர் தன் கைக்கடியாரத்தை கழட்டி எங்கோ ஞாபகப் பிசகாக வைத்துவிட்டார். எவ்வளவு தேடியும் அது அகப்படவில்லை. வீடே அல்லோலகல்லோலப்பட்டது. கடைசியில் மாமியின் சந்தேகம் என்பேரில்தான் விழுந்தது. நான்தான் அதை எடுத்துவிட்டேன் என்று சாதித்தாள். இரண்டு நாட்களுக்கு முன்னால் என் நண்பன் ஒருவனிடம் நான், ரசாயன பரிசோதனையில் கைக்கடியாரம் இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தது அவள் காதுக்கு எட்டியிருந்தது. அதை எனக்கு விரோதமான சாக்ஷியமாகக் கூறி என்மேல் பழியைச் சுமத்தி விட்டாள். என் மாமாவும் நம்பிவிட்டார். அப்போதே நான் என் பெட்டி படுக்கையுடன் வெளியே அனுப்பப்பட்டேன். நான் நிரபராதி என்று எவ்வளவோ கதறியும் அவர்கள் நம்பவில்லை. விதியை நொந்துகொண்டு எனக்கு அறிமுகமான சாப்பாட்டு ஹோட்டல்காரர் ஒருவரிடம் அடைக்கலம் புகுந்தேன். ஒழிந்த வேளையில் அவருக்கு கணக்கு எழுத ஒப்புக்கொண்டதன் பேரில் அவர் எனக்கு இடமும் கொடுத்து சாப்பாடும் போடச் சம்மதித்தார். கலாசாலைக்குப் போகும் நேரத்தைத் தவிர மற்ற நேரமெல்லாம் அந்த ஹோட்டல் கணக்குப்பிள்ளையாக வேலைபார்த்தேன். அபாண்டமாக என்மேல் சுமத்தப்பட்டிருந்த திருட்டுப்பழி என் உள்ளத்தை அரித்துக்கொண்டேயிருந்தது. விமலாவைப் பார்க்கவேண்டுமென்ற அவா சில சமயங்களில் எழுவதுண்டு. ஆனால் நான் அதை அடக்கிக் கொள்வேன். சில நாட்களுக்குப் பிறகு காணாமற்போன கைகடியாரம் ஸ்னான அறைச் சுவற்றிடுக்கில் விழுந்திருந்து அகப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அப்போதாவது என் மாமா என்னிடம் வந்து நடந்ததைச் சொல்லி என் பழியைத் துடைப்பார் என்று நினைத்தேன். ஆனால் அவர் வரவேயில்லை.

சர்வகலாசாலை பரீட்சைக்கு இன்னும் நான்கு நாட்கள் தானிருந்தன. ஊக்கத்துடன் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது எதிர்பாராத வண்ணமாக ஒருநாள் என் மாமா குப்புசாமி அந்த ஹோட்டலுக்கு சாப்பிட வந்தார். அவர் வருகை எனக்கு வியப்பாக இருந்தது. என் வைராக்கியத்தையெல்லாம் கட்டிவைத்துவிட்டு அவரிடம் போய் "மாமா! வீட்டில் எல்லோரும் சௌக்கியம்தானே?" என்றேன். அவர் சிறிது நேரம் பேசவில்லை. அவர் முகத்தில் வருணனைக்கு அடங்காத சோக



ரேகை படர்ந்திருந்தது "மாமா! என் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்றேன் மறு படியும். "சுந்தரம்! என் விதி என்னைப் படுத்துகிறது. உன் மாமிக்கு ஒரு மாதமாகவே பாரிச வாயு வந்து படுத்த படுக்கையாய் விட்டாள். விமலாவும் உடல்நிலை தெரியா மல் தாயாருக்கு சிச்ருஷை செய்து டைபாய்டு ஜுரத்தை இழுத்துவிட்டுக்கொண்டாள். அவளை வீட்டில் வைத்துக் கொண்டு கவ னிக்க முடியாதென்று ஆஸ்பத்திரியில் அட் மிட் செய்திருக்கிறேன். எனக்கோ லீவு கிடையாது. குழந்தையைப் பார்த்துகொள்ளக் கூட ஆள் இல்லை. எனக்கே ஒன்றும் புரியவில்லை" என்றார் மாமா. அவர் குரலில் அளவிடமுடியாத வேதனை ஒலித் தது. "மாமா ! இந்த சமயத்தில் உங் களுக்கு உதவி செய்யாமலிருந்தால் நான் ஒரு மனிதனேயில்லை. எனக்குப் பரீட்சை பெரி தல்ல. இப்போதில்லாவிட்டால் செப்டம்பரில் தேறிக்கொள்வேன். ஆனால் உயிர்போனால் அப்புறம் வராது. நான் இப்போதே ஆஸ் பத்திரிக்குப்போய் விமலாவை கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் மனப்பாரம் நீங்கி காரியாலயம் செல்லுங்கள்" என்று கூறிவிட்டு புஸ்தகங்களைத் தூக்கி அலமாரியில் அடுக்கி விட்டு அந்தக் கணத்திலேயே ஆஸ்பத்திரியை நோக்கிக் கிளம்பிவிட்டேன்.

விமலாவுக்கு நினைவேயில்லை. அவள் முகத்தைப் பார்த்து நான் பயந்துவிட்டேன். சதா புன்னகை தவழும் அவள் அதரங்கள் காய்ந்து கிடந்தன. மூன்று வாரங்கள் கண் மூடாமல் மணிக்கு மணி டாக்டர் சொல்லிய மருந்துகளைக் கொடுத்துக் கொடுத்து அவ ளுக்கு அனுபவம் மிகுந்த தாதிபோல் சிச்ருஷை செய்தேன். இடையே நான் எழுதியிருக்க வேண்டிய பரீட்சைகள் வந்து போயின. அத்துடன் என் உடல் வலி மையில் பாதியும் போய்விட்டிருந்தது. அதைப் பற்றி நான் அஞ்சவில்லை. என் கடமையைச் செய்தேன் என்ற பெருமிதம் அடைந்தேன். கிட்டத்தட்ட ஒருமாத காலத்திற்குப் பிறகு விமலா எழுந்து நடமாட ஆரம்பித்த பிறகு தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது.

மாமிக்கும் கொஞ்சம் உடம்பு சௌகரியமாக இருந்தது. இடையே ஏற்பட்ட விரோதத்தை மறந்துவிட்டு முன்போல் மாமா வீட்டி லேயே சாப்பிட ஆரம்பித்தேன். செப் டம்பர் மாதப் பரீட்சையிலாவது படித்து பாஸ் செய்துவிட வேண்டும் என்ற ஆர்வம்தான் அதற்குக் காரணம். விமலா உடல்நிலை நன்றாகத் தேறி முன்போல மாறிவிட்டாள்.

ஒருநாள் மாலை. வெளியே உலாவப் போய் விட்டுத் திரும்பி வீட்டிற்குள் நுழையும்போது உள்ளே மாமாவும், மாமியும் பேசிக்கொண்டிருந் தது காதில் விழுந்தது. அப்படியே ரேழியில் நின்றுவிட்டேன்.

"எனக்கு வரன் தேடி அலுத்துவிட்டது. கை யிலும் அவ்வளவு செழிப்பாக பணம் இல்லை. யோசனை பண்ணாமல் விமலாவை சுந்தரத்திற்கே கொடுத்துவிடலாமென்று நினைக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன?" என்றார் மாமா.

என் உடல் புளகாங்கிதமடைந்தது. இத் தகைய பாக்கியம் கிட்டுமென்று நான் கனவிலும் நினைத்தவனில்லை. என் உள்ளம் கற்பனைக் கோட்டைகளைக் கட்ட ஆரம்பித்தது. ஆனால் என் இன்பம் அதிக நேரம் நீடிக்கவில்லை! மாமி யின் பதில் என் ஆசைக் கோட்டையின் அஸ்தி வாரத்திலேயே வெடிகுண்டைப் போட்டுவிட்டது.

"நல்ல யோசனை சொன்னீர்கள்! சுந் தரத்திற்கு என்ன யோக்கியதை இருக்கிற தென்று இந்த முடிவிற்கு வந்தீர்கள்! ஒரு தம்பிடிகூட சொத்து சுதந்திரம் என்று கிடையாது. போதாக் குறைக்கு பரீட்சை வேறு தேறவில்லை. அப்படிப்பட்ட அனாதையிடம் போய் என் பெண் கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்பதை நான் சம்மதிக்க மாட்டேன். இன் னொரு விஷயமும் சொல்லிவிடுகிறேன்! அவனை சீக்கிரம் இங்கிருந்து போகச் சொல்லிவிடுங்கள். வயது வந்த பெண்கள் இருக்குமிடத்தில் வேலை யற்ற தடியனாக அவன் இருப்பது நாலுபேர் பேச்சிற்கு இடம் கொடுக்கும்" என்றாள் மாமி.

மாமியின் பேச்சில் கடுமையும் நிர்த்தாட்சண் யமும் கணக்கற்று ஒலித்தன. உலகிலேயே இவ்வளவு கிராதகத்தன்மை யுள்ளவர்களும் இருக்கிறார்களென்று அப்போதுதான் தெரிந்து கொண்டேன். எப்போதுமே மாமியின் பேச்சு தான் முடிவாக இருக்குமென்றும் அதற்குமேல் மாமா ஓங்கிப் பேசமாட்டாரென்றும் எனக்குத் தெரியும். அவருக்காகத்தான் நான் என் பரீட் சையை எழுதாமல் வாழ்க்கையைத் தியாகம் செய்தேன் என்று அவர் நனகு அறிவார். அதே போல் என் உடல் வலிமையை ஆஸ்பத்திரியில் தன் பெண்ணிற்காக சிச்ருசை செய்வதில் இழந்தேன் என்று மாமியும் நன்கு அறி வாள். ஆனால் அவைகளுக்கெல்லாம் பரிசாக எனக்குக் கிடைத்தது நிர்த்தாட்சண்யமான வெளியேற்றம்தான். என் உள்ளம் வெதும்பி யது. அன்பு, கருணை என்பதைக் கண்டறியாத

அவர்கள் முகத்திலும் நான் விழிக்க விரும்ப வில்லை. அப்படியே ரேழியிலிருந்து உள்ளே நுழையாமல் நான் முன்பு தங்கியிருந்த ஹோட்டல்காரரிடம் வந்து கொஞ்சம் ரூபாய் கைமாற்றுக் வாங்கிக்கொண்டு ஊருக்குத் திரும்பினேன். அதற்குள் விமலாவைப் பார்த்து, அவள் தாயாரின் குரோதத்தைப் பற்றியும் சொல்லிவிட்டு வர வேண்டுமென்ற அவாகூட என் மனதில் எழுந்தது. ஆனால் அந்தப் பேதைப் பெண்ணின் உள்ளத்தைப் புண்ணுக்குவதில் பிரயோசனமில்லையென்று பேசாமலிருந்துவிட்டேன்.

அம்மாவிடம் நான் ஒன்றையுமே சொல்ல வில்லை. பரீட்சை எழுதியிருப்பதாகச் சொன் னேன். அத்துடன் எனக்கு பம்பாயிலே உயர்ந்த வேலை ஒன்று கிடைத்திருப்பதாகவும்உடனே போக வேண்டும் என்றும் சொல்லிவிட்டு அன்றே பம் பாய்க்குப் புறப்பட்டேன். அங்கு போய் எதாவது வேலை தேடிக்கொள்ளலாமென்ற நம்பிக்கையில் அந்தப் பொய்யைச் சொன்னேன். அதிருஷ்ட வசமாக எனக்குப் பம்பாயிலே சீக்கிரமாக வேலையும் கிடைத்துவிட்டது.

ஓரிரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. என் தாயாரும் என்கூடவே வசிக்க பம்பாய்க்கு வந்துவிட்டபடியால் ஊர் சமாசாரத்தைப் பற்றி ஒன்றுமே தெரிந்துகொள்ள வழியில்லாம லிருந்தது. ஒருநாள் எதிர்பாராதவிதமாக மதுரை முத்திரையிட்ட ஓர் கல்யாணக் கடிதத் தையும் மற்றொரு கவரையும் தபால்காரன் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனான். ஆவ லுடன் கல்யாணக் கடிதத்தைப் பிரித்தேன். யார் மூலமாகவோ விலாசத்தைத் தெரிந்து கொண் டிருந்த மாமா தான் விமலா வின் கல்யாணக் கடிதத்தை அனுப்பி யிருந்தார். அத் துடன் கூடவந்த கடிதத்தைப் பிரித்தேன். ரத்தினச் சுருக் கமாக விமலாவே நாலு வரி கள் எழுதியிருந்தாள். “அத் தானை அவசியம் எதிர்பார்க் கிறேன்.” என்ற அன்புக் கட் டளையை மாத்திரம் அவள் இட்டிருக்கவில்லை; அததுடன் ஓர் வேண்டுகோளையும் விடுத் திருந்தாள். “மாமி உன்னை எவ்வளவோ கொடூரமாக நடத்தி உன் இள மனதை ஆறுப் புண்ணுக ஆக்கினுள். அவ்வளவுக்கவ்வளவு அவள் கடைசிக் காலத்தில் மனம் உருகி வியாதியினால் வேதனை யடைந்தாள். அவள் ஆத்மாவாவது சாந்தியடைய, நீ, எனக்காகவாவது அவளை மன் னித்தாக வேண்டும். நீ அங்கிருந்தவாறு ஓர் வாழ்த்துக்கடிதம் போட்டுவிட்டால், மன்னித்த தாக ஆய்விடாது. உன வருகைதான் என் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ததாக அர்த்தம்” என்று எழுதியிருந்தாள். அந்த தாயில் லாப் பேதைப் பெண் என் முன் நிற்பது போல் பிரமை ஏற்பட்டது. கண்களைத் துடைத் துக்கொண்டேன். அன்றே ஆபீஸில் திப னைந்து நாட்கள் லீவு வாங்க ஏற்பாடு செய்து விட்டேன்.

3

அவளுடைய இந்த அழைப்பை நிராகரிக்கா மல்தான் புறப்பட்டேன். என்னைச் சுமந்து கொண்டு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. சோழ வந்தான் ஸ்டேஷனைத்தாண்டிவிட்டதால், நான் சிந்தனையிலிருந்து விடுவித்துக்கொண்டு, எழுந்து சாமான்களை சரிபார்த்து எடுத்து வைக்க ஆரம் பித்தேன். இன்னும் பதினைந்து நிமிஷங்களில் கல்யாணக்கோலத்தில் விமலாவைப் பார்க்கலா மென்று நினைத்தபோது மனம் எல்லையற்ற இன் பத்தை யடைந்தது. பெட்டியைத் திறந்தபோது அவளுக்குப் பரிசாகக் கொடுக்க வாங்கி வைத் திருந்த பச்சைக்கல் மோதிரமும், அவள் கணவன் ஜயராமனுக்கு வாங்கிவைத்திருந்த புது கடியாரமும், அடிவானத்தில் உதித்துக் கொண்டிருந்த கதிரவன் ஒளிபட்டு மின்னி தங்கள் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண் டன.

நாயன்

அமரகவி

திக்குத் தெரியாத காட்டில்—உனைத்
தேடித் தேடி இளைத்தேனே.

மிக்க நலமுடைய மரங்கள்,—பல
விந்தைச் சுவையுடைய கனிகள்,—எந்
தப்
பக்கத்தையு மறைக்கும் வரைகள்—
அங்கு
பாடி நகர்ந்து வரு நதிகள்,—ஒரு (திக்)

நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்கள்,—
எங்கும்
நீளக் கிடைக்கு மலைக் கடல்கள்,—மதி
வஞ்சித் திடுமகழ்ச் சுனைகள்,—முட்கள்
மண்டித் துயர் கொடுக்கும் புதர்கள்,
—ஒரு (திக்)

ஆசை பெறவிழிக்கும் மான்கள்,—
உள்ளம்
அஞ்சக் குரல் பழகும் புலிகள்,—நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை,—
அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு;—ஒரு
(திக்)

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—
அதன்
சத்தத்தினிற் கலங்கும் யானை—அதன்
முன்னின்றோடு மிள மான்கள்—இவை
முட்டா தயல் பதுங்குந் தவளை—ஒரு
(திக)

கால்கை சோர்ந்துவிழலானேன்—இரு
கண்ணுந் துயில்படர லானேன்—ஒரு
வேல்கைக் கொண்டு கொலை வேடன்—
உள்ளம்
வெட்கங்கொண் டொழியவிழித்தான்—
ஒரு (திக்)

புகழ்

பாரதியார்

"பெண்ணே, உனதழகைக் கண்டு—
மனம்
பித்தங் கொள்ளு'' தென்று நகைத்
தான்—"அடி
கண்ணே, எனதிருகண் மணியே—
உனைக்
கட்டித் தழுவ மனங் கொண்டேன்.

சோர்ந்தே படுத்திருக்க லாமோ?-நல்ல
துண்டக் கறி சமைத்துத் தின்போம்—
சுவை
தேர்ந்தே கனிகள் கொண்டு தருவேன்
—நல்ல
தேங்கள் ளுண்டினிது களிப்போம்.'

என்றே கொடிய விழிவேடன்—உயிர்
இற்றுப்போக விழித்துரைத்தான்-தனி
நின்றே இரு கரமுங் குவித்து—அந்த
நீசன் முன்ன ரிவை சொல்வேன்;—

"அண்ணா, உனதடியில் வீழ்வேன்-எனை
அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டா
—பிறன்
கண்ணாலஞ் செய்துவிட்ட பெண்ணை—
உன்றன்
கண்ணாற் பார்த்திடவுந் தகுமோ?''

''ஏடீ, சாத்திரங்கள் வேண்டேன்—நின
தின்பம் வேண்டுமடி, கனியே!-நின்றன்
மோடி கிருக்குதடி தலையை,—நல்ல
மொந்தைப் பழைய கள்ளைப்போலே."

காதா லிந்த வுரை கேட்டேன்—'அட
கண்ணா!' வென்றலறி வீழ்ந்தேன்-மிகப்
போதாக வில்லை யிதற்குள்ளே—
என்றன்
போதந் தெளிய நினைக் கண்டேன்.

கண்ணா, வேடனெங்கு போனான்?—
உனைக்
கண்டே யலறி விழுந்தானே?—மணி
வண்ணா! எனதபயக் குரலில்—எனை
வாழ்வித்த வந்த அருள் வாழி!



விக்கிரமாதித்திய மன்னரைப்பற்றிய முப்பத்திரெண்டு பதுமைக்கதை மாதிரியில் இன்னும் எத்தனை கதைகள் சொன்னாலும் நாம் சகிப்புடன் கேட்கமுடியும். ஒன்றா? இரண்டா? முப்பத்திரெண்டு பதுமைகள் சொன்ன கதைகளையும் கேட்டவர்கள்தானே நாம்! இதோ இன்னும் ஒரு பதுமையும் தன் கதையைச் சொல்லுகிறது. ஆனல் இந்தப் பதுமை படிகளைக்காக்கும் பதுமையல்ல! கட்டிற்கால்பதுமை இது!

ரொம்ப நாட்களாக, கட்டில் ஒன்று வாங்க வேண்டுமென்ற ஆசை எனக்கு. "முப்பத்தைந்து வருஷங்களாக இந்தச் சடலத்தை தரையில் புரட்டி எடுத்தாயிற்று; இனியேனும் சில காலம் அதைக் கட்டிலில் கிடத்திப் பார்ப்போமே" என எண்ணினேன். அதோடு, வேனிற்காலமும் வந்து விட்டதா? "கட்டிலிருந்தால், சுகமாக வீட்டு வாசலில் திறந்த வெளியில் போட்டு உறங்கலாமே" என்ற நப்பாசையும் சூழ்ந்து கொண்டது.

"அதற்கென்ன? வாங்கினல் ஆயிற்று; நம் தமிழ்ப் பெண்பிள்ளைகள் "ரஸ்ஸி காட்" (கயிற்றுக் கட்டில்) கொண்டு வருவார்கள்; ஒன்றிரண்டு ரூபாய்கள் இருக்கும். நாளைக்கே ஒன்றைப் பார்த்து வாங்கி விடுங்களேன்" என்று தாராளமாக ஆலோசனை கூறினுள் என் மனைவி.

அவள் "ரஸ்ஸி காட்" என்று குறிப்பிட்டாளே; அது எப்படி இருக்கும் தெரியுமா? இறுதி நாளில் எல்லோரையும் ஒரு தொட்டிலில் கிடத்தித் தூக்கிச் செல்வார்களே? அதற்கு நான்கு கால்களைப் பொருத்தினல் எப்படியிருக்குமோ, அப்படித்தான் இருக்கும். ஆனல், ஒரே ஒரு வித்தியாசம்; அதில் வைக்கோல் பிரியைச் சுற்றி இருப்பார்கள்; இதில் அதற்குப் பதிலாக—ஆனல், அதற்கு இணை சொல்லத்தக்க—தடித்த தென்னை நார்க் கயிறு சுற்றப் பட்டிருக்கும்.

"நீ சொல்லுகிற கட்டிலுக்கு இப்பொழுதே ஆசைப்படவில்லை; இப்பொழுது நான் வாங்க நினைத்திருக்கும் கட்டில்.........."

"ஸப்ர மஞ்சத்துக்கு ஆசைப்படுகிறீர்களாக்கும்; நல்ல கட்டில் ஆசை, உங்களுக்கு, இத்தனை வயசுக்கப்புறம்!"

"இது மாத்திரமென்ன? என் ஆசைகள் எதுதான் ஆகட்டுமே; அவற்றிற்கு இப்படி ஒரு "வயதாகிவிட்ட" பாட்டுப் பாடாமல் இருக்க மாட்டாள், அவள். அது எனக்குப் பழகிப் புளித்த அநுபவம்தானே! எனவே, வழக்கம் போல, அவள் சொற்களை ஒரு செவி வழியே ஏற்று, மற்றொரு செவி வழியே வெளியேற்றி விட்டு, அன்று மாலையே "சோர் பஜா"ருக்குப் போய் பழைய விலையில் கட்டில் ஒன்றை வாங்கி வந்து விட்டேன்.

கட்டிலைப் பார்த்து என் மனைவி திகைத்துப் போனுள். அதிலும் விலையைச் சொன்னதும், அதை அவள் நம்பவே இல்லை. "எதற்காகப் பொய் சொல்லுகிறீர்கள்? குறைந்தது இருநூறு ரூபாயாவது அழுதுவிட்டுத்தான் வந்திருப்பீர்கள்" என்றுள், அவள்.

"உன்னிடம் பொய் ஏன் சொல்ல வேண்டும்? பழைய கட்டில்; அதிலும் "சோர் பஜா"ரில் வாங்கியது. பேரமின்றியே ஐம்பது ரூபாய்க்குக் கிடைத்து விட்டது" என்றேன் நான்.

"ஆனால், அவள் நம்பினால்தானே!" அப்படியானால், ஒன்றுக்கும் உதவாத குப்பையாக இருக்கும்; பழகி, உளுத்துப்போன சரக்கை உங்கள் தலையில் வைத்துக் கட்டியிருப்பான்" என்று சொல்லிவிட்டு அதைச் சுற்றிவந்து பரிசோதிக்கலானாள்.

"இதென்ன? கால்களுக்குப் பதிலாகப் பொம்மைகளை வைத்திருக்கிறது?" அதிருப்தியோ, ஆச்சரியமோ, தெரியாது, அவள் இவ்வாறு சொன்னாள்.

"பொம்மை யில்லையடி; கலை ததும்பும் பதுமைகள் அவை. அதற்காகத்தானே இக் கட்டிலை ஆசைப்பட்டு வாங்கி வந்தேன்" என்று கூறி விட்டு "ஜம்" மென்று அதில் ஏறி அமர்ந்தேன்.

"ரொம்ப அழகு தான், போங்கள் என்னவோ, விக்கிரமாதித்திய ராஜா சிம்மாசனத்தி லேறி உட்கார்ந்தது போலல்லவா உட்காருகிறீர்கள்! ஜாக்கிரதை! பழங் காலத்துக் கட்டில்; அதிலும் ஐம்பது ரூபாய்க் குத் தந்திருக்கிறான். ஒடிந்துவிழுந்து வைக்கப் போகிறது" என்று நாடியைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு சமையல் அறையை நோக்கிச் சென்றாள் என் தர்மபத்தினி.

அன்றிரவு பத்து மணிக்கே கட்டிலை எடுத்துப் போட்டுக் கொண்டு படுத்துவிட்டேன்.

ஆஹா! பிரம்மானந்தமாக இருந்தது அந்தப் படுக்கை. சற்றுமுன் என் மனைவி சொன்னாளே, விக்கிரமாதித்தன் சிம்மாசனமென்று; அதில் அவ்வளவு பாடுபட்டு ஏறி அமர்ந்த போது, அவனுக்குக்கூட இவ்வளவு ஆனந்தம் உண்டாகி இருக்குமா என்பது சந்தேகமே!

வழக்கமாக நடுராத்திரி வரையில் தூக்கம் வராத பேர்வழி, நான். ஆனால், வாழ்விலே, இந்தப் புதிய முதல் அநுபவம், அன்று படுத்ததுமே என்னை நித்திரை போகச் செய்து விட்டது.

* * * * *

சரியான தூக்கம்; அடித்துப்போட்டதுபோல உறங்கிக் கொண்டிருந்த நான் திடீரென்று கண் விழித்தேன். "சடசட" வென்ற சப்தத்துடன் கட்டிலின் ஒரு மூலை கீழே சாய்ந்து கொண்டிருந்தது. "கடைசியில் என் மனைவி சொன்னது சரியாகி விட்டதா?" நான் திடுக்கிட்டு எழுந்து பார்த்தேன்.

ஆமாம்; கட்டிலின் ஒருகால்—பதுமையைக் காணவில்லை. அந்த மூலை, தரையில் முட்டிக் கொண்டிருந்தது. திகைப்பும், வியப்பும் சூழக் கட்டிலைத் தூக்கக் குனிந்த போது "கல, கல" வென்ற நகையொலி ஒன்று என்னை அப்படியே நிறுத்தி வைத்தது. "அஹோ! வாரும் பிள்ளாய் அண்டப் புளுகரே; ஸத்யத்தில்பிறந்து, ஸத்யத்திலே வளர்ந்து, ஸத்திய சந்தராக உயிர்நீத்த ஸத்யநாதரின் ஸப்ரமஞ்சத்தில், அஸத்யத்திலே பிழைப்பை நடத்தும் நீர் எடுத்து அயர்ந்து நித்திரை போன ஆணவம் யாதோ? சொல்லுமையா கேட்போம்" என்று கண்டிப்பான ஓர் பெண்குரல் சிரிப்பைத் தொடர்ந்து என்னருகில் கேட்டது.

ஆச்சரியத்தால் ஸ்தம்பித்த நான் சுற்றிலும் நோக்கினேன். அந்த மையிருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. என்னைப் பயம் சூழ்ந்தது உடல் வியர்த்தது. ஏதோ பேச விரும்பினேன். ஆனால் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டு விட்டது. நான் திகைத்து நிற்பதைக்கண்டு மீண்டும் அப்பெண் குரல் நகைத்துவிட்டுக் கேட்டது: "ஏன், பேசாமடந்தையாய் நிற்கிறீர்?

சொல்லுமையா சொல்லும்; பயப்படாமல் சொல்லும்; எந்தத் தகுதியோடு இந்த ஸப்ர மஞ்சத்தில் ஏறித் துயில் நீத்தீரென்று."

நான் நாக்குழற "யார் நீ?" என்று கேட்டேன்.

அந்த உருத் தெரியாத பெண் கூறினாள்: "ஓஹோ! அப்படிக் கேளும் பிள்ளாய், அங்கதன் அழகுடையாரே! என்னை ஸத்யவதி யென்பார்கள். ஆணவமின்றி நீர் அயர்ந்த ஸப்ர மஞ்சத்தின் முதற்கால் பதுமை நானாவேன்; எந்த ஸத்யநாதர் இதற்கு உடையவரோ, அவரின் தலை மனைவியானவளும் நானே."

என் பயம் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று வந்தது. "யார் அந்த ஸத்யநாதர்? நான் இந்தக் கட்டிலைச் "சோர் பஜாரி" ல் விலை கொடுத்தல்லவா வாங்கினேன்" என்றேன்.

மறைந்து நின்ற அந்தப் பதுமைப் பெண் ஸத்யவதி கோபமுற்றவள் போல உடனே சொன்னாள்: "நன்று புகன்றீர், புளுகுண்ணி ராயரே! விலை கொடுத்து வாங்கினீரா? அவர் ஸத்யத்தின் சான்றாய் நிற்கும் இந்த ஸப்ர மஞ்சத்தை விலை கொடுத்து வாங்கவும் உம்மால் ஆகுமோ? அல்லது வேறு எந்த மனிதப் பிறவியினாலும் தானாகுமோ? ஸத்யமே அதன் விலையாமென், உம்போன்ற அண்டப்புளுகர் அதை அணுகவும் தகுமோ?"

எனக்கு நல்ல தைரியம் வந்துவிட்டது. "இது ஏதோ, விக்கிரமாதித்தன் சிம்மாதனத்துப் படிக் கட்டுப் பதுமைகளைப்போல கதை சொல்லப் போகிறது" என்று நாக்கை நீட்டிக்கொண்டு தயாரானேன். எனவே, தர்க்கரீதியாகப் பேச்சை வளர்த்து, "அட சரிதானம்மா! உன் ஸத்ய நாதரென்னவோ, அரிச்சந்திரனுக்கு அடுத்த படியென்றும், நானென்னவோ, உலகத்திலுள்ள பொய்யர்களில் முதன்மையானவனென்றும், வெறுமனே பேசிக்கொண்டு போகிறாயே? அப்படி யென்ன ஸத்யநாதராக வாழ்ந்து விட்டார், அவர்? அதைத்தான் சற்றுச் சொல்லேன், கேட்போம்," என்றேன்.

பதுமைப் பெண்ணுக்கு அளவிறந்த கோபம் வந்துவிட்டது போலும்; வார்த்தைகள் தெறிக்கப் படபடப்புடன் அவள் இரைந்தாள்: "அட, ஏய், பொய்யே உருவான மனிதரே; நிறுத்தும் அப்படியே. கற்பனை யென்ற பெயரில் பொய்க்கதை அளக்கும் நீரோ, பொய்யா மொழியரான எம் பதியை இவ்வளவு ஈனமாகப் பேசலாச்சுது? சொல்கிறேன் கேளும், அவர் பிரதாபச் சரிதையை பொறுமையுடன் நின்று கேளும்."

இவ்வாறு கூறிவிட்டுப் பதுமைப் பெண்ணானது மேலும் பகரலாயிற்று.

* * * * *

"அஹோ! கேளும் பிள்ளாய் அண்டப்புளுகரே; முன்பொரு காலத்திலே சீர் பெற்றோங்கிய நெடுங்கடல் சூழ்ந்த சம்பூத்தீவின் கண்ணளவாய், மிகுந்தோங்கிய தொண்டை மண்டலத்தைச் சார்ந்த மலைகளும், குன்றுகளும், நீர்வளம், நிலவளம் பொருந்திய சாலை, சோலைகள், தாமரைத் தடாகங்கள், நந்தவனங்கள், தேவாலயம், பிரமாலயம் விஷ்ணுவாலயம், இப்பேர்க்கொத்த விநோதங்களும் மிகுந்து, மாடமாளிகைகூட கோபுரங்களும், சிங்கார மண்டபங்களும், விசித்திர விநோதங்களும் வாய்ந்திலங்கா நின்ற ஸத்யபுரி

யென்றொரு பட்டின முண்டு. அதனைப் பரிபாலனஞ் செய்யா நின்ற சத்யபால னென்றோர் அரசனுண்டு. அவன் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதி னெண் புராணம், அறுபத்து நான்கு கலைக்கியானம், தொண் ணூற்றாறு தத்துவங்கள், மநு விக்கியானம் முதல் யாவும் குறைவின்றிக் கற்றறிந்தவனாய், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நான்கு வருணத் தாரும் புகழும்படியாகக் குடிக ளிடம் ஆறிலொரு கடமை வாங்கி, ஸத்யசந்தனாய், மனு நெறி வழுவாமல், ஆராய்ச்சி மணி கட்டி, மந்திரி, பிரதானி கள் புடை சூழ, இராஜ்ய பரி பாலனம் பண்ணிக்கொண்டிருந் தான்.

அப்படி யிருக்கின்ற காலத்திலே, ஒருநாள், சகல வேத சாஸ்திரங்களும், சகல கலைக்கியானங் களுங் கற்று, நேம நிஷ்டை தவறாமல் அநுஷ் டானம் செய்து, மகா தவத்தில் மிகுந்தவராய், கோபாக்னர் என்றொரு முனீஸ்வரர் நான்கு திக்கிலும் சஞ்சாரஞ் செய்து ஸத்யபாலனின் அரண்மனையை நாடி வந்தார். இராஜனும் அவருக்கு ஷோடசோபசாரங்கள் செய்து, பாதங் கழுவி, அர்ச்சித்து, விழுந்து தண்டஞ் செய்து, எழுந்திருந்து கை கட்டிக்கொண்டு, வாய் புதைத்து, "ஸ்வாமி, தேவரீர் இவ்வேழை யின் குடிசைக் கெழுந்தருளிய காரணம் யாதோ?" என்று மிக வினயமாக வினவி னான். கோபாக்னரும் செல்வார்: "கேளாய் ஸத்யபால இராஜனே, உலகில் பிறந்தோர் அனை வரும் "புத்" தெனும் நரகத்துக்குத் தப்ப வேணுமானால், ஓர் சற்புத்திரனை அடையவேண் டும்; நீயோ, அக்கவலையின்றி வாளா விருக் கின்றாய். உடனே வனஞ்சென்று கடுந்தவஞ் செய்து, கந்தனை வேண்டி புத்திரப்பேறு அடை வாய்" என்று கூறிப்போனார்.

அவ்வண்ணமே ஸத்யபால இராஜனும் வனஞ்சென்று தவமியற்ற, கந்தப் பெருமான் தோன்றி, "அஹோ! வாரும் பிள்ளாய், ஸத்ய பால மகாராஜாவே; நீர் யாதுகாரணம்பற்றி நம்மை நினைத்துத் தவம் புரிந்தீரென்று கேட்க, இராஜனும், "கந்தவேளே! உலகில் புத்திரனின்றி மரணமடைபவர்கள் எவரும் "புத்" தென்ற நரகத்தை அடைய வேண்டிய திருக்க, நான் புத்திரப் பேறின்றி வாழ்வதெங் ஙனம்? தேவரீர் எனக்கு மக்கட்பேற்றைக் கிருபை செய்ய வேண்டுமென்று விஞ்ஞாபித்துக் கொண்டான். முருகப் பெருமானும் மனமிரங்கி "கேளாய் இராஜாதி இராஜனே; உன் இச்சைப் படியே புத்திரப் பேற்றைத் தந்தோம். நான்கு மனைவியரின் ஆயுளையும் அறிவையும், அழகையும் தாங்கிய ஒரே சத்புத்திரனை நீ அடைய யக் கடவாய்; ஆனால் அவன் ஒரே காலத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்தாலும், ஒருவளிடத்து மாத்திரமே கூடிக்களிக்க வேண்டும். அங்ஙனமின்றி ஒரு மனைவியிருக்க மற்றொருவளுடன் சேருவானாகில் முந்தைய மனைவி மரித்து இவன் ஆயுளிலும் நான்கில் ஒரு பகுதி குறைந்து போகும்" என்று கூறி அந்தர்த்தியானமானார்.

அவ்வண்ணமே ஸத்யபால இராஜனின் மனைவி கர்ப்பமுற்று உரிய காலத்தில் கோடி சூரியப் பிரகாசத்துடன் அதி ரூபலாவண்யமுள்ள ஓர் ஆண்மகவை ஈன்றாள். இராஜனும் குழந்தையைக் கண்டு பெருமகிழ்ச்சிகொண்டு, அதற்கு ஸத்ய நாதனென்ற நாமகரணம் சூட்டி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவர, ஸத்யநாதனும், ஐந்துவயது தொடங்கி சகல கலைக்கியானங்களும், யானை யேற்றம், குதிரையேற்றம், முதலாகிய ஆயு தப் பரீக்ஷைகளும், சிலம்ப வித்தைகளுங் கற்று, முகவசீகரமும் இராஜலக்ஷணங்களும் பொருந்தியவனாய், ஸத்தியத்தினின்று சற்றும்

வழுவாது பதினெட்டாம் பிராயத்தை அடைந்தான்.

இது இவ்வாறாக மகேந்திரபுர மென்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்தை யாளுகின்ற மகேந்திரவர்மனென்ற இராஜனுக்கு நான்கு மனைவிகளுமுண்டு. அவர்களுக்குப் பிள்ளையில்லாதபடியால், இராஜன் தவஞ் செய்ய, கடவுள் வந்து, "உனக்கு ஆண் பிள்ளைகளில்லை; ஒரே ஒரு பெண்தானுண் டென்று சொல்ல," இராஜன் மிகவும் விசனமுற்றுச் சொல்லலானான்: "ஸ்வாமி, எனக்கு நான்கு மனைவிகளுண்டு; ஒருத்திக்கு மாத்திரம் குழநதை பிறந்தால் மற்றவர்கள் பொறாமையால் அதைக் கொன்று விடுவார்கள்; யாது செய்யலா"மெனக் கடவுளும், "அப்படியாயின் ஒரு மகளின் ஆயுளில் நான்கில் ஒரு பாகம் கொண்ட நான்கு புத்திரிகள் உதிக்கக் கடவர்" என்று கூறி மறைந்தார்.

அவ்வாறே, மகேந்திரவர்மனின் மனைவியர் நால்வரும் கருவுற்று ஒவ்வோர் பெண் குழந்தையைப் பெற்றெடுத்து, அவர்களுக்கு முறையே ஸத்யவதி, ஸத்யசேனை, ஸத்யபாலி, ஸத்ய குமாரி என்ற நாம கரணங்களிட்டு, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வரலாயினர். அப்பெண்களும் ஐந்து வயதிலாரம்பித்து சகல கலைக்கியானங்களையுங் கற்றுப் பதினைந்து வயதினில் புட்பவதியாகி, அதிரூப சவுந்தரியத்தோடு மிருக்கிற நாளிலே, ஒரு நாட் பொழுதினில் அந்நால்வரும் பட்டணத்தை அடுத்திருந்த பீமகிரியென்ற ஆரணியத்துத் தடாகத்துக்குச் சென்று ஜலக்ரீடை செய்து களித்திருந்தனர்.

இஃதிவ்வாறாக, அதே நாட்பொழுதினில், ஸத்யபுரி இளவசரனான ஸத்யநாதனும், வேட்டையாட இச்சைகொண்டு, சதுரங்க சேனைகளையும் அழைத்துக்கொண்டு பட்டணம் விட்டுப் புறப்பட்டுக் காதவழி தூரங்கடந்து பீமகிரிக் காட்டையடைந்து, அக்காட்டினில் இராநின்ற மிருக முதலிய பக்ஷிஜாதிகளையும் வதைசெய்து தண்ணீர்த் தாக முண்டானதால் தாகந்தீர்ந்து பட்டணம் போகலாமென்று, சேனைகளைப் பின் விட்டுக் கானகத்திடையே நீர்நிலையைத் தேடி நடக்கலானான்.

இவ்வாறாகத்தானே இராஜகுமாரன் ஸத்ய நாதன் ஆரணியத்தின் வழியாக வந்து கொண்டிருக்கையில், ஸத்யவதியும் அவளது சோதரியரும் நீராடிக் கொண்டிருந்த தடாகத்தை அணுகி, தாகந்தீர்த்துக்கொண்ட பின் அவர்கள் அழகில் மயங்கி மோகங்கொண்டு, "அஹோ! அழகிற் சிறந்த கன்னிகைகளே, நீவிர் யாவர்?" என வினவ, அவர்களும் ஸத்ய நாதனின் வடிவழகிலீடுபட்டு, "அஹோ! வாருமையா, ரூபசுந்திர சிகாமணியே! அண்மையிலே மகேந்திரபுரமென்றொரு பட்டணமுண்டு; அதனை ஆளாநிற்கும் மகேந்திரவர்மனின் புதல்வியராவோம் நாங்க" ளென அரசகுமாரனும் "உங்களுக்கு விவாகமாகி விட்டதா" வென வினவினான். அப்பெண்கள் நாணமுற்றுத் தலைசாய்த்து, தங்களது வலதுகால் கட்டைவிரலால் நிலத்தைக் கீறி நிற்க, அதன் குறிப்பறிந்த ஸத்யநாதனும், தனது தேசந்திரும்பி தந்தையிடம் பகரலானான்: "அஹோ! கேளுமையா என் அருமைத் தந்தையாரே, நம்மை யடுத்து மஹேந்திரபுரமென்ற பட்டண மொன்றுண்டு. அதனை அரசாட்சி செலுத்திவரும் மஹேந்திர வர்மனுக்கு நான்கு குமாரத்திகளுமுண்டு; அவர்களை நான் மணக்க விரும்புகிறே" னென்று சொல்ல, இராஜனும், "அஹோ! கேளும் பிள்ளாய், என் பிரிய குமாரனே; ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியருடன் நீ சுகிப்பாயாகில், மற்ற மனைவியர் இறப்பதுடன், உன் ஆயுளும் குறைந்து போகு" மென்றான். ஸத்யநாதனும் சற்று ஆலோசித்துவிட்டு, "அங்ஙனமாயின் அப்பெண்களில் மூத்தவளான ஸத்யவதியை எனக்கு மணம் செய்து வையு" மென, இராஜனும் அதற்கிணங்கி, உடனே தனது சேனாதிபதியைச் சகலவிதமான பரிசப் பொருள்களுடனும் பெண் கேட்க அனுப்பிவைத்தான்.

இஃதிங்ஙனமாக, நாடு சேர்ந்த மகேந்திர வர்மனின் புதல்வியர் நால்வருமாகத் தந்தையை அணுகி, "அஹோ, கேளும் எம் அன்பிற் சிறந்த தந்தையாரே; நாங்களும் இன்று ஆரணியத் தடாகத்தில் ஸ்னானஞ் செய்து கொண்டிருக்குங்காலை, அங்குற்ற ஸத்யபுரி இளவரசனும் ஸத்யநாதனைக்கண்டு மையல் கொண்டோம்; அவரை எங்களுக்குப் பதியாக்கி வைப்பீராக வெனவும், அவ்வமயம் ஸத்யபுரி சேனாதிபதியாரும் அங்குவந்து தமது இராஜனின் விருப்பத்தை அறைந்தார்.

அதனைக் கேள்வியுற்ற ஸத்யவதி முதல் நால்வரும், "எம் தந்தையாரே, நாங்கள் நால்வருமே அவர் மீது நாட்டமுற்றிருக்கையில் எவ்

வாறு எங்களில் ஒருவள் மாத்திரம் அவரை மணப்ப" தென்றியம்ப, சேனாதிபதியார் சொல்லலானார், "அஹோ! கேளுமையா, மஹேந்திர இராஜாதி இராஜாவே; எங்கள் இராஜகுமாரன் ஒரு மனைவிக் கதிகமாக எவருடனும் போகத்தி லீடுபடலாகா" தென, அதனைச் செவியேற்ற சகோதரிகள் மனம் மிக வருந்தி, தங்களுக்குள் கலந்தாலோசித்து நால்வரும் ஒரே சமயத்தில அவ்வரசகுமாரனை மணந்து, பின்னர், வயதுக்கிரமமாக ஒருவர் பின் ஒருவராய் அவருடன் கலந்திருப்பதெனத் தீர்மானமெய்தி, அவ்வண்ணமே சேனாதிபதிக்குரைக்க, அவரும் நாடு சென்று மன்னனிடம் நடந்தவற்றை யியம்பி, பின்னர் ஓர் சுப முகூர்த்தத்தில் சகலவிதமான வைபவங்களுடன் ஸத்யநாதனென்ற இளவரசனுக்கு ஸத்யவதி முதலான அந்நால்வரையும் மணமுடித்து வைத்தார்.

இங்ஙனமாக மஹேந்திர இராஜகுமாரிகளில் முதல்வளான நான், என் பதி ஸத்யநாதருடன் போக போக்கியங்களை அநுபவித்துச் சுகித்திருக்கும் காலையில், எனக்கு இளையவளாம் ஸத்யசேனை யென்பாள், விரகவேதனை மிகவுற்று ஒரு நாட் பொழுதில் ஸத்யநாதரை அணுகித் தன்னை அணைய வேண்டினாள். ஸத்யம் காத்துவரும் என் பதியானவர் அதற்கிணங்காமையால், என் சோதரியானவள் மையல் நோயுற்று உடம்பிளைக்கலானாள். இதுகண்டு பொறாத நான், அவள் இன்பமடைய வேண்டி ஓரிரவில் என் பதிக்கு என்னிறுதி இன்பத்தை யளித்துவிட்டு விஷபான மருந்தி அமரத்வமெய்தினேன்.

என் பதியானவர், மெத்தத் துக்கமடைந்தவராய், போசனம், உறக்கம் முதல் யாவையும் மறந்து வருந்தி நிற்க, அச்சமயம், என் சோதரி ஸத்யசேனையானவள் அவரிடம் "அஹோ! வாரும் என் பிராணபதியே; நீர் இவ்வாறு விசனித்தல் தகுமோ? அக்காளிறந்த துக்கம் தெளிய நான் மார்க்கம் சொல்வே" னென, என் பதியும், "என் அன்புக்குரிய பத்தினியே அது வென்ன?" வென்று ஆவலுடன் கேட்டார். "ஸத்யவதியின் உருவத்தில் பதுமை யொன்று செய்து, அதனை நமது ஸப்ரமஞ்சத்தின் கால்களிலொன்றாய்ப் பொருத்தி, அதன் மீது நீர் சயனித்து என்னுடன் கூடிக் குலவுவீரானால், அத்துயர் மறையு" மென, ஸத்யநாதரும் அவ்வண்ணமே செய்து என்னைக் கட்டிற்கால் பதுமையாக அமைத்து, என் கண்கள் இன்புற அவளுடன் கூடி மகிழ்ந்திருந்தார்.

இஃதிவ்வாறாக, சிலகாலம் சென்றபின், ஸத்யசேனைக்கு இளையவளாம், ஸத்யபாலியும் மையல் மேலிட்டு உடல் நலியவே, ஸத்யசேனையும் அவளின்புற வேண்டி என்னைப்போலவே விஷபானம் செய்து அமரத்வடைந்து மற்றொரு கட்டில் காலுமானாள்.

ஸத்யபாலியுடன் எங்கள் பதி சுகித்துச் சுகித்துச் சில ஆண்டுகளிருந்த பின்னர், கடைசிச் சோதரியான ஸத்யகுமாரியானவள் பருவ வேட்கை மிகுந்து பரிதவிக்க, ஸத்யபாலியும் எங்களைப் போலவே உயிர்நீத்து ஸப்ரமஞ்சத்தின் மூன்றாம் கால் பதுமையாக, நாங்கள் மூவரும், எங்கள் கடைசிச் சோதரியாவது பதியுடன் பரமானந்தமடைந்திருக்கட்டுமென்று, வாழ்த்தியிருந்தோம்.

இது தருணம், எங்களரண்மனைப் பாங்கி வஸந்தமாலை யென்பாள், ஸத்யநாதரை தானடைய விரும்பியவளாய், பல விதங்களிலும் அவரன்பைப் பெற முயன்றும் இயலாமற் போகவே, அவர் பரமாதரைச் சேர்ந்தால் மனைவியை இழப்பாரெனவும், பிறகு தானெளிதில் அவரை யடையலாமெனவும் தீய எண்ணங்கொண்டு, மோகப் பித்தேறியவளாய், ஓரிரவில் எங்கள் பதியானவர் நித்திரை போயிருக்கும் காலையில் அவரறியாது அவரைப் போகித்து விடவே, அக்கணமே எங்கள் கடைச் சோதரியும் மரணமடைய, நான்கு மனைவியரின் ஆவியானது முடிவடைந்துவிட்டபடியினால், ஸத்யநாதரும் மரண மடைந்தார். எங்கள் மாமனாரா கின்ற கிழ இராஜன் ஸத்யபாலரும், புத்திர சோகத்தால் மனது மிக வாடியிருக்க, அவ்வமயம், முன்புற்ற முனீஸ்வரர் எழுந்தருளி, "அஹோ! கேளாய் ஸத்யபால இராஜனே! ஆயுள் முடிந்தவரனைவரும் அவனடிசேருதல் முறையே யன்றோ? அதற்கிங்ஙனம் அறிவிற் சிறந்த நீ வருந்துதல் அழகாமோ? உனது துயரம் மறைய யாமொரு மார்க்கம் சொல்லுவோ" மென, இராஜனும் கேட்க லுற்றான்; "ஆஹோ! கேளும் பிள்ளாய், ஸத்யபால இராஜனே; முன்பு அயோத்தி யென்ற நகரிலே அண்ணனின் பாதுகையை அரசாள வைத்து ஆறுதலடைந்த பரதனைப் போல, நீயும், உனது மைந்தனும் ஸத்யநாதன் நான்கு மனைவியருடன் ஸத்யநெறி தவறாது கூடிக்களித்து, இறுதியில் அதிலே முறிவுமெய்திய அந்த ஸப்ரமஞ்சத்தை இந்த

ஸத்யபுரிச் சிம்மாதனத்திலேற்றி அரசு செலுத்தச் செய்து ஆறுதலடைவாய்'' என்று கூறிப் போனார்.

அவ்வண்ணமே ஸத்யபால இராஜாவும் எங்கள் கடைசிச் சோதரி ஸத்யகுமாரியின் உருவத்தையும் பதுமையாகச் சமைத்து, ஸப்ரமஞ்சத்தின் நான்காவது காலாகப் பொருத்தி, அந்த ஸப்ரமஞ்சத்துக்குப் பட்டம் சூட்டி, நெடுங்காலம் நீதிநெறி தவறாது அரசு செலுத்தச் செய்தார்.

“அஹோ ! கேட்டீரோ, அண்ட புளுகரே; இவ்வாறு நீதி நெறி வழுவாத எங்கள் பதியேறி படுத்திருந்தும், பல காலம் ஸத்ய பரிபாலனம் செய்ததுமான இந்த ஸப்ர மஞ்சத்தில் சற்றும் பொருத்தமற்ற நீர் ஏறிப் படுத்ததென்னவோ ? அதற்குரிய தகுதியை எடுத்தியம்புமையா'' என்று அக் கட்டிற்கால் பதுமையானது கதையைக் கூறி முடித்தது.

* * * * *

இவ்வாறாகத்தானே அக்கட்டில் கால் பதுமையானது கதை கூறி முடித்ததும், “ஐயையோ! இதென்ன?'' என்ற அலறல் என்னைத் திடுக்கிட்டு எழச் செய்தது.

ஆமாம்; பொழுது விடிந்துவிட்டது. கட்டிலருகே என் மனைவி நின்று, “நான் நேற்றைக்கே சொல்லவில்லையா? உளுத்துப் போன கட்டிலை உங்கள் தலையில் வைத்துக் கட்டி யிருக்கிறான், எமாற்றுக்காரப் பாவி'' என்று அரற்றிக் கொண்டிருந்தாள்.

தூக்கக் கலக்கம் இன்னும் தெளியவில்லை, ஆயினும், “உளுத்துப்போன கட்டிலா? இதன் மகிமை உனக்கு என்ன தெரியும்?'' என்று கோபத்தோடு கேட்டேன்.

“ஓஹோஹோ! மகிமையா? அதுதான் தெரிந்து விட்டதே; இதோ பாருங்கள்.''

நான் அப்போது தான் பார்த்தேன். கட்டிலின் பதுமைக் காலொன்று ஒடிந்து அந்த முனை தரையில் முட்டிக் கொண்டு கிடந்தது. இரவு அப்படி நான் கனவு கண்டேன்; அப்போதுதான் அது ஒடிந்திருக்கவேண்டும்.

* * * * *

இப்பொழுது அந்த ஸத்யந் தவறாத ஸப்ர மஞ்சமானது, எங்கள் வீட்டுப் பரணியில் தனது மீதி மூன்று கால்களுடன் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே என் கட்டில் ஆசையும் இப்பொழுது அந்தரத்தில் தொங்குகிறது!

சௌபாக்கியவதி

மாமு

நாடக உறுப்பினர் ;—

மல்லிகா குள்ளன்
மாதவன் காத்தான்

காத்தான் : (மல்லிகாவுடன் வருகிறான்). மல்லிகா, இந்தா ! இந்த அறையை விட்டு வெளியே போகக்கூடாது. இங்கேயே இரு. இதோ கற்றாழை நார் ஒரு சுருணை, இதனைப் பொன் னூலாக நூற்கவேண்டும். அம்மாதிரி 'என் மகள் செய்வாள்' என்று உன் அப்பா சொன்னா ராம். அரசர் சீக்கிரமே வருவார். அதற்குள் நீ இதை நூற்றுவிடு. முடித்தால்தான் அரசருடன் மணம். இன்றேல் மரணம்.

மல்லிகா : ஐயோ ! இதென்ன சோதனை ? நார்ச்சுருணை பொன்னூலாக மாற முடியுமா ? என்னால் அம்மாதிரி செய்ய முடியாதே !

காத் : இன்று காலைதான் வந்தார் உன் அப்பா. உன் குணத்தையும், அழகையும் பற்றிப் பெருமையாகப் பேசினார். அதனால்தான் அரசர் உன்னை அழைத்துவரச் செய்தார். தங்கம் என்றால் அவர் மகிழ்ச்சி பொங்கும். அவர் வரு முன் உன் வேலையை முடித்துவிடு, நான் போகி றேன்.

(காத்தான் போகிறான். கதவைச்சாற்றி, வெளிப் புறம் தாளிடுகிறான்)

மல்லி : ஐயோ ! என்னால் முடியாதே. முடி யாதே ! எய், பாவி !

(ஓடிச்சென்று கதவை இடிக்கிறாள் ; அழுகி றாள்)

"ஐயோ நார் முதலில் நல்ல நூலாகவே முடியாதே ! பின்னே பொன்னாவது எப்படி ? அப்பா சொன்னாராம் ; அரசன் கேட்டானாம். பொருந்தாத பொய்யையும் நம்பினானே புத்தி சாலி வேந்தன் !

"கேழ்வரகில் நெய் கொட்டுகிறது" என்றால்,, கேட்பவனுக்கு மூளை எங்கே போனது ? ஐயோ விதியே ! அகால மரணம் அடையவா பெண் ணாய்ப் பிறந்தேன் ! கடவுளே ! அடியாளைக் காப்பது உன் கடன். கடைக்கண் பாரும், என் னைக் காப்பாற்றும் !

(மல்லிகா மூர்ச்சிக்கிறாள். ஒரு குள்ளன் தோன்றுகிறான்)

குள்ளன் : மல்லிகா, மல்லிகா ! கண்ணைத் திற, என்னைப்பார் ! (மல்லிகா கண்களைக் கசக்கிக் கொண்டு எழுகிறாள்.)

'நீ இன்னேரம் அழுதாயா ? முகம் சிவந்து, கண்கள் வீங்கி இருக்கின்றன ! என் அப்படி ?'

மல்லி : இவ்வளவு நாரும் பொன்னூலாக்க வேண்டும். யாரால் முடியும் ? நான் செய்ய வேண்டும் என்று உத்தரவு. தப்பினால் தலை போகுமாம். ஐயோ, தலை போனால், உயிரும் போகுமே ! நான் என்ன செய்வேன் ?......

குள் : அதற்காக அழவேண்டிய அவசியம் இல்லேயே! பெண்ணே! என்னுல் முடியும் இதைக்கொண்டு பொன் னுல் நூற்க!

மல்லி : அப்படியா, உண்மையாகவா? உடனே செய்; தயை செய்து ஆரம்பி. இதோபார், இந்த மாலேயும், மோதிரமும் தருகிறேன் உனக்கு,

குள் : அது சரியல்ல; மோதிரம் என் பெரு விரலே விட மிகவும் பெரியது உன் மாலேயை நான் விரும்பவில்லே. அதுவும் வேண்டாம். நான் ஒரு தனி ஆள். எனக்குத் துணே தேவை. நான் உன்னே விரும்புகிறேன். உன் வேலேயை முடிக்கிறேன். என்னே மணக்க சம்மதிப்பாயா?

மல்லி : ஓ, அது முடியாது. உன்னே மணக்க என்னுல் முடியாது. நீயும், உன் அழகும்! காணக் கொஞ்சமும் பிடிக்கவில்லே. நான்அரசியாக ஆசை. அரசியானுல் பொன்னும், மணியும் புரளும்; நான் பெரும் பணக்காரியாவேன்! அப்போது கேள்; வேண்டும் அளவு வேண்டிய விதமே தருவேன்.

குள் : நான் கேட்டது பொன் அல்ல, பெண்! என்னேக்காண வெறுப்பா? சரி, அழகனே—அரசனே மணக்க ஆசையா? உன் ஆசையும், தலேயும் ஒன்ருகத் தொலேயப் போகிறது! நான் செல்கிறேன். எவளாவது எனக்குக் கிடைப்பாள்! உன் கதி என்ன?

(போக முயல்கிருன்)

மல்லி : வேண்டாம், வேண்டாம், போக வேண்டாம். நீ நூற்று முடி. உன்னுடைய சொல்படி நடக்கிறேன்.

குள் : அப்படி வா வழிக்கு. இப்போது வேலே செய்வேன்; வேடிக்கையாகவும் பேசு வேன்; பாடுவேன், ஆடுவேன்!

(உட்கார்ந்து ராட்டினத்தில் நூற்கிருன்; பாடு கிருன்)

சக்கரத்தைச் சுழற்றிடுவேனே!—பொன்
சரிகையாய் நூற்றிடுவேனே!
மிக்க வேலே செய்து வரும் நானே—குள்ளர்
மீது நல்ல பேரை அமைப்பேனே!
சிக்கலின்றி அரைநொடியில் தானே—இதைச்
சீராக செய்து முடிப்பேனே.' (சக்கரத்தை)

பெண்ணே! இதோ பார், நன்ருகப்பார். அவ்வளவு நாரும் பொன்னுகி விட்டதைப்பார். பசும் பொன்தானு என்ற சந்தேகம் இருந்தால், கையில் எடுத்துப்பார், உரைத்துப் பார்! என்னே மணக்கப் பூரண சம்மதமில்லே உன் மனதிற்கு. என் நிபந்தனேயில் ஒரு சிறு மாறுதல். என் பெயரைக் கண்டு பிடித்துக் கூறிவிடு. நான் சென்றிடுவேன்; பிறகு என்றும் திரும்பமாட் டேன். மூன்று முறையில் என் பெயரைக் கூறி விட வேண்டும். இரவு வருகிறேன்; அப்பொழுது சொல் பார்க்கலாம்.

(குள்ளன் போகிருன்)

மல்லி : அவன் பெயரைக் கண்டு பிடிப்பது எப்படி? தலேவலிபோய், திருகுவலி வந்த கதை ஆனது. கோவிந்தன், வரதன், குண்டன், சப்பை இப்படி இருக்குமோ? குள்ளனுக இருக் கிருனே, பெயர் வேடிக்கையாக இருக்கலாம்— முறக்காதன், சால்வயிறன், பனே மரத்தான்.... அடகடவுளே! எத்தனே, எத்தனே பெயர்கள்? இனி என்ன செய்வேன்....? (அழுகிருள்)

(அரசன் மாதவன் அலங்காரமாக வருகிருன்)

மாதவன் : மல்லிகா! வேளேயாகிவிட்டது; உன் வேலேயாகிவிட்டதா? ஆமாம், அதோ கற்ருழை நார் பொன்னூலாக மாறிவிட்டதே,



நீயே கெட்டிக்காரி--சாமர்த்தியசாலி! நம் திருமணத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்கிறேன்.

(மல்லிகாவின் முகத்தை உற்றுப் பார்க்கிறான்)

அடேடே! நீ இது வரை அழுதாயா? கிடக்கட்டும் வா, இனிமேலாவது ஆனந்தமாயிரு. இதோபார். உன்னைச் சிரிக்கவைக்கிறேன். நான் வந்து கொண்டிருந்தேன்—இருந்தேனா? வழியில் ஒரு குள்ளனைக் கண்டேன்—கண்டேனா? அவன் குல்லாயை எறிந்து, குரங்கு போல குதித்து ஆடிக்கொண்டிருந்தான்; பாடிக் கொண்டும் இருந்தான். பாட்டு இதுதான்!

பெண்ணும் மணந்திட இசைந்தாள்—மாப்
[பிள்ளை பேரோ

பெருவிரல் பெருமாள்!

என்பது. அவனைக் கண்டிருந்தால் நீயும் சிரித்திருப்பாய் — விழுந்து, விழுந்து — எழுந்து, எழுந்து, தாங்க முடியாமல் சிரிப்பாய்!

மல்லி: (கை தட்டிச் சிரித்துக்கொண்டு) ஓ! நல்ல கதை, நல்ல பேர்! இனி அழமாட்டேன்; ஆனந்தமாக இருப்பேன்.

மாதவன்: அதுதான் சரி. நான் கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்; போய்வருகிறேன்.

(மல்லிகா ஒரு புத்தகத்தைப் படிக்கிறாள். குள்ளன் வருகிறான்).

குள்: என் பெயரைச் சொல்ல முடியுமா? நிச்சயமாக முடியாது. அது யாராலும் முடியாது.

மல்லி: ஒரு வேளை என்னால் முடியலாம்! முடியாதென்று முதலிலேயே பயங்காட்டுகிறீரே. உருவத்தில் குள்ளர், வாயிலே—பேசும் வார்த்தையிலே (பெரும் ஆளையா) பெருமாள் ஐயா நீர்!

குள்: (அவசரமாக) இது என்னடா வம்பு! என் பெயரை நீ தப்பாகவும் சொல்ல வில்லை; சரியாகவும் சொல்லவில்லை. வெறும் பெருமாள் மட்டுமல்ல என் பேர்!....

மல்லி: வெறும் பெருமாள் இல்லையோ? பெரும் பெருமாள் இல்லையோ....நான்....

குள்: (தடுத்து). இரு, இரு இப்போது சொன்னது இன்னும் பொருந்தும்; ஆனாலும் போதாது! நான் பெரியவனாகவா இருக்கிறேன் —பெரும் உரல் பெருமாள்—என்று!

மல்லி: பெரும் உரல் பெருமாள் அல்ல— பெரும் விரல் பெருமாள்!

குள்: எப்படித் தெரிந்தது?—யார் சொன்னது? ஐயையோ, மணக்க இருந்தேன்; மறக்க நேர்ந்ததே....அட துரதிர்ஷ்டமே!

(குள்ளன் மறைகிறான்).

மல்லி: அவன் தொலைந்தான்; ஆயினும் நான் ராணி ஆக அவன் உதவி செய்தான். அது வரை நல்லதுதான்.

'நானே பாக்கியவதி!....சௌபாக்கியவதி'..
....



அதிசயம்

ய. லக்ஷ்மிநாராயணன்

[சுந்திரமூர்த்திக் குருக்களுக்கு வாழ்வின்பத்தில் இன்னமும் நம்பிக்கையிருக்கிறது! எதோ ஒரு காலத்தில் அனுபவித்த சுகபோகத்தில் அவர் இன்றளவும் ருசி இழக்கவில்லை. அதிலேயே அவர் முக்தி நிலையையும் கண்டுவிடுவார். ஆனால் ஒரே ஒருதரம் தான் காதலிக்க முடியும், அந்தக் காதல்தான் முதலாவதும் கடைசியானதுமாகும் என்பதை அறிந்தவர்...........]

அர்த்த ஜாம பூஜாகாலம். கோவில் மணி நிற்காமல் அடிததது. சுந்திரமூர்த்தக் குருக்கள அவசா அவசரமாகக் கர்பபக்கிரஹத்தை நோக்கிச் சென்றார். அங்கே மண்டியிருந்த இருளில் அவர் கொஞ்சங்கூடத் தடுமாறவில்லை. அணைந்தும, அணையாமலும் முணுக் முணுக்கென்றெரிந்த அகல் விளக்குகளால் அந்த இருளைப் போக்க முடியவில்லை. ஆனால் அவர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. மூல விக்கிரஹத்தண்டை சங்கிலியில் தொங்கிக்கொண்டிருந்த விளக்கில் மட்டும் கொஞ்சம் எண்ணெய் விட்டுத் திரியைத் தூண்டிவிட்டார். இடதுகை மணியை எடுததது வலதுகை தீபாராதனை காட்டியது. ஒரு வழியாக அர்த்தஜாம கால பூஜையும் முடிந்தது.

யாரும் வரவில்லை. அந்தநேரத்தில் யார் தான்வரமுடியும்? ஆனால் குருக்கள் முன்னை விட அவசரமாகத்திரும்பி மடைப்பள்ளிக்குப் புறத்திலிருந்த கிணற்றண்டைபோனார். கைகால் முகங்கழுவித் திரும்பவும் அலங்காரம் செய்துகொண்டார். ஆனால் சற்று நேரத்திற்குமுன் அவர் இருந்த கோலத்துக்கும் தற்போதைய அலங்காரத்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசம். மணப் பெண் வீடு செல்லும் புது மாபபிள்ளையைப் போலே அலங்கரித்துக் கொண்டார். முகத்திலே ஜவ்வாதுப பொட்டு, கழுத்திலே வைரம பதித்த ருத்திராட்சமாலை, இடுப்பிலே ஜரிகைவேஷ்டி, சந்தனம பூசிய மார்பிலே நீலக்கரைப் பட்டு உருமால்; இந்தக் கோலத்துடன் புறபபட்டார் அவர். காவல்கார சின்னப்பன் கதவோரமாக நின்றான. அவசரம் அவசரமாகச் செல்லும் குருக்கள் "ஜாக்கிரதை சின்னப்பா, நீலகண்டன் வரும வரையில், ஜாக்கிரதையாக இரு," என்று எச்சரித்துவிட்டுச்சென்றார் சுந்திரமூர்த்திக் குருக்களை உன்னிப்பாக, எதோ அர்த்தபாவனை கலந்த ரீதியில் பார்த்தபடி நெடுநேரம் நின்றவன் மெதுவாகக் கதவைச் சாத்திப் பூட்டினான்.

சின்னப்பன் மட்டும் அல்ல, இன்னும் எத்தனையோ பேரும்தான் சுந்திரமூர்த்திக் குருக்கள் இப்படிபபோவதை உன்னிப்பாக, வியப்பாகத்தான பார்த்தனர். அன்றுமட்டும் அல்ல; எத்தனையோ காலமாக, ஏன் கடந்த பதினைந்து வருஷங்களாகத்தான் அவர் இப்படிப் போகிறார், வருகிறார். ஆனால் அவர் இப்படிப் போய்வருவதன் அர்த்தம் மட்டும் யாருக்கும் விளங்கவில்லை, பினனே அதற்கு முனமட்டும் அர்த்தம் விளங்கியதா என்றால் விளங்கிற்று! அப்போது வடிவாம்பாள உயிருடன் இருந்தாள். அவருக்காகவே அவள் அபபோதெல்லாம் புதுமணப்பெண்போல் காத்திருப்பாள். அவரும் புதுமாப்பிள்ளைபோல் அவளை நாடிச்செல்வதில் அர்த்தமிருந்தது. ஊரார் ஆச்சரியப்பட்டாலும் அர்த்தம் புரிந்துதான, விஷயம் அறிநதுதான் ஆச்சரியமும, அதிசயமும் கொண்டனர். ஆனால் அவர்களுடைய காதலின்பவாழ்வைக்கண்டு ஊரே வியந்தது.

* * *

கார்த்திகைமாத சோமவாரதினத்தன்று

திருமுருகர் கோவிலில் திருவிழா. அன்று முருகர் மயில் மீதமர்ந்து வீதிவலம் வருவார். பக்தர்கள் கோடானுகோடியாகக் கூடித் தங்கள் பிராத்தனையை நடத்துவர். அன்றைக்கென்று சில புது ஏற்பாடுகளும் நடைபெற்றன. சுமார் எண்பது வயதான பெரிய குருக்கள் தமது ஸ்தானத்தில், வாலிபரும், பூஜைக்கிரியாதிகளில் மிகவும் தேர்ந்தவருமான சுந்திரமூர்த்திக் குருக்களை அமர்த்தத் தீர்மான மாகியிருந்தது.

அடுத்த படியாக, கோயில் தாசி புவனேச்வரியின் மகள் வடிவாம்பாள் அரங்கேற்றம் ஆண்டவன் எதிரிலேயே நடைபெறுவதாகத் தீர்மானம். புவனேச்வரி ஆண்டவனுக்குத் தன் மகளை அர்ப்பணிக்கும் முறையில், தன்னுடைய நெடுங் காலக் கோரிக்கைகள் யாவும் நிறைவேறும் என்று நம்பினாள். ஏனெனில் அன்றைக்குப் பக்கத்தூர் பெரிய ஜமீன்தார் விஜயம் செய்வதாகவும் தெரிந்தது. பகவான் அருளால் ஜமீன்தாரின் கண்ணோக்கம் சற்றே தம் பக்கம் திரும்பினால் போதும் என்று கருதினாள் புவனேச்வரி.

திருமுருகனுக்குச் சாத்துவதற்கென்று பூத்தொடுத்துக் கொண்டிருந்த புவனேச்வரிக்குத்தன ஆசைகளை வெளியிட அதுவே தருணம என்று தோன்றியது போலும்! அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று எதிர்பார்த்துக் காத்திருந்தான் மருதவாணன்.

“என்னங்க, இன்னும் ஜமீன்தாரு வரல்லீங்களா?”

“இல்லையே புவனா! அவரு வந்தாத்தான் சாமி புறப்பட்டுடுமே?”

“அடக்கடவுளே குழந்தைக்கு அலங்காரம் பண்ணி வச்சு சாமக்கணக்கா ஆவுதே!”

“என்ன செய்யறது புவனா, கடவுளே தேவலை, இந்த மனுஷங்களைக் காட்டிலும் உம!” என்று பெருமூச்சு விட்டான அவளுடைய ஆதாவாளனான மருதவாணன.

“இந்தாங்க, இது சாமி காரியம், ஏதாச்சும் தப்புத் தண்டாவா பேசாதீங்க. அவள் ஆண்டவன் கொடுத்த குழந்தை, அவருக்குத் தெரியாதா என்ன?”

மருதவாணன் கப்பென்று வாயை மூடிக கொண்டான். ஆனால் அதே சமயம் தொலைவில் ஊதியசங்கு முழக்கமும், அதிர் வேட்டுச் சப்தமும சாமி புறப்பட்டு விட்டது என்பதை அறிவித்தன.

தொடுத்த மாலையைக்கையிலெடுத்துக் கொண்ட புவனேச்வரியைத் தொடர்ந்து சென்றாள் வடிவாம்பாள். அவர்களுக்குப் பின்னே நிதானமாகச் சென்ற மருதவாணனின் மனதில் எத்தனையோ சிந்தனை அலைகள். ஆண்டவன் கிருபாகடாட்சம் ஜமீன்தார் மூலம் ஏற்பட வேண்டுமே யெனபது தான் அதில் பிரதானமானது. ஆனால் ஆண்டவன் கிருபாநோக்கம் வேறு ஆசாமி மூலம ஏற்பட இருந்தது என்பதை அவனோ அல்லது வேறு யாரோ எப்படி அறியமுடியும

வேல்முருகன் மயில்வாகனத்தில் ஆரோகணித்து அமோகமான அலங்காரரூபியாய் வருகிறார். அவருக்கு முன்னே பெரிய குருக்களான ராஜரத்தினக்குருக்கள் பட்டுப்பீதாம்பரம் உடுத்து முன்னே நடக்க, அவருக்குப் பக்கத்தில் கம்பீரமாக நடந்துவந்தார் சுந்திரமூர்த்திக்குருக்கள்.

கட்டுமஸ்தான சரீரம்; சற்றுக்கருப்புத்தான் என்றாலும் எடுப்பான தோற்றம், அகன்ற நெற்றி அதிலே விபூதிப்பட்டை, தீட்சண்யம் வாய்ந்தவிழிகள், அகன்றமார்பு; அதைச்சுற்றியிருந்த உருமால், இளந்தொந்தி, உயரத்துக்கேற்ற பருமன், பருமனுக்கேற்ற உயரம்; இந்தக்கோலத்திலிருந்த சுந்திரமூர்த்திக்குருக்கள் அத்தனை பேரையும் வசிகரித்ததில் வியப்பில்லை.

திருப்புகழ், தேவாரம் முதலிய பஜனைப் பாடல்களைப் பக்தர்கள் பாடிவர, பல்லாயிரம்மக்கள் பரவசத்துடன் திருமுருகனைத் துதிக்க வேல் வேல் என்று இன்னொரு புறம் பக்தகோடிகள் முழங்க முருகன் நாலு வீதியும் வலம்வந்தார். அவர் திரும்பவும் கோயிலுக்குள் நுழையும்போது அவரை வரவேற்கக் கைகுவித்துநின்றாள் நடனக்கலையழகி வடிவாம்பாள். பக்தர்களின் கவனம் சடடென்று மாறி, அழகி நிற்கும் பக்கம் திரும்பியது. அவள் நடனங்காணத் தவித்தது அத்தனைபேர் மனமும். புவனேச்வரியோ கொஞ்சதூரத்தில் நின்ற ஜமீன்தாரின் நோக்கம் எங்கு திரும்புகிறது என்று கவலையுடன் கவனித்தாள். மருதவாணனும் அப்படியேதான்! ஜமீன்தார் 'பேஷ்!' என்று சொல்லிச் சிரக்கம்பம் செய்தாலன்றோ எதிர்காலம் கவலையின்றி இருக்கமுடியும் என்றெண்ணித்தவித்தான் அவன்.

சரி! உத்திரவு பிறந்துவிட்டது. ராஜரத்தினக்குருக்களின் கரத்தில் புவனேச்வரி தொடுத்திருந்த மாலை வந்து சேர்ந்தது. அம்மாலையை சுந்திரமூர்த்தியின் கையில் கொடுத்துத் திருமுருகன் மீது அணியும்படி சைகைகாட்டினார் பெரியகுருக்கள். ஆனால் அவர் செய்த சைகையில் இல்லை சுந்தரமூர்த்தியின் கவனம்!

அங்கே அழகே உருவாய் நிற்கும் நடனக்கலையரசி வடிவாம்பாளின் மீதுதான் அவர் கவனம் சென்று லயித்தது. கண்டசரம் அணிந்து ஜதிபோடத்தயாராயிருந்த பாதம் முதல், நெற்றி வட்டத்தில் தரித்திருந்த தங்கப் பட்டம் பளிச்சென்று மின்னி முகத்தை அழகுபடுத்தியிருந்தவரை அள்ளி விழுங்கி விடுவதுபோல் பார்த்தன அவர் கண்கள்.

பூங்கொடி போன்ற உடல் அமைப்பிருந்தாலும், உயரத்துக்கேற்ற அங்க அமைப்புத்தான். பழுத்த எலுமிச்சை நிறமேனி, கடைந்தெடுத்த தந்தப் பிடிகள் போன்ற நீண்ட கரங்கள்; வரிபடர்ந்த நீண்டகயல் விழிகள், அளந்த அழகு நாசி, மாம்பழக் கதுப்புக் கன்னங்கள்; பச்சைப் பட்டுடையுடுத்து பரதநாட்டிய மாடத் தயாராய் நின்றாள் அவள். சற்றே ஒரு புறமாக உடலைச் சாய்த்து ஒயிலாக நின்று வணங்கிய அவளுடைய வாளிப்பான உடலழகை, ஏன் உள்ளத்தையும்தான் ஊடுவிருப் பார்ப்பது போல் பரவச உணர்ச்சி வேகத்துடன் நின்றார் சுந்திரமூர்த்திக் குருக்கள்.

அவள் நடனம் ஆடினாள். அந்த நடனம் அவருக்குமட்டும் அல்ல, அங்கே கூடியிருந்த அத்தனை பேருக்கும் ஆனந்தப் பரவசத்தை அளித்தது. ஆனால் அவரோ மனமயக்கமுற்று நிலைதடுமாறிப்போனவர் போல் நின்றார். எவ்வளவோதூரம் தன் மன உணர்ச்சியை அடக்க முயற்சித்தும் இயலவில்லை தன்னையும் மீறியநிலையில் அவள் அருகில் வந்தார். அவருடைய கரம் தானாகவே எழும்பி அந்த மாலையை அணங்கின் கழுத்தில் போட்டுவிட்டது. எதிர்பாராத இந்த மாறுதலைக்கண்ட அவள் கண்கள் அவரை மருட்சியுடன் நோக்கின. அந்த விழிகளில் பொதிந்திருந்த கேள்வி, பயம், ஆவல், பதற்றம், எல்லாம் அலாதியானது. ஆனால் அதே சமயம் இவர் பார்வையிலும் புகுந்துகொண்ட பரவச நிலைக்கு வர்ணனையே கிடையாது. அந்த நிலை வர்ணனைக்கு மிஞ்சியது! தன்னையும் மீறிய பரவசநிலையில் முன்னைவிட இப்போது அற்புதமாக ஆடினாள் வடிவாம்பாள். அவள்மீது முருகன் கிருபை, குருக்கள் மூலம் விழுந்து விட்டதை அப்போதுகூட யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் கூட்டத்திலே ஒரு சல சலப்பு. ஆண்டவனுக்குப் போடவேண்டிய மாலை, மனமயக்கத்தால், இடம்மாறி விட்ட மாலையிடல் சம்பவம், ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணி விட்டது.

எப்படியோ நிலைமையைச் சரிப்படுத்தி விட்டார் ராஜரத்தினக்குருக்கள். வடிவாம்பாளோ, தன்னைப் படைத்த ஆண்டவனையும், தன் மனங்கவர்ந்த சுந்திரமூர்த்திக்குருக்களையும் ஒரு முகமாய் எண்ணி பெருங் கும்பிடு ஒன்று போட்டு அரங்கத்திலிருந்து நகர்ந்தாள்; காலமும் நகர்ந்தது. சுந்திரமூர்த்திக்குருக்களும், வடிவாம்

பாளும் ஒன்று சேருவதை எந்த சக்தியும தடுக்க இயல வில்லே. அவர்கள் புதுமணத் தம்பதிகளாய் அன்றுமுதல் வாழத் தொடங்கினர்கள்; வாழ்ந்தார்கள். ஊரார், இந்த அதிசயத்தை ஆச்சரியத் துடன், வேண்டா வெறுப் புடன் கவனித்தாலும் அவர்களால் இதில் தலேயிட முடியவில்லே.

தமது கோவில் பணியில் ஒரு குந்தகமும் இல்லாமல் நடந்துகொண்ட குருக்கள் வாழ்வின்பத்தை வடிவாம்பா, ளுடன அனுபவிபபதிலும ஒரு குறையும இல்லாமல் நடந்து கொண்டார்.

ஆனல், புவனேச்வரியும், மருதவாணனும் அதிகநாள் பொறுக்கவில்லே. அவர்களே எப்படியாவது பிரித்து விடவேண்டும் என்று துணிநதனர். அக்காள் மகனுக்குக் கலியா ணம் அதுவும் பக்கத்தூரில், போகாமல் இருந்தால் தவறு என்று வடிவாம்பாளிடம் வறபுறுத்தினர்கள் இருவரும்.

வேறு வழியின்றி அவரிடம் இதை எப் படிச் சொல்வதென்று யோசித்தபடி குருக் களே எதிர்பார்த்தாள் வடிவாம்பாள். அவர் வழக்கம் என்றும் மாருது.

முதல் ஜாம பூஜை மணி அடித்ததும் அவர் முகம் பரவசமடையும்; இரண்டாம் ஜாமத்தில் கொஞ்சம் ஏக்கங்கலந்தபாவனே; மூன்ரும் ஜாமத்தில் சிந்தனேக்கட்டுக் கோபபு அவிழ்ந்து விடும்; பிறகு அவரு டைய அவசரம அளவுக்கு மிஞ்சியது. அவ ளுடைய ஆவலும் அளவுக்கு மிஞ்சியது. ரதிக்கு மனமதன்; தாரைக்குச் சந்திரன; வடிவாம்பாளுக்கு சுந்திரமூர்த்திக்குருக்கள! இதுதான் அவர்களுடைய தினசரி நடை முறை. அன்று அவர் வந்ததும் அவள் முகம் வாட்டமுற்றிருப்பதைக் கண்டு பதறிப் போனர். காரணம் கேட்க நிதானித்த அவர் வாய்விட்டுக் கேட்கவில்லே. அவளே சொன்னள்.

"அம்மா ரொம்பக் கெஞ்சுகிருள், பக்கத் தூரில் ஒரு கலியாணம். அவசியம் நானும் போகவேண்டுமாம்."

"நீ என்ன சொன்னய் வடிவு?"

"நீங்கள் சொன்னல்தானே, நாலு நாள் தான் என்று அம்மா சொல்லுகிருள்,"

"நாலு நாள் என்ருல் நமக்கு நாலுயுகம் இல்லேயா வடிவு?"

"அம்மா ரொம்பவும்......"

"அப்புறம், உன் இஷ்டம் வடிவு!"

"இப்படிச் சொல்லிவிட்டால் ... அம்மா எப்படியாவது போய்த்தானக வேண்டு மென்கிருள்."

"வடிவு, மெய்யாகவேதான் நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கிருயா? அல்லது விளே யாடுகிருயா?"

"இதில் விளேயாட்டென்ன? அம்மா தான் விடமாட்டேன் என்று......"

"வடிவு, உன்னேப்பிரிந்து ஒரு நிமிஷம் கூட என்னல் இருக்க முடியாது. நீ சென் ருல் மீண்டும் நாம் ஒன்று சேரவேமாட் டோம். இதை நான் நன்ருக அறிவேன்." சனி நாக்கிலே புகுந்தால் வாக்குப்பலிக்க அதிகநேரமாகாது என்பது அனுபவம்!

அம்மாவின் வற்புறுத்தலேப் புறக்க ணிக்க இயலாது சென்ற வடிவாம்பாள் அப்புறம் திரும்பவேயில்லே! யாராரோ, என்னென்னமோ, பேசிக்கொண்டார்கள். ஆனல் சுந்திரமூர்த்திக்குருக்கள் மறு நாளும் அவள் வீடு சென்ருர். அடுத்த நாளும் சென்ருர்.... மூன்ருவது நாளும் சென்ருர்... நாலாவது நாள் புவனேச்வரிச்

யும் மருதவாணனும் மட்டும்தான் திரும்பினார்கள்.

“போன இடத்திலே அவளைப் பாம்பு கடித்துவிட்டதாம், பாவம்! போய்விட்டாள்!” என்று ஊர் பூராவும் பேசிக்கொண்டது. ஆனால் சுந்திரமூர்த்திக்குருக்களுக்கு மட்டும் அதில் நமபிக்கையில்லை... அன்று மட்டும் அல்ல; கடந்தபதினைந்து வருஷங்களாகவேதான்! அவர் முன்போலத்தான் புது மாப்பிளளை ரீதியில் போனார், போய்க்கொண்டிருக்கிறார்! வடிவாமபாள் இல்லாததால் அங்கு நிலவிய சூனியநிலையை அவர் லட்சியம செய்யவில்லை. அந்தச் சூனிய நிலையிலுங்கூட அவள் அவருக்கு இன்பராணியாகக் காட்சியளித்தாள் போலும! அட கடவுளே! அவள்தான் போய்த்தொலைந்தாளே? இவருக்கு அங்கென்னவேலை!’

ஊராரின் அதிசயம் வளர்ந்ததே ஒழிய குறையவில்லை. தவிரவும் புவனேச்வரிககும் இதன் உண்மை என்னவென்றும் புரியவில்லை. “அங்கே முன்போல அவருக்காக யாரும் காத்திருக்கவில்லையே! வெறும் கட்டிலும் படுக்கையும தானே இருக்கிறது, எதற்காக வருகிறார்? வந்து என்ன செய்கிறார்?” என்று திக்பிரமையடைந்து யோசித்த புவனேச்வரிக்கும், மருதவாணனுக்கும் உண்மை புரியவில்லை. நாள் தவறாது, வேளை தவறாது வரும் அவரிடம், அவர்களுக்கு கொஞ்சநாளவரை வெறுப்பிருந்தாலும, அதை வெளிக்குக் காடடிக்கொளளவில்லை. பிற்பாடு இந்த வெறுபபு வியப்பாக மாறிற்று. வியப்பும் பயபக்தியாக மாற அதிக நாள் ஆகவில்லை.

புவனேச்வரிக்குத்தான் இந்த ‘அதிசயமான நடைமுறை’ பெரும்வேதனையாயிருந்தது. அவர் தன் மகளிடம் கொண்டிருந்த, கொண்டிருக்கும் அனபில் தெய்வீகம் கலந்திருபபதை நெடுநாளைக்குப் பிறகுதான் தெரிந்து கொண்டாள். என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே? அதுவும் தன்வயிறறில் பிறந்து சிறப்புடன், சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்தியவளை இப்படி அல்பாயுசிலேயே ஒழித்துவிடுவதில் கண்ட சுகந்தான என்ன? அல்லது அவர்தான் அவளை மறந்து வேறு இடத்தில் மனம் செலுத்தினாரா? ஊமைகண்ட கனவு யாருக்குத் தெரியும்? புவனேச்வரியும், மருதவாணனும் இந்த ஊமை நிலையில்தான் இருந்தார்கள்.

3

அதோ, வழக்கம்போல் ஜாம பூஜை, இரண்டாம் ஜாமபூஜை, மூனறும் ஜாம பூஜையும் முடித்துவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

வெறுங் கட்டிலும் படுக்கையும்தான் அங்கே அவருக்காகக் காத்திருக்கிறது. நிலவும் தெனறலும் பழையமாதிரிதான். ஆனால் அவர் மட்டும், புத்தம்புதிய மாப்பிளளை மாதிரிதான் வருகிறார்.

அந்தக் காலத்தில் சுமார் பதினைந்து வருஷஙகளுக்கு முனபு-அவர் அவளை எபபடிப் பார்த்தாரோ, அதேமாதிரிதான் இன்றும் வெறுங்கட்டிலையும் கொசுவலையையும் பார்க்கிறார். ஏன்? முதன் முதலில் அவள் ஒயயாரமாகக் கட்டிலில் எப்படி உட்கார்ந்திருந்தாளோ, அதைப்பார்ப்பது போல அந்த வலையைத்தூக்கிப் பார்க்கிறார். பிறகு பக்கத்திலிருந்த நாறகாலில் உட்காருகிறார். அப்படியே சற்றுநேரத்தில் தூஙகிவிடுகிறார்......

பொழுது வழக்கம் போல விடிந்துவிடுகிறது. ஆனால் அவருடைய வாழ்வில் விடிவுணடா? அல்லது வேறு மாறுதல்தானுண்டா? ஊராருக்கு இதுதான், ரொமபவும் ஆச்சரியமானதொரு பெரிய புதிராகத்தான் இருக்கிறது.

ஆயினும் ஒரு உண்மையை மறந்துவிட முடியாது. அஙகே கோயிலில் கல்லிலே வடிவெடுத்துக் காட்சியளித்த முருகர் அவருடைய தெய்வம்; இங்கே மறைந்து போன வடிவாமபாள் அவருடன் கலந்து விட்ட காதல் தேவதை.

சமீபகாலமாகத் தயாராகும் சினிமாப்படங்களுக்கு வெற்றுபிலிம் கிடைக்காதது ஒரு பெரிய கண்டம். ஆயினும் சில புரொட்யூஸர்கள் சப்த சமுத்திரங்களையும் தாண்டிப்போய் கன்னியைக் கவர்ந்து வந்த ராஜகுமாரனைப்போல, எப்படியோ பிலிம்களைக் கண்டு பிடித்து, ஸ்டுடியோக்களில் இடமும் பிடித்து ஷூட்டிங்கையும் மளமளவென்றுநடத்திவருகிறார்கள். இக்கஷ்டம் சீக்கிரம் நீங்கிவிடுமெனத் தெரிகிறது. நம் நாட்டிலேயே வெற்று பிலிம் தயாரிப்புக்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

❋ **மச்சரேகை** அதிசீக்கிரமே முடிவடைந்து வெளிவந்துவிடும் என்று தெரியவருகிறது. நடிக நக்ஷத்திரம் மகாலிங்கத்தின் சொந்தப் படம் இது. அவரே ஏககாலத்தில் இரண்டு வேஷங்கள் தரித்து இதில் அபாரமாக நடித்திருக்கிறார். அவருடன் கூட எஸ். வரலக்ஷ்மி நடிக்கிறார். நல்ல படங்களைத் தயாரிப்பதில் பேர் பெற்ற ஸ்ரீ புல்லையாதான் இப்படத்துக்கும் டைரக்டர். எனவே இவ்வருஷத்தில் மச்சரேகை ஒரு பாக்ஸ்ஆபீஸ் ஹிட்டாயிருக்கும் என்பதை இப்போழுதே ஊகித்துக் கொள்ளலாம்.

❋ **இதயகீதம்** ஒரு தடபுடலான நக்ஷத்திரப்படம். ஞானசவுந்தரியைத் தயாரித்து தமிழ் மக்களை மயக்கிவிட்ட ஜோஸப்தளியத் ஜூனியர் தான் தமது சொந்த ஸ்டுடியோவில், சொந்த மேற்பார்வையில் ஏராளச் செலவில் அபார செட்டிங்ஸ்களுடன் படத்தைத் தயாரிக்கிறார். மஹாலிங்கம், ராஜகுமாரி போன்ற நக்ஷத்திரங்கள் ஜ்வலிக்கும் இந்தப்படத்தையும் அதிசீக்கிரமே எதிர்பார்க்கலாம்.

❋ **மாடர்ன் தியேட்டர்ஸார்,** நேரத்தை வீணாக்காமல் நல்ல படங்கள் தயாரிப்பார்கள் என்று நெடுநாளாகப் பேரெடுத்தவர்கள். இதோ அடுத்தாற்போல் அவர்கள் மந்திரி குமாரியை முடித்துத் திரையிட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். டைரக்டர் ஸ்ரீ. டி.ஆர். சுந்தரமும் எல்லிஸ் ஆர். டங்கனும் சேர்ந்து டைரக்ட் செய்துள்ள இந்தப்படத்தில் ஜனரஞ்சக நடிகர்களான குமாரி கமலா, மாதுரிதேவி, சகுந்தலா, எம். ஜீ. ராமசந்திரன் முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

சேலத்திலிருந்து வந்துள்ள இன்னொரு சுவாரஸ்யமான சேதியையும் உங்களுக்குச் சொல்லி வைக்கிறோம். மாடர்ன்தியேட்டரில் தமிழ் நாட்டின் பிரபல நக்ஷத்திரங்களைக்கொண்டு, கணபதி பிச்சர்ஸார் ஒரு பிரமாதமான படம் தயாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். படத்தின் பெயர்

'மீனுபஸா'ரில், நர்கீஸும், ஷ்யாமும்

'மந்திரிகுமாரி'யில் எம். ஜி. ராமச்சந்திரன்

தற்காலிகமாக 'மங்கை' என்று வைத்திருக்கிறார்கள். இதற்கான முன் ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெறுகின்றன.

❋ **'ராணி'** என்ற பேருடன் கோவையில் ஜூபிடர் பிக்சர்ஸார் ஒரு படம் தயாரிக்கிறார்கள். கதை 'லவ்ஸ் ஆப் கார்மன்', என்ற ஆங்கிலப் படத்தைத் தழுவியதாம். பானுமதிதான் பிரதம நடிகை. ஹிந்தியிலும் இதே கதை தயாரிக்கப்படுமாம்.

பக்ஷிராஜா பிலிம்ஸாரின் 'ஏழை படும்பாடு' அதிசீக்கிரமே வெளிவந்துவிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

'சென்னை ஸ்டுடியோக்கள் எப்போதுமே தூங்குவதில்லை,' என்று ஒரு ரஸிகர் முன்பொரு தடவை என்னிடம் சொல்லி யிருக்கிறார். இது உண்மையேயாகும். **ஜெமினி**, ஹிந்தி **மங்களா**வையும், தமிழ் **ஔவையாரை**யும், துரிதமாகவும் சிறப்பாகவும் தயாரித்து வருகிறது.

❋ **'ஓர் இரவு'** படத்தை **ஏ. வி. எம் ஸ்டுடியோ** மிக விழிப்புடன் தயாரித்து வருகிறது. T. K. ஷண்முகம், P. S. கோவிந்தன், பாலையா, வைஜயந்திமாலா......போதுமா? இம்மாதிரி நக்ஷத்திரங்கள் ஜ்வலிக்கும் இப்படத்தை டைரக்ட் செய்யும் ஸ்ரீ நீலகண்டன் சீக்கிரத்தில் தயாரித்து முடித்து விடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

❋ **வனசுந்தரி**, கிருஷ்ணபிக்சர்ஸாரின் நக்ஷத்திரப்படம். நியூடோனில் தயாராகும் இந்தப் படத்தில் சின்னப்பா, ராஜகுமாரி, வரலக்ஷ்மி, பாலையா ......இன்னும் 'வாழ்க்கையிலே' மீனாக்ஷிக்கு வரங்கிடந்து, நம்மைக் குலுங்கக் குலுங்க சிரிக்க வைத்த நடிகர் எம். எஸ். கருப்பையா, புளிமூட்டை, ஹாஸ்ய ஜோடிகளான கிருஷ்ணன் மதுரம்......அப்பாடி! இவ்வளவு நக்ஷத்திரங்களா என்று நீங்கள் பிரமிக்கிறீர்களா? கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள். படம் வெளிவந்ததும் நம்மைத் திணறடித்துவிடும் என்பதில் இஞ்சித்தும் சந்தேகமில்லை.

❋ இனிமை தரும் நல்ல பழங்களை வேண்டாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்! இதே மாதிரி ரஸிகர்களின் திருப்திக்குத் தக்கபடி **பழக்காரி** என்ற பேருள்ள படமொன்று ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாராகிறது. மஹாலிங்கம், டி. ஏ. ஜெயலக்ஷ்மி முதலிய நடிகர்களைக்கொண்டு இப்படத்தை எம்மெல் புரொடக்ஷன்ஸார் தயாரிக்கிறார்கள்.

❋ **மாயாரம்பா** என்னும் சிறந்த படத்தை தமிழிலும், தெலுங்கிலும் தயாரிக்கிறார்கள்.

'தேவமனோஹரி'யில்
பானுமதியும், ஹொனனப்ப பாகவதரும்

அனேகமாக முடிவடையும் தருவாயிலிருக்கும் இப்படம் சாம்ரியா டாக்கீஸாரின் ரிலீஸாகும்.

லாவண்யா பிக்சர்ஸாரின், **பாரிஜாதம்**, டெஸ்பி பிக்சர்ஸாரின் **உண்மையின் வெற்றி** முதலிய படங்கள் அனேகமாக முடிவடைந்து 'ரிலீஸ்' ஆகத் தயாராக இருக்கின்றனவாம்.

இன்றைய சினிமா உலகத்தில் 'டப்பிங் சீசன்' தலைகாட்டி யிருக்கிறது. இப்பொழுதெல்லாம் இந்த 'டப்பிங்' படங்களின் ஜாப்தா நீண்டுகொண் டிருக்கிறது. தமிழ் 'வாழ்க்கை,' தெலுங்கிலும் ஹிந்தி வத்ஸலா கலியாணம் தமிழிலும்....இப் படியாக 'டப்பிங் சீசனில்' எகப்பட்ட மாறுதல்கள் **புளூ லாகூன்** ஆங்கிலத்திலிருந்து தமிழில் உரு வாகி வந்திருக்கிறது. ஒரு விஷயம்; இந்த டப்பிங் படங்கள் சம்பந்தமாக நம் அபிப்பிராயம் என்ன வென்று பலர் கேட்டு எழுதியுள்ளனர். அடுத்த இதழில் நம் அபிப்பிராயத்தையும் எழுதுகிறோம்.

குறிப்புகள்

சென்ற மாதத்தில் சென்னை சினிமா விசிறி கள் சங்கத்தின் சார்பில் படங்கள், நடிகர்கள் தரம்பற்றி தேர்தல் ஒன்று நடைபெற்றது. **வாழ்க்கை** முதல்தர தமிழ்ப்படமாகவும், நடிகை **பானுமதி** முதல்தர தமிழ்-தெலுங்கு நக்ஷத்திர மாகவும், **எம். கே. ராதா** முதல்தர தமிழ் நடிகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக, அந்தச் சங்கத்தார் நமக்கு எழுதியுள்ளனர்.

இதே சமயம் சர்க்கார், **'நவஜீவனம்'** முதல் தர தமிழ்ப்படம் என்று தீர்ப்பளித்து ரூபாய் 500 பரிசளித்துள்ள செய்தியும் வந்துள்ளது.

'இதயகீத'த்தில் ஒரு காட்சி

'இதயகீத'த்தில் லலிதா—பத்மினி

இந்தப் போட்டியில் அதிகப் படங்கள் வராமைக்கு எத்தனையோ காரணங்களை எக்ஸிபிட்டர்களும் புரொட்யூஸர்களும் சொல்லுகிறார்கள்.

பிரபல திருமணம்

ஜெமினி வாசன் அவர்களின் புதல்வி சௌ. லக்ஷ்மி நாராயணி 19-5-50 தேதியன்று ஸ்ரீ கோபாலய்யர் அவர்களின் புதல்வன ஸ்ரீ வேங்கட சுப்பிரமணியனின் மனைவியானார். அன்றே ஸ்ரீ வாசனின் புதல்வன் சி. பாலசுப்பிரமணிய னுக்கும் உபநயனமும் நடைபெற்றது. நாலு தினங் கள் பூராவும் அமர்க்களமாக நடந்த கலியாண விமரிசையை வர்ணிக்கத் தனியாக பல பக்கங் கள் ஒதுக்க வேண்டும். ஊரெங்கும் இந்தக் கலியாணத்தைப்பற்றிய பேச்சுதான். எனவே சுருக்கமாக புதுத்தம்பதிகளுக்குப் 'பார்வதி'யின் பரிபூரண ஆசிர்வாதத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சினிமா ரஸிகர்கள் ரொம்ப ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் தியாகராஜ பாகவதரின் படம் எப்போது வரும் என்று. இப்போது நாகூரின் மேற்

'மந்திரிகுமாரி'யில் சகுந்தலா

பார்வையில் பாகவதரின் 'அமரகவி' தயாராகும் என்று ஒரு நம்பகமான செய்தியைக் கேள்விப் படுகிறோம். தவிரவும் நாகூர் பாதி தயாராகி யுள்ள 'சந்திரவங்கா' என்ற தெலுங்குப் படத்தை முடிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண் டுள்ளாராம்.

பிரகதியின் புது நிர்வாகம்

'தேவ மனோஹரி' தயாரித்த ஆர்கேஸ் பிக்சர் ஸார் இந்த ஸ்டுடியோவின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டுள்ளனராம். இங்கேதான் தேவமனோ ஹரி தெலுங்குப் பதிப்பும, தயாராகப் போகி றது. பட உலக 'மாக்னெட்டுகள்' சிலர் சேர்ந்து சினிமா உலகத்தில் ஒரு சிங்காரி யைக் கொண்டு நுழைக்கப்போவதாகவும், அதற் கான முன் ஏற்பாடுகள் யாவும் செய்தாகி விட்டனரென்றும் தெரியவருகிறது. இதில் டி. ஆர். ராமச்சந்திரன், ஸ்ரீராம், வி. கே. ராமசாமி முதலியவர்களும் நாட்டிய சகோதரிகளான லலிதா பத்மினியும் நடிப்பார்களாம். இதுவும் நியூடோன் ஸ்டுடியோவில்தான் தயாராகுமாம்.

சென்னை நகரத்தின் அழகான தியேட்டர்களான 'பிரபாத்' பிராட்வே, இனிமாசெண்ட்ரல், சரஸ்வதி முதலியவற்றின் மேனேஜிங் டைரக்டரான ஸ்ரீ சி. பி. சாரதி அவர்களின் புத்திரி சௌ. அநுசூயா தேவிக்கும், ஸ்ரீ பி. வி. ஷண்முகசுந்தர முதலியாரின் புத்திரர் ஸ்ரீ மணி சுந்தரத்துக்கும் ஜூன் 5-ந் தேதியன்று திருமணம்.

பிரபல விளம்பர கம்பெனியாரான P. S. மணி & Co., உரிமையாளர் ஸ்ரீ P. S. மணி அவர் களின் புத்திரி சௌ. பார்வதிக்கும் ஸ்ரீ A. K. சேஷய்யா அவர்களின் குமாரர் ஸ்ரீ A. S. கைலா சத்துக்கும் திருமணம் நடைபெறுகிறது.

ஜூன் 5 ந் தேதியன்று குடியாத்தம் பயனீர் பிக்சர்ஸின மானேஜிங் டைரக்டரும் பட உலகப் பிரமுகருமான ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கும், ஸ்ரீ ராமசந்திர நாயுடு அவர்களின் புதல்வி சௌ. ரங்கநாயகி அவர் களுக்கும், ஆம்பூரில் திருமணம் நடைபெறு கிறது. அதேதினத்தில் ஸ்ரீ பி. எஸ். கோவிந்த சாமிக்கும், சௌ. சாரதாவுக்கும் அந்த முகூர்த் தத்திலேயே திருமணம் நடைபெறுகிறது. புது மணத் தம்பதிகளுக்கு 'பார்வதி'யின் சார்பாக நம் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

❋ ஆர்கேயெஸ் பிக்சர்ஸாரின் தேவமனோஹரி சாகரிலும், பிராட்வேயிலும் பொதுமக்களின் அமோக ஆதரவுடன் நடைபெறுகிறது. ஆர்தர்ராங்கின் 'புளு லாகூன்,' தமிழிலே நீலக்கடலாக, மாறி, காசினோ தியேட்டரில் ஜூன 2ந் தேதிமுதல் ஆரம்பமாகிறது, ஆங்கி லத்திலிருந்து முதன் முதலாக தமிழிலே வந் துள்ள இந்த டெக்னிகலர் படம் நல்ல ஆதரவு பெறும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். பாஞ்சோலி புரொடக்ஷன்ஸாரின் 'மீனா பஸார்' என்ற ஹிந்திப்படம் அதிசீக்கிரத்திலேயே சென்னையில் திரையிடப்படும். நாகீஸ், ஷ்யாம், கோபி முதலிய நக்ஷத்திரங்கள் நடித்துள்ள படம் இது. ஹிந்தி படரஸிகர்களை ரொம்பவும் வசிகரிக்கக்கூடிய படம் என்று இப்போதே சொல்லிவிடலாம்.

❋ 'பணமகள்': எனெஸ்கே பிலிம்ஸார் இந்தப் புதுப்படத்தை, ஸ்ரீ. வ. ரா. அவர்கள் 31—5—50ல் நல்ல முகூர்த்தத்தில் பார்த்துஆரம் பித்து வைத்தார். ஸ்ரீ வாசன் முதலிய சினிமா உலகப் பிரமுகர்கள் அனேகர் விஜயம் செய்து விழாவை வெற்றிகரமாக நடத்தி வைத்தனர்.

மருமான் பரிசு

ஆடிக்கு எப்போது அழைப்புவரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான் வெங்கு. மனைவியைத் திருப்தி செய்விக்க வேண்டும். அவளை மட்டும் அல்ல, மாமியார், மாமனர், மைத்துனன் ரங்கன், குஞ்சு மைத்துனி சங்கரி அத்தனை பேரையும திருபதி செய்விக்க மாமனரிடமிருந்து அழைபபும் வந்துவிட்டது. இனனின்னருக்கு இன்னின்னது பிடிக்கும என்று அவன் தீர்மானித்தபடி வாங்கிக்கொண்டு புறப்பட்டான். வேட்டகம் சேர்ந்ததும குதூகலமான வரவேற்புத்தான். 'எனக்குஎன்ன வாங்கிண்டு வந்தே? என்று குஞ்சு மைத்துனி சஙகரி தன் குஞ்சுக் கைகளை நீட்டிக் கேட்டதும், அவள் கையில் ஒரு கிளாஸ்கோ பிஸ்கட் டப்பாவை வைத்தான்! சினன மைத்துனன் ரங்கன் கையில் ஒரு புதுப் பேனு வந்து சேர்ந்தது.

'இந்த சின்னதுகள் ரெண்டும் இப்படி அவனைச் சுத்திச்சுத்தி விரட்டுகிறதுகளே' எனறு உள்ளேயிருந்து சொனன மாமியார் கைக்கு ஒரு வெளளி குங்கும டபபி வந்து சேர்ந்ததும, அடாடா! அவள் முகத்தில் தவழ்ந்த சந்தோஷத்தைப்பார்க்க வேண்டுமே?

'சரிதான், அவாளுக்கெல்லாம் வாங்கிண்டு வந்தீளே, எனக்குமட்டும் ஒண்ணும் இல்லையா?' எனறு கெஞ்சியும கொஞ்சியும கேட்டுககொண்டே கொஞ்சம் எட்டத்தில் வந்துநினற அவன் மனைவி சுந்தரி, யருகில் நெருங்கி அவள் கைகளில் ஒரு சினன 'பண்டிலை' வைத்தான். அதைப பிரிததுப பார்த்தாள் அவளுக்கு ரொமபவும் பிடித்த பச்சைப் பட்டுப் புடவை! வாய் திறந்து எதுவும் சொல்ல முடியாதபடி மிதமிஞ்சிய சநதோஷம் அவளைத் திக்குமுக்காடச் செய்து விட்டது. ஆனல் ஒரு குறை; மாமனா முகமோ மூனரும் பேஸ்து மாதிரி இருந்தது. காலையில தனனை வரவேற்றபோது குஷியாயிருந்த மாமனர் திடீரென்று இபபடி உம்முணும்முஞ்சி ஆவானேன் என்று யோசித்தான் மருமான வெஙகு. பயனில்லை. எப்படியோ ரகசியமாக மனைவியிடமே கேட்டுவிட்டான்.

'உங்களுக்கு இன்னுமா தெரியவில்லை? எங்களுக்குப் பிடித்தவற்றையெல்லாம் வாங்கிவந்தீரே? அபபாவுக்குப் பிடித்ததை மட்டும் ஏன் வாங்கி வரவில்லை?' என்று கேட்டாள் சுந்தரி. அவருக்கு என்ன பிடிக்கும் என்று அவளிடம் ரகசியமாகவே கேட்டுத் தெரிந்துகொண்டான் வெங்கு. 'இதுதானே இதோ தருவித்துவிடுகிறேன பார்!' என்று ஓசைபபடாமல் போய் சென்னைக்கு ஒரு தந்தி அடித்தான்,

அன்றே ஒரு பார்ஸல் வந்தது தபாலில். இதென்ன பாஸல்' என்று மாமனர் வாய் விட்டுக் கேட்பதற்கும் அவன் அதைப் பிரித்து, அவர் கையில் வைப்பதற்கும் சரியாயிருந்தது. அப்போது பார்க்க வேண்டுமே, அவருடைய முகத்தை! அப்பாடி வாயெல்லாம பல்! பார்சலில் ஒரு பொடி டபபி அதிலிருந்து சிட்டிகையை எடுத்து மூக்கில வைதது உறிஞ்சிவிட்டு எனக்கு அம்பாள் பொடின்னு அவ்வளவு உசிரு,' என்று சொல்லிவிட்டு அருமையாக அந்த டப்பியைப் பார்த்தார். அம்பாள் பொடியின் பெருமை அறிந்து மருமான் அன்புடன் அளித்தபரிசில்தான் அவருக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?



பார்வதி
விமர்சனம்
பர்ஸாத்

‘பர்ஸாத்’ அல்லது மழை என்னுந் தலைப்புக் கொண்ட இப் படத்தைத் தயாரித்த ராஜ்கபூர் ஒரு மகத்தான காரியத்தைச் செய்திருக்கிறார் என்று பாராட்டுவதற்குமேல் அதிகமாகப் புகழும் வகை நமக்குத் தெரியவில்லை. “பாக்ஸ் ஆபீஸ்” வசூலைப்பற்றிக் கவலைப்படாமல் ‘கலை’ வளர்ச்சி ஒன்றையே நோக்கமாகக்கொண்டு இப்படத்தைத் தயாரித்துள்ளார் என்பதை நினைக்கும்போது நமக்குப் பெருமிதமுண்டாகிறது. கலைஞன் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும், ரஸிகன் என்றுள்ள அத்தனை பேரும் பெருமைகொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது “பர்ஸாத்”

கதையல்ல—காவியமே!

பர்ஸாத் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு காவியப்படமே அன்றி கதைப் படம் அல்ல என்றும் சொல்லலாம். எத்தனையோ சம்பவங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கோர்த்து அநாவசிய வளர்த்தலின்றி அடுத்த படி என்னவோ ஏதோவென்று படம் பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்யும் வண்ணம் ஒவ்வொரு காட்சியையும் அமைத்திருக்கிறார்கள். “காதல் தெய்வீகமானது, இந்தத் தெய்வீகக் காதலின்பம் நிரந்தரமானது” என்று கருதும் பிரான் ஒரு சிறந்த இசைவாணன். அவனுடைய இணைபிரியாத நண்பன் கோபால் ‘காதல் தோன்றலாம், ஆனால் அது நிரந்தரமானதல்ல, எல்லாம் காரியம் ஆகும்வரைதான்’, என்று கருதுபவன். இந்த இரு லட்சியப் பிரகிருதிகளின் போக்கைப் பின்னணியாக வைத்து மயிர்க்கூச்செறியும் சம்பவங்களைப் பல கோணங்களில் காட்டுகிறார் கதாசிரியர்.

கதைச்சுருக்கம்

மலைநாட்டில் நண்பர்கள் இருவரும் ஒரு புத்தம் புதிய காரில் உல்லாச யாத்திரை தொடங்குகின்றனர். ஆனால் காரைப் பிடித்துத் தள்ள வேண்டிய நிலை யேற்பட்டுவிட்டது! டைரக்டர் இவ்விடத்தில் மிக மெதுவாக வாழ்க்கை ஒரு விருவிருப்பின்றி உப்புச் சப்பின்றி நகர்கிறது என்பதைக் காட்டவே இவ்விதம் செய்திருக்கிறார் என்று தோன்றுகிறது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக வாழ்க்கைப்பாதையில் இந்த லட்சியப் பிரகிருதிகள் முன்னேறுகின்றனர். கோபால் கண்ட இடத்தில் கண்ட பெண்களுடன் கூடிக் களித்திருக்கிறான். பிரானோ தன் காதல் தேவதையைத் தேடித் தேடி அலைகிறான்.

நீலா என்னும் ஒரு கிராமப்பெண்ணை கோபால் சந்தித்து அவளுடன் உல்லாசமாக இருக்கிறான். ஆனால் கள்ளங்கபடற்ற அந்தப் பெண் உள்ளத்தில் உண்மைக்காதல் இடம் பெற்று விடுகிறது. ஆனால் கோபாலுக்கு இந்தக் காதல் விஷயமே ஒரு வெறும் விளையாட்டுத்தானே? அவளை மறந்து விடுகிறான். அவளோ அவனுக்காக ஏங்கித் தவிக்கிறாள்.

பர்ஸாத்

கதை, வசனம்:
ராமாநந்த்சாகர்

ஸினரியோ:

ராஜ்கபூர்

நடிகர்கள்:
ராஜ்கபூர், பிரேம்நாத்,
பி. எம். வியாஸ்,
நர்கீஸ், நிம்மி, சுசீலாதேவி
முதலியோர்

டைரக்ஷன்:
ராஜ்கபூர்

பிரான் எதிர்பாராத விதமாக ரேஷ்மா என்னும் அழகியைச் சந்திக்கிறான். அவர்களிடையே மலர்ந்த காதல் தெய்விகமானது. அவனைப் பிரிந்து அவளோ, அவளைப்பிரிந்து அவனோ இருக்க முடியவில்லை. ஆனால் ரேஷ்மாவின் தந்தை தன் காதலன் பிரானைச் சந்திக்க ஆற்றுப் பாலத்தின் கயிறு மூலம் சென்ற அவளைத் தடுத்தும் அவள் சென்றதால் அக் கயிற்றைத் துண்டித்து விடுகிறான். ஆனால் ஆற்றோடு சென்ற அவள் ஒரு செம்படவனால் காப்பாற்றப் படுகிறாள்.

பிரான் காதலியைப் பிரிந்த சோகந் தாங்காமல் தவிக்கிறான். கோபாலுக்கோ இந்தக் காதல் நோய் காமநோய்தான் என்று தோன்றுகிறது. எனவே அவனை ஒரு தாசியின் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். ஆனால் அந்தத் தாசிக்கு ஒரு கைக்குழந்தை. அந்தக் குழந்தையை ஆதரிக்கவே அவள் உடலை விற்றுப் பணம் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது என்பதைப் பிரான் அறிந்து, அவளுடைய தாயன்புக்கு வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்புகிறான். தாயன்பும் உண்மைக் காதலைப்போல் தெய்விகமானதல்லவா? குழந்தையைக் காக்கப் பணத்தையும் கொடுத்துவிட்டுத் திரும்புகிறான்.

நண்பன் கோபால், தாசியின் நேசம் எப்படி என்று கேட்டபோது அங்கே தாயன்பின் சக்தியை அறிந்து கொண்டேன் என்று கூறுகிறான்! கோபால் விழிக்காமலிருப்பானா? மீண்டும் தங்கள் யாத்திரையைத் தொடங்கும் அவர்கள் பாதையிலே ஒரு திடீர் மாறுதல்; மரம் ஒன்றில் கார் மோதி விடுகிறது.

ரேஷ்மாவைக் காப்பாற்றிய செம்படவன் அவளுடைய அழகில் மயங்கித் தன்னை அவள் மணக்கும்படி வற்புறுத்துகிறான். அவளுடன் பலவந்த மணம் செய்துகொள்ள ஏற்பாடுகள் நடக்கும்போது தொலைவில் கார்மோதிய சப்தம் கேட்டு செம்படவன் ஓடுகிறான். அடிபட்டுக் கிடக்கும் பிரானைத் தன் வீட்டுக்குக் கொண்டுவருகிறான். ஆனால் அவன் ரேஷ்மாவின் காதலன் என்று தெரிந்ததும் அவனைக் கொன்றுவிட முயற்சிக்கிறான். நல்லவேளை! கோபால், டாக்டர், போலீஸ் உதவியுடன் வந்து காதலர்களைக் காப்பாற்றி விடுகிறான். உண்மைக் காதலர்கள் ஒன்று சேருகின்றனர்.

ஆனால் கோபாலுக்கு இப்போதுதான் உண்மைக் காதலின் தன்மை தெரிகிறது. அவனை ஆதியிலிருந்து காதலித்த நீலாவைத் தேடிப் போகிறான். ஆனால் அவன் அவளுடைய உயிரற்ற உடலைத்தான் கண்டான்!

உண்மைக் காதல் தெய்விகமானது, நிரந்தரமான இன்பந்தரக்கூடியது என்பதை அவன் இப்போதுதான் அறிய முடிந்ததுபோலும்!

டைரக்ஷன்

படத் தயாரிப்பாளரான ராஜ்கபூரே டைரக்ஷனும் செய்திருக்கிறார். அவர் கலை யுள்ளம் பரிபூரண திருப்தியடையும் வரை ஒவ்வொரு சம்பவத்திலும் துரித கதியும் கவர்ச்சியும் அர்த்த புஷ்டியும் இருக்கும்படியாக அவர் பிடித்திருப்பது படத்திற்கு ஒரு வெற்றி. தவிரவும் கைதேர்ந்த காமெராமானும், ஒலிப்பதிவாளரும், டைரக்டரைப்போலவே கலையுள்ளம் படைத்தவர்கள் என்பதை 'பர்ஸாத்' நிரூபித்துவிட்டது.

காமெராமான் கையாண்டுள்ள ஒவ்வொரு ஷாட்டும் அவர்தம் திறமைக்கு ஒரு சான்று. ஒளியும் ஒலியும் வெவ்வேறாக விலகி நிற்காமல் ஒத்து இயைந்து உடலும் உணர்வும் போன்று அமைந்திருப்பது பற்றி எவ்வளவு மெச்சினாலும் தகும்.

நடிப்பு

பிரமாதம் என்று பாராட்டி அநாவசியமான வார்த்தைகளை அள்ளிக்கொட்ட வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் கதா பாத்திரங்கள் ஒவ்வொருவரும் அந்தப் பாத்திரங்களாகவே மாறிவிட்டதால் தனி நடிப்பு என்று கூறுவதற்கெதுவுமில்லை. கதா பாத்திரங்கள் நம்மைக் கவர்ந்து நம்மில் ஒருவராக மாறி நம்முடைய உள்ளத்தைக் கிளறி விடுகிறார்கள். பாடல்கள் காதுக்கு இனிமையாயிருப்பதுடன், இதயத்தைத் தொட்டு உருக்கிவிடுந்தன்மை வாய்ந்தவை. நிம்மி முதலில் பாடும் பாட்டு ஒப்பற்றதொரு சோககீதம். நர்கீசும் கபூரும் பாடும் 'டூயட்' கவர்ச்சியான பாடல்.

இதர அம்சங்கள் ஒவ்வொன்றிலும் புதுமையும், விறுவிறுப்பும் கொண்ட ஒரு படத்தை, காவிய நாடகத்தைக் கலைப்படமாக தயாரித்த பெருமை ராஜ்கபூருக்குமட்டுமல்ல, கலைஞர்கள் யாவர்க்கும் உரியது. நல்லதொரு படத்துக்குப் பேராதரவு தருவர் மகாஜனங்கள் என்பதற்கு 'பர்ஸாத்' ஒரு எடுத்துக்காட்டு. ஆர். கே பிலிம்ஸார் தாங்களுடைய கலைத்தொண்டில் ஆர்வங் குறையாமல் ஈடுபட 'பர்ஸாத்' பாதை வகுத்து விட்டுள்ளது.

துரோகத்தின் பலன்

[மார்ச்மீ' இதழில் வெளிவந்த இரண்டாவது படக் கதைப் போட்டியில் வாசகர்கள் பலர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க விஷயமாகும். இம்மாதிரி போட்டிக்கதைகள் பெரும்பாலாரைக் கலந்திருப்பதால் தொடர்ந்து இப்போட்டியை நடத்துவதில் எங்களுக்கும் அக்கறையுண்டாகிறது. கீழே காணும் கதை பரிசுக்குரியது என்று தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளது. இதை எழுதியவரின் விலாசம் ஜி. பரமசிவம்; வாணியர் தெருவு, புதுப்பேட்டை, மதறாஸ்.]

பூவனூர் கிராமத்தின் மிட்டாதார் பொன்னையாப் பிள்ளை பரம சாது. தம்முடைய காரியஸ்தனான கந்தசாமியிடம் அவருக்கு நிரம்ப நம்பிக்கையுண்டு. அவனோ பசுத்தோல் போர்த்திய புலி.

அறுவடை சம்பந்தமாக மிட்டாதாரும் அவனும் ஒருநாள் வயல் வெளிக்குச் சென்றனர். போகும் வழியில் என்ன நடந்ததோ என்னவோ, கந்தசாமி குய்யோ முறையோ வென்றழுதது தொலைவில் இருந்த கிராமவாசிகளின் காதில் விழுந்தது. எல்லோரும் ஓடி வந்தார்கள். பாவம்! மிட்டாதார் திடீரென்று இறந்துவிட்டாரே என்று வருந்தினர்.

ஊரார் யாரையும் சந்தேகிக்கவில்லை. மிட்டாதாரின் சொத்தையும், அவர் ஒரே மகனையும் பாதுகாக்கும் பொறுப்பு கந்தசாமியைச் சேர்ந்துவிட்டது. ஆனால் தன் மகனைச் செல்வமாக வளர்த்த கந்தசாமி, மிட்டாதார் மகனை மி+வும் கஷ்டப் படுத்தி, அவனைக் கண்ட கண்ட வேலைகளைச் செய்யும்படி கெடுபிடி செய்து கொடுமைப் படுத்தினான்.

இப்படியாக எத்தனையோ வருஷங்கள் ஓடின. நாளாக ஆக கொடுமை அதிகரித்தது. சுந்தரம் படாதபாடு பட்டான். உலக விவரம் தெரியும் படியான வயது வந்தும் வேறு வழியின்றி, அவன் தவித்தான். கந்தசாமியின் மகனான ரங்கசாமியோ ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனையோ முறைகள் தோற்றுக் கடைசியில் படிப்புக்கும் நமக்கும் ரொம்ப தூரம் என்று வீட்டிலேயே உட்கார்ந்து விட்டான்.

அவனுக்குக் கலியாணம் செய்துவைக்க எண்ணிய கந்தசாமி, தன் பணக்கார சகோதரியின் மகளான சுந்தரி என்னும் அழகான யுவதியை அழைத்து வந்தான்.

ஆனால் அவள் அழகும் அறிவுமற்ற ரங்கசாமியை வெறுத்து, சுந்தரத்திடமே அதிகக் கவர்ச்சி கொண்டாள். அவன் படும்பாடு அவள் மனதை உருக்கியது. கவர்ச்சி காதலாக மாற அதிக நாளாகவில்லை. ஆனால் ஒருநாள் எங்கோ ஊர்சுற்றி விட்டுத்திரும்பிய ரங்கசாமிக்கு ஒரே பசி; நேராக சமையல் அறைப்புறம் சென்ற அவன் இன்னும் சமையல் ஆகாமலிருந்ததைப் பார்த்துவிட்டு, சன்னாபின்னா வென்று கத்தஆரம்பித்தான்.

சுந்தரத்துக்கோ, ஒரு பெண் எதிரில் அதுவும் தன்னிடம் அன்பு கொண்டுள்ள சுந்தரிக்கு எதிரில், ரங்கசாமி இப்படிக் கேவலமாகத் திட்டுவதைக் கேட்கப் பொறுக்கவில்லை. எவ்வளவோ வாய் வார்த்தையாக, ரங்கசாமியை எச்சரித்துப் பார்த்தான். ஆனால் பயனில்லை. பக்கத்தில் சுந்தரி இருப்பதனால், அவள் எதிரிலேயே சுந்தரத்தை அவமானப் படுத்தவேண்டும் என்றெண்ணியே அவன் அப்படிப் பேசினான்.

சுந்தரம் தன்னிலை கண்டு குன்றிப்போய் அப்படியே இன்னது செய்வதென்றறிய வியலாதவனாய் திகைத்தானாலும், அளவுக்கு மீறிய ஆத்திரத்தால் பீடிக்கப்பட்டு அவனை வெறித்து நோக்கினான். "இந்தச் சமையற்காரப்பயல் திமிரைப் பார்த்தாயா அப்பா? இன்னும் சமையல் செய்யாமல் தீவட்டி மாதிரி நிற்கிறான் அப்பா......" என்று அப்பாவிடமும் போய்ப் புகார் செய்தான்.

அப்பனிடம் மகன் இப்படிப் புகார் செய்துகொண்டிருக்கும்போது சுந்தரம் சட்டென்று உள்ளே நுழைந்தான். அவன் ஆத்திரத்துடன் நுழைவதைப் பார்த்த இருவரும் பதறிவிட்டனர்.

அவனைக்கண்ட கந்தசாமிக்கு அளவுக்கு மிஞ்சிய கோபம் வந்துவிட்டது. எழுந்து 'ஏய், மடப் பயலே இப்பவே இந்த வீட்டை விட்டு வெளியே போய்த்தொலை' என்று கர்ஜித்தார்

"யார் வீட்டை விட்டு, யார் போவதென்பதை கொஞ்சம் யோசித்துப்பார்!"

இப்படிச் சொன்ன சுந்தரத்தின் முகத்தை அச்சமயம் பார்க்க ஒரே பயங்கரமாகவிருந்தது. அவன் ஏதோ ஒரு தீர்மானத்துடன்தான் அங்கு வந்திருக்கிறான் என்பதை அவர்கள் அறியவில்லை.

கந்தசாமி, அவன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவோ என்னவோ அவன் அருகில் வந்தான். ஆனால் சுந்தரம் தயாராய் வைத்திருந்த துப்பாக்கி அவனைப் பதம் பார்த்துவிட்டது! ஐயோ என்று அலறிவிழுந்தான் கந்தசாமி. ரங்கசாமி அச்சமும், ஆத்திரமும் பிடித்து உலுக்க "ஐயோ கொலை, கொலை!" என்று கத்தலானான். அவனையும் 'நீயும் போய்த்தொலை,' என்று குறிபார்த்துச் சுட்டுவிட்டான் சுந்தரம்.

ஏககாலத்தில் இருகொலைகள்! போலீஸாரிடம் போய்ச் சரணடைந்து, சகல விவரங்களையும் சொன்னான் சுந்தரம். அவனை மட்டும் அல்ல, அந்தப்பேதைப் பெண்ணையும் கைது செய்ய வேண்டி வந்தது.

கேஸ் ஜரூராக நடந்தது. ஆனால் போலீஸார் பெருமுயற்சி செய்து எல்லா விஷயங்களையும், மிட்டாதாரின் உயிலையும் கண்டுபிடித்து விட்டனர். நீதிபதி கேஸை வெகுதீவிரமாக விசாரித்துத்தான் தீர்ப்பளித்தார். அதாவது "மிதமிஞ்சிய ஆத்திரத்தாலும், தன்னுடைய கேவலமான நிலையில் ஏற்பட்ட அவமான உணர்ச்சியாலும், தன்வசமிழந்து சுந்தரம் இந்தக் கொலைகளைச் செய்திருக்கிறான். எனவே வேண்டுமென்றே அவன் செய்த கொலையல்ல. ஆயினும் கொலையை அலட்சியம் செய்துவிட முடியாது. ஏழுவருஷ தண்டனை. பிறகு சொத்துக்கள் பூராவும் அவனையே சேர வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

சுந்தரம், தான் கந்தசாமியிடம் பட்ட கஷ்டத்தைக் காட்டிலும், சிறைவாழ்வு கொடுமையாயிருக்காதென்றும், விடுதலையடைந்து வெளி வந்ததும் சுந்தரியை மணப்பதாக உறுதி கூறிவிட்டுச் சிறைவாசத்தை ஏற்றுக் கொண்டான்,

போடி தயாரிப்பில்
புதுமை
மனதிற்கு மகிழ்ச்சி
ஊட்டும் பொடி இதுவே!



ஒரு சிட்டிகை மோகன்
பொடி சோம்பலை நீக்கிச்
சுறு சுறுப்பை அளிக்
கிறது. எல்லோரும் உப
யோகியுங்கள்.

Canthan

தயாரிப்பவர்

மோகன் கம்பெனி

P. BOX NO, 1161. MADRAS, 21.

தந்தி ; 'ISWAR' போன் : 3711

ஆயில் எஞ்ஜின்கள், எலக்ட்ரிக் மோட்டார்கள், எலக்ட்ரிக் டிரில் லிங் மெஷின்கள், எலக்ட்ரிக் சாமான்கள், விவசாய பம்பு செட் டுகள், கேன் க்ரஷ்ஷர்கள், ரைஸ் மில் சாமான்கள், மற்றும் க்ரீம் ஸெபரேட்டர்கள் முதலியவற்றுக் கும் ஸ்டாக்கிஸ்டுகள்.

மதுரை ஜில்லாவுக்கு
'பெட்டர் ஆயில் எஞ்ஜின்'களுக்கு
விநியோக உரிமையாளர்கள்.

*

தி மாடர்ன் எலக்ட்ரிக் கம்பெனி

எலக்ட்ரிசல் இஞ்ஜினீர்கள்,
கண்ட்ராக்டர்கள்,
மெஷினரி வியாபாரிகள்

301. லிங்கிசெட்டித் தெரு,
சென்னை-1.

*

கிளை ஆபீஸ் :

134, திண்டுக்கல் ரோடு
மதுரை.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5

ரூ. 1000

முதற் பரிசு ரூ.700

இரண்டாவது பரிசு ரூ.300

ரொக்கப்பரிசு

முடிவு தேதி 25—6—1950

பிரவேசக் கட்டணம் தனிக் கூபனுக்கு அணா 8.

ஒரு ரூபாய்க்கு 3 கூபன்கள்

விடை கண்டுபிடிக்கும் விதம்

இடமிருந்து வலம் முதல் குறிப்பைக் கவனியுங்கள். 'குரு தேவனுக்கு வருடத்திற்கொருமுறை அதிவிமரிசையாய் இது நடத்துவார்கள்' என்ற குறிப்பிற் கேற்றவாறு 'குருபூசை' என்பதே விடையாக அமைகிறது இதேபோல் மற்ற எல்லா வார்த்தைகளையும் கண்டுபிடித்து எழுதி அனுப்பவேண்டும்.

ஆசிரியரின் ஸீல் இட்ட சரியான விடை சென்னை இண்டோ கமர்ஷியல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

[நிபந்தனைகள் வழக்கம்போல்]

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5- குறிப்புகள்

இடமிருந்து வலம்

1. குருதேவனுக்கு வருடத்திற்கொரு முறை அதிவிமரிஸையாய் இது நடத்து வார்கள்.

4. இது காரணமாகப் பெரிய தொரு காகிதச் சுருள் சிறியதாகலாம்.

6. இது நிலைத்து ஒருவனிடத்திலேயே இருப்பதில்லை.

8. தனது கணவனிடம் சாதணமாகார மனைவிக்கு அலாதியான இது இருப்பது சகஜம்தானே ?

9. இந்தியாவிலே இது என்ற பேச்சே கூடாது எனருர் காந்தி மகான.

10 என்னதான நல்ல பாட்டானுலும் இது இல்லாது பாடுகிருர்கள சில வித் வானகள்.

12. அரசகுமாரியுடன் காணலாம இவனை.

1 . எவ்வளவு கஷ்டம் நேர்ந்த போதிலும் அதைப்...........வேணடும எனபர் பெரியோர்.

14. இந்த நாணயம் இப்போது அதிகம் புழக்கத்தில் காணபபடவில்லை.

16 சுவாமிக்கு அர்ச்சனை செய்ய வேண்டுமானுல் இது வேண்டுமே.

17. மனிதன் என்ருல் இது ஏற்படுவது இயற்கைதான.

18. இது என்ருலும், கடல் என்ருலும் ஒனறே.

20. நுண்ணிய யந்திரங்களைச் சரியான படிப பாதுகாத்து வராவிடில் இது படிந்து பாழாகிவிடும.

மேலிருந்து கீழ்

1. இத்துடன் இருக்கும் ஒருவனை நெருங்கி அவனிடம் தமாஷாய்ப் பேசுவது விரும்பத் தக்கதல்ல.

2. பேய்க்குக் குறை இருக்கிறது.

3. சமண மதத்தவனிவன்.

5. பள்ளியில் பயிலும் சிறுமிகளின் கையில் புத்தகங்களுடன ஒரு இதையும் காணலாமே.

7. கிரிக்கெட் விளையாடும்போது வேகமாய் வரும பந்தை இது செய்வதற்குத் தனிச் சாமர்த்தியம வேணடுப.

9 தற்போது இந்தப் பதவி கிடைக்க வேண்டுமானல், செல்வாக்கும் ஆட்கட்டும் இருந்தால் போதும்.

10. சாப்பிட்டுவிட்டு வேலையின்றி......... கூடாதுதான்.

11. பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு இது போதிக்கபபட்டு வருகிறது.

12. இதான தரையில் நடமாடினுல் உடமபிறகுக கெடுதல நேரிடும்.

15. அநேகக் கோயில்களில் சிவபெருமான் சாதாரணமாய் இந்த ரூபத்தில் காட்சி அளிககிருர்.

19. சில சமயம் ரேஷன் அரிசியில் இதுவும் தெனபடுகிறது.

'பகுத்தறிவு' ப் போட்டி—5

நேயர்கள் கவனிக்க

இப்போட்டியின் சென்ற இதழில் இடமிருந்து வலம் என்றிருப்பதை குறிப்பு 19ஐ 20 என்று திருத்திககொள்ளவும்.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

மணியார்டர் ரசீதின்றி வரும் கூபன்கள் கவனிக்கப்படமாட்டா

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

பார்வதி பகுத்தறிவு'ப் போட்டி—4

பரிசு ரூ. 1500/-

முடிவு

முதற் பரிசு ரூ. 1000/-

48 பேர்களுக்கு

தலைக்கு ரூ. 20-13-4

சரியான விடை யனுப்பிய கீழ்க்கண்ட 48 பேர்களுக்கும் முதற் பரிசுத் தொகை ரூ. 1000/-ம் சமமாகப் பங்கிடப்பட்டுத் தலைக்கு ரூ. 20-13-4 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

பரிசுத் தொகைகள் 29-5-50 அன்று அனுப்பப் பெற்றன.

சரியான விடை



We hereby certify that the above is the solution in original deposited with us by 'Parvathi' on 27. 2. 1950 in a sealed cover which was opened in our presence today and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Indo-Commercial Bank Ltd.

Agent, Bazaar Branch

26th April, 1950

சென்னை (1) எஸ், ஜானகிராம் C/O ஸ்பென்ஸர் அண்ட் கோ (2) ஆர். கோவிந்தராஜலு பிராட்வே (3) மிஸ். அன்னபூரணி, மயிலை. (4) ஆர். வேதாசலம், ராயபுரம் (5) எஸ். காசிராஜன் திருவொற்றியூர் (6) எஸ். பி. ராமாம்ருதம் திருவல்லிக்கேணி (7) கனகசபாபதி (8) எல். பங்கஜவல்லி (9) யு. சுகவனம் அய்யர், புதுப்பேட்டை (10) எம். ராஜாமணி, தி. நகர் (11) அம்புஜம்மாள் (12) ஏ. கே. ராகவேந்திரன் (13) வி. ஜம்புலிங்கம் (14) ஏ. சுப்பிரமணியம்,சைதாப்பேட்டை (15) ராஜம் அம்மாள், சைதாப்பேட்டை (16—17) V· ராமமூர்த்தி அய்யர் சாலியமங்கலம் (18) ஷராப் வெங்கிடஸாமிநாயுடு ஸ்ரீவில்லிபுத்தூர் (19) எம். சத்தியமூர்த்தி, கும்பகோணம் (20) வி. கிருஷ்ணஸ்வாமி, ஆதம்பாக்கம் (21) ஜெ. பால்டேவிட், ஆலந்தூர் (22) கைலாஸய்யர் வெங்கடேச அக்கிரகாரம் (23) பி. ரகுபதி நாயுடு வேலூர் (24) எஸ். எஸ். நம்பூரி, திருச்சி (25) ஆத்மலிங்கம் பிள்ளை, வரகனேரி (26) ஆர். கனகசபை நாட்டார், கொல்லம் (27) கந்தய்யா,சின்னச்சேலம் (28) என். சூடாமணி சேலம் (29) ஸரஸா கீழநிலை (30) பகவதிராஜன், சாம்ராஜ்பெட் (31) அமினுதீன், காந்தி நகர் (பெங்களூர்) (32) வி. பழனிசாமி கவுண்டர், கோவை (33) டி. சங்கரய்யர், மதுரை (34) சின்ன ரெங்கஸாமி பண்டாரம் புதுவை (35) பி. எஸ் ராகவன், பன்ருட்டி (36) மல்லையா செட்டியார், ஈரோடு (37) வி. பிச்சுவய்யர், ஆதிச்சனூர் (38) ஏ. சடகோபாச்சாரி பாண்டி (38) புத்தூர் வெங்கட்ருமய்யர், கீவளூர் (40) வி. சேஷப்பிள்ளை, காருகுடி (41) எம். முத்துஸ்வாமிப்பிள்ளை, மேலத் திருப்பதி (42) ராமசாமிபத்தர், கண் கொடுத்த வனிதம் (43) லலிதா, பேராவூரணி (44) பகவதி, பேராவூரணி (45) கண்ணாயிரம், பேராவூரணி (46) டி. நயினா பிள்ளை, கந்தங்குடி (47) ஆர். கதிரேசன் செட்டி, திருவாடானை (48) சட்டநாதய்யர், மதுங்கா-

இரண்டாவது பரிசு ரூ. 500/-

78 பேர்களுக்கு—தலைக்கு ரூ. 6-6-6

ஒரு தப்புள்ள விடையனுப்பிய கீழ்க்கண்ட 78 பேர்களுக்கும் இரண்டாவது பரிசுத் தொகை ரூ. 500/-ம் சமமாகப் பங்கிடப்பட்டுத் தலைக்கு ரூ. 6-6-6 வீதம் வழங்கப்பட்டது.

சென்னை (1) எஸ் ஜானகிராம், மவுண்ட்ரோடு (2—3) ஆர். கோவிந்தராஜுலு, பிராட்வே (4) சங்கரலிங்கம், ஜி. டி. (5—7) வெங்கிட்டம்மாள் ஜி. டி. (8—9) அலமேலு அம்மாள் பி. டி. (10) அன்னபூரணி, மயிலை. (11—17) எஸ். பத்ம கிரீசன் (18) பி. ராமாம்ருதம், திருவல்லிக் கேணி (19) கனகசபாபதி (20) எல், பங்கஜவல்லி (21—28) யு, சுகவனம் அய்யர் (29) அமபுஜம் மாள் (30) எ, கே. ராகவேந்திரன் தி. நகர் (31—32) வி. நாராயணய்யர் (33) [illegible] மாள், சைதாப்பேட்டை (34—35) எ. சுப்ப[illegible] யம் (36) ஆர். ஆர். நாதன், தின்னனூர் (37) டி. எத்திராஜு, வேலூர் (38) ரசூல்கான் சாமராஜ பெட் (39) அமினுதீன் சாயபு, காந்தி நகர் (பெங்களூர்) (40) எம். சித்திவிநாயகம் பிள்ளை, பெல்லாரி (41) சபாரெத்தினம் சிதம்பரம் (42) கே. பி. கே. மூர்த்தி உதகமண்டலம். (43—44) வி. ராமமூர்த்தி அய்யர், சாலியமங்கலம் (45) மல்லி கார்ஜுன ராஜு, தஞ்சை (46—53) பி. விஸ்வ நாதன் செட்டியார், திருச்சி (54) குமாரி லலிதா வரகனேரி (55—58) ஆத்மலிங்கம் பிள்ளை தென்னூர் (59) கந்தய்யா, சின்னசேலம் (60—62) என். சூடாமணி, சேலம் (63) அலமேலு, பன்ருட்டி (64) ஸாவித்ரி, பேராவூரணி (65) டி. வி. சேஷப்பிள்ளை, காருகுடி (66) ராமஸாமிப்பத்தர் கண் கொடுத்தவனிதம் (67) டி. நயினு பிள்ளை கந்தங்குடி (68) முகமது இபுராகீம் நாகூர் (69) சி. கிருஷ்ணஸாமி, ஆதம்பாக்கம் (70) வி. கே. பால்டேவிட், ஆலந்தூர் (71—74) ஆர், கதிரேசன் செட்டி, திருவாடானை (75) இ. கல்யாணராமன் நியூடெல்லி. (76) பட்டம் சீனிவாசயங்கார், ஆழி யூர் (78) சட்டநாதய்யர், மதுங்கா.

பார்வதி பகுத்தறிவுப் போட்டி-5

போட்டி நேயர்களின் வேண்டுகோளின்படி இப் போட்டியில் கலந்துகொள்ளும் நேயர்களுக்கு போட்டியின் முடிவு ஜலைமீ 1உ தபால் மூலம் அனுப்பப்படும்.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

மணியார்டர் ரசீதின்றி வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—5



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

அன்று முதல் இன்று வரை
அழியாப் புகழுடன் மகிழ்விப்பது
தூ.பி. சொக்கலால் ராம்
சேட் பீடியே
தந்தி-லால்
வீரவநல்லூர்
தங்கள் அன்பார்ந்த ஆர்டருக்கு
தூ.பி. சொக்கலால் ராம் சேட்
பீடித் தொழிற் சாலை
முக்கூடல் - திருநெல்வேலி ஜில்லா
ப்ரொப்ரைட்டர்:
T.P.S. ஹரிராம் சேட்
BHARAT STUDIO

Regd. No. M. 5541

இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது

P. பானுமதி - B. S. சரோஜா - லலிதா - பத்மினி

ஹொன்னப்பபாகவதர்·காளி N. ரத்னம்·சாமிநாதன் நடித்த

ஆர்கேஸ் பிக்சர்ஸ்

தேவமனோஹரி

BHARAT STUDIO

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்:- மாயா பிலிம்ஸ் மதராஸ்.1

Edited and Published by V. Namasivayam at Bharat Studio, Mount Road, Madras and Printed by P. Radhakrishna Chettiar, at The Royal Printing Works, 11-A. Mount Road. Madras-2.